ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பதினெண்சித்தர்களில்

மகா மருத்துவம் பொருந்திய

தேரையர் வயித்திய காவியம்,

நூறு.

தக்கோலம்,

இராமசாமி நாயுடு அண்டு சன்ஸ்

அவர்களது,

ஸ்ரீ லட்சுமிநாராயண விலாச அச்சுகூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1910

நெ: 18 தொட்டிக்கலை குமரப்பமுதலி தெரு.

உ

சிவமயம்.

தேரையர்சரித்திரம்.

தெய்வீகத் தன்மை பொருந்திய அகஸ்திய முனிவர் தன்னருள் ஞானோபதேசங்களைத் தனக்குத் தக்க சீஷனொருவனுக்குப் போதிக்க வேண்டுமென்றுகருதி யிருந்ததால் அவரொற்ற ஒருநாளில் அக்கருதியை நினைந்துஊமைப்பிள்ளையா யிருந்தால் மெத்த நலமென்றெண்ணிபொதியை விட்டிறங்கிஊருக்குட் பிரவேசமானார் அப்போது அருள்தங்கிய ஔவை யென்பவள் இவர்வருஞ் செய்தி யறிந்து முற்பிறப்பில் இராமதேவ ரென்றும் யாக்கோபு என்றும் பெயர்தங்கிய இருவரையும் அழைத்து அப்பா மைந்தர்களே அகஸ்திய மகாமுனிவர் தன்னுடைய ஞானோபதேசங்களை ஓர்நற்சீஷனுக்குபோதிக்கவேண்டுமென்று நினைத்துவருகின்றார் ஆனதால் அவரிஷ்டப்படி முடிக்க வுபாயதந்திரங்கள் கூறுகிறேன் அதென்னெனில் அவர் ஊமைப் பிள்ளைவேண்டுமென்று விரும்புவதால உங்களிருவரில் மூத்தவனாகிய இராம தேவனென்பவனே உன்னைமந்திரோபதேசத்தால் ஊமையாக்கி வைப்பேன் நீமவுனமுற்றிரு அவர் வந்தழைப்பார் உன்னைக்கொடுத்து விட்டுப் பொன்னைப் பெற்றுக்கொள்ளுகிறேன் நீ அவர்பின்சென்று அவருக்குத் தொண்டு செய்து சகலகலையுமறிந்து சிலகாலங் கழித்து வருகவென்று வரங் கொடுத்தாள் அப்படியே அகஸ்தியரும் உடனே அழைத்துக்கொண்டு சென்றனர் பின்னிருவரும் அவர் சொற்படி பொதிங்கயில் அவர்செய்யும் கிரியைகள் சகலமுமறிந்து இருவரும் தெரியாதவர்போலிருந்தார் இப்படி யிருக்குங்காலத்தில் சங்கப்புலவர்களில் நக்கீரரென்பவருக்கு பத்து வருஷகாலமாய் தலைநோக்காடு கண்டுமெத்தவும்துன்பப் படுகிறதை அவரது சீஷர்நச்சினார்க்கினியார் அகஸ்தியரை யழைத்துக்கொண்டு சங்கத்திற்குச் சென்றனர் இவர்மருந்துப்பையும் கத்திரிக்குறடா சிமிட்டாக்களுடன் அவ்விடஞ்சென்றனர் அச்செய்தி சீஷனாகிய இராமதேவனுந் தெரிந்துகொண்டு அவரும் பின்தொடர்ந்தனர் உடனே அகஸ்தியரும் தலைநோக்காடுடைய நக்கீரருக்குத் தலைகீறிமூளையைப் பற்றிக் கொண்டிருக்கிற தேரை

தேரையர் சரித்திரம்,

சிமிட்டாக்கொண்டு தூக்கப் போனார் அதுமோசம் வருமெண்ணி அப்போது சீஷனாகிய இராமதேவர் கைசாடை காட்டையால்ஓர்பெரியதாம்பாளத்தில்ஜலங்கொண்டுவரச்சொல்லிபக்தவமாய்த்தாம்பாளத்தைக்காண்பிக்கதேரையானது மூளையைவிட்டுத்தண்ணீரில் குதித்தது அப்போது இராமதேவர் குருவுக்குமுந்தினசீஷனானார் இவ்வாபலபுத்திகளை அகஸ்தியர் கண்டுமெத்தவுஞ்சந்தோஷித்து இன்னம் தெரிந்தும்தெரியாத விஷயங்களையும்போதித்தார் உடனேதேரைவைத்தியஞ் செய்ததால் இராமதேவர் என்றபெயரை நீக்க தேரையர் என்று பெயர்கொடுத்தனர் இப்படியிருக்க இவர்இருமாப்பு கொண்டு அனேக சரக்குகளையும் நாகமலை பொன்மலை பித்தளைமலை வெள்ளிமலை கந்தமலைதாளகமலை இப்படியாகக்கொத்த அற்புதங்களை மானிடர் பிழைக்கவென்று உண்டாக்கினார் பின்னும்ஆயிரத்தெட்டு மாற்றுடைய தங்கமலை நிர்மிக்கவேண்டுமென்று நினைத்து அனேகதபோதனர்கள் சித்தர்கள் முனிவர்கள் வாசஞ்செய்யும் படியான நாகலாவரமலையென்று சொல்லப்பட்டமலைமுழுதும் மூலிகைகளினால் சாற்பிழிந்து மலைமுழுதும் பூசி இரட்டைத் துருத்திகொண்டு ஊதத்தொடங்கினார் அந்ததீபாக்கினியானது சித்தர்முனிவர்கட்குஞ் சகிக்கமுடியாமல்அகஸ்தியருக்கு முறையமிட்டனர் என்னையா என்குருவே, தேரையனென்பவனுக்கு தாங்கள் ஞானோபதேசமும்சர்வவித்தைகளும்போதித்ததால்லோகமெல்லாம் சித்தாய்ப்போய்விடும் மலைமேற்சிகரம் வரையில் இவன் மீட்டுந் தீபாக்கினி யானதுநிர்வகிக்கக் கூடாதென்று கூறினார்கள் உடனே அகஸ்தியரும் கோபங்கொண்டு இவரை இரண்டாக்கிழித்தெறிந்து பொதிகைக்குப் போயினர் உடனே இவரது விசுவாசம் பெற்ற இரண்டுசீஷர்க ளங்கிருந்தனர் முன்தேரையரென்பவர் தன் குருவால் தனக்கிடையூறு வருமென்றெண்ணி சஞ்சீவியாகியஉயிர் மூலிகையை அவ்விருவருக்குமருளிச் செய்திருந்தார்உடனே அச்சீஷர்களிருவருக்கும் இருப்பாகியாயிருந்த தேரைய னென்பவரையொன்றாகச்சேர்த்து மூலிகைபிழிந்தனர் அவரும் உயிர்த்தெழுந்தனர் பின்னும்அநேகஅற்புதங்களைலோகத்துமானிடர்களுக்குவிளைவித்தனரென்று பெரும்பாலும் பெரியோர்களால் கேள்வியுற்றோம் மேற்கூரிய இராமதேவர் யாக்கோபு என்பவருடையசரித்திரவரலாறை அவர்கள்செய்த நூலின்முகவுரையில் பார்த்தால் தெரியவரும் இச்சரித்திரத்தை இந்நூல்திருத்திய ஆயுள்வேத பாஷ்கரன் கந்தசாமிமுதலியாரால் கேள்வியுற்ற வரையில் அச்சிடத்துணிந்தனர்.

தேரையர் சரித்திரவரலாறு,

முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை.

பதினெண் சித்தர்களில் மகாமகத்துவம் பொருந்திய.

தேறையரென்பவர்

திருவாய் மலர்ந்தருளிய

பெருநூலாகிய

வயித்திய காவியம்.

௩௫௱.

காப்பு,

அண்டரண்டமாகி நின்றவையர்காப்பு
வானந்தக்கடலிலுள்ள வுமையேகாப்பு
சண்டமெனும்சரஸ்வதியின் தாயேகாப்பு
தனிவேலர்தாள்பாத மடியேன்காப்பு
தண்டரிகமானதிரு குமரவேள்தன்
சற்குருவின்திருமாலு மிடையேகாப்பு
கண்டமெனுந்தேறையன் வயித்தியகோர்வை
கருத்துடனேசாற்றுகிறேன் றெளிந்துபாரே. (க)

பாரேநீநிறைந்தபரா பரனேபோற்றிப்
பாடுகிறேன்வயித்திய காவியத்தை
வாரமுடனுயிரத்து அன்னூறுக்குள்.
வாகானசெந்தூரம் லேகியபற்பம்
காரேநீதயிலமோடு கிருதமெண்ணெய்
கருவானவாக்கிராணக் கலிக்கமாத்திரை
சூரேதான்மெழுகோடு தபதங்கப்போக்கும்
சுளுவாகாசாயனமுஞ் சூட்டினேனே. (உ

(நூலாரம்பம்.)

சுரத்திற்கு குளிகை.

சாப்பாமேகசுரத்துமருந்துகேள்
சேப்பாமிளகுசிறுந்தவுளுந்துடன்
வேப்பாமெருக்கன்விரும்புமபாலாட்டியே
பாப்பான்கெவுரியும்பாங்காகக்கூட்டிடே. (௩).

கூட்டுமெழுகாய்க்குலாவியரைத்துமே
நீட்டுமாத்திரைநிழலிலுலர்த்தியே
காட்டுதேனிற்கலந்துவருத்தவே
பூட்டுமேகசுரமோடிப்போகுமே. (௪)

போகும்பத்தியம்பொன்னாங்கண்ணிக்கீரை
ஆகுங்கத்திரியானமுருங்கையும்
ஏகும்பச்சைப்பயருடன்வுள்ளியும்
பாகுமிஞ்சியின்பச்சடியுண்டிடே. (௫)

சன்னிக்கு மேற்பூசும் தயிலம்,

உண்டிடேசன்னிக்குத்தயிலமொன்று
விண்டிடேதேரையன்சொல்லுறுதிமெய்
அண்டிடுவேப்பெண்ணெய்யரைபடிவீதம்
கண்டிடுங்கலப்பைக்கிழகுகூட்டிடே. (௬)

கூட்டுநாபிக்குலவும்வசம்புடன்
நீட்டும்வெள்ளுள்ளிக்காயம்விராகனாற்
ஆட்டுவோம்மஞ்சான்சதகுப்பை
மூட்டும்வெங்தயமூன்றுவிராகன்சேரே. (௭)

சேர்த்துச்சாதிக்காய்சிறந்தபழச்சாற்றில்
பார்த்துமைபோல்பதமாயரைத்தெடு
நீர்த்துமெண்ணெய்யில்நேராய்க்கலக்கியே
பார்த்துமேகடுப்பத்திலிறக்கிடே. (௮)

இறக்கியெண்ணெயையிசைந்தமேனிற்பூச
முறக்குஞ்சங்கியுமுயன்றவலியிசுப்பு
பிறக்கும்வாதப்பெருங்குடைச்சல்நோயும்
பறக்குமென்றல்லோபாடினேதேறனே. (௯)

தேரன்சொல்மொழிதிசையெட்டுக்குஞ்சரி
கூறுநாவுகிடையாதுசித்தர்க்கு
வேறவாகடம்வேண்டுமோவேந்தர்க்கு
தீறயேக்கித்திரியாதேமாந்தரே. (௰

சூதகக்கட்டுக்கு-உப்பு.

மாந்தரேகேளுமங்கையர்சூதகம்
போந்துடையவேழூட்டுறேனுப்பொன்று
சாந்துகிரந்திச்சாற்றிலுலாட்டியே
மோந்துபில்லையாம்மேவிடத்தட்டிடே. (௧௧)
தட்டியேரவிதாக்குடன்காயவை
எட்டெருவினிலிசைவாய்ப்புடம்போட
கட்டுவுப்புக்கலங்கியேபற்பமாம்
துட்டெடையுப்புத்தேனிலருந்திடே. (௧௨)
அருந்திடவின்னம்அறியவொருபாகம்
செருந்திடுப்பைச்செருப்படைசாற்றினில்
பொருந்துபத்துமேசாமமரைத்திடு
குருந்தபில்லையுங்குடோரிநிறமாமே. (௧௩)
நிறமாம்பில்லையைநிழலினுலர்த்திடு
உறமாய்க்குக்குடவுற்றபுடம்போடு
திறமாய்வெந்துமேதேர்ந்ததவளம்போல்
பறமாய்நீறியேபற்பமுமாகுமே. (௧௪)
ஆகும்பற்பத்தையாவின்நெய்யிற்கொடு
ஏகும்சூதகம்ரத்தம்வெளிப்படும்
நீகும்வாதக்குடைச்சலும்நீங்கிடும்
போகும்பத்தியம்பூணுமுப்பாகாதே. (௧௫)
ஆகாதப்பாஅடவானவெள்ளுள்ளிச்
சாகத்தயிலஞ்சடுதியில்த்தான்வடி
வாகாத்துட்டெடைவாங்கிடுமூன்றுநாள்
பாகாயுப்பிணைப்பார்த்துவருந்திடே. (௧௬)
அருந்துபத்தியமானபருப்பொடு
திருந்துபச்சையரிசிசமனதாய்

பொருந்துமேபுனம்பாதமாய்க்காச்சியே
தெருந்துவைந்துநாள்தோர்ந்துமேயுண்டிடே. (கஎ)

பெரும் பாடுக்குதூர் மருந்து.

உண்டிடும்பெரும்பாடுவந்தோர்கட்கு
பிண்டிடுநாவற்பட்டைபிழிந்துமே
கண்டிடுர்தேவதாரம்விராகனுற்
கொண்டிடுபுளிமோரில்கொடுத்திடே. (கஅ)

கொடுத்திடப்பாகுறையாமல்மூன்றுநாள்
எடுத்திடும்பெரும்பாடுவெங்கேபோச்சு
கடுத்திடுங்காலேக்கடிகையருந்திட
படுத்திடும்பத்தியமுந்தானில்லேயே. (கசூ)

அஷ்டகுன்மத்திற்குஉப்பு.

இல்லேயேவஷ்டக்குன்மவியாதிக்கு
தில்லேயாடுஞ்சிவன்பதஞ்சாட்சியாய்
வெல்லுந்தேரையன்வேந்தற்குரைக்கிரேன்
நல்லஉப்புமேநாழியெடுத்திடே. (உ0)

எடுத்துஉடுப்பையெருமைமோர்தன்னுடன்
வடுத்திடுவரிக்குமட்டிச்சாறெண்பலம்
தொடுத்திடும்வெடியுப்புமேகாற்பலம்
வடுத்திடும்வளையலுப்புநாலதே. (உக)

நர்லதாய்ச்சவுட்டுப்புமேநாற்பலம்
மேலதானிந்துப்புமேவெண்பலம்
கோலமாயிதைகுறித்திடும்பாண்டத்தில்
காலமோருங்கலந்துவடுப்பேற்றே. (உஉ)

ஏற்றியக்கினிறித்தியெடுமர்சாமம்
சாற்றும்ப்பதுசர்க்கரைபோலாகும்
போற்றியயீசனைபொருந்தத்துதித்துமே
ஆற்றிச்சிமிழிலடக்கங்கள்செய்திடே. (உஙு)

செய்துகாலேசிறந்தவுண்தயாதி
எய்துமன்னரீனிதன்னிலே

கொய்துமுப்பைக்கொடுத்திடுவிராகன்கால்
தொய்துமண்டலந்துனிவாயரிந்திடே. (௨௪)

அருந்திடக்கட்டியாம்பல்பொருமலும்
செரிந்திடும்சோகைசெனித்திடுகிரிச்சியும்
கெரிந்திடுங்கவுசைக்கெண்டைவாயுவும்
நெரிந்திடும்குவைக்கட்டியுநீங்குமே. (௨௫)

(நீரடைப்புக்குவாழைக்கிழங்கின்நீர்)

நீங்குமுப்பினல்நீரடைப்புபோகும்
பாங்குங்கதலிப்பரிவாங்கிழங்கையும்
ஒங்கிவெட்டிடவுச்சிதநீர்வரும்
ஆங்குநீரிலரைப்படிதானெடே. (௨௬)

எடுத்திடும்வெடியுப்புவிராகன்கால்
கொடுத்திடும்பத்தியம்பசுமோரன்னம்
தடுத்திடாதேரையன்வாக்குபொய்யாது
அடுத்திடும்நீரடைப்புதானேடுமே. (௨௭)

(அண்டவியாதிக்கு எண்ணெய்)

ஓடும்அண்டவியாதிக்குஎண்ணெய்கேள்
தேடுந்தேரையன்தெளிவாயுரைக்கிறேன்
ஆடுமாஆமணக்கெண்ணெய்படியரை
தாடுமிளகுதக்காளிசேர்த்திடே. (௨௮)

சேர்த்துவெந்தயஞ்சிறந்தபலமொன்று
பார்த்துயெண்ணெயில்பதமாய்க்கலந்துபே
தூர்த்தடுப்பினில்துய்யவெடுத்திடு
ஏர்த்துமேகடுகோடேயிறக்கிடே. (௨௯)

இறக்கிகாலேயிலேந்திழையேகேளும்
மூறைப்படிப்பலமூன்றுநாள்தான்கொடு
கறைக்குமேபுளிக்காட்டாதேயுப்பையும்
சிறைக்குமெண்ணெயைத்தேறனுரைத்தேனே. (௩௰)

உரைக்கும்பத்தியமுண்டிடுவாறுநாள்
சிரைக்குமேயறுசுவைபதார்த்தந்தள்ளு
பரைக்குமேமூநாள்பத்தியந்தான்மூறி
முறைப்படிதேறன்முனிவற்குரைத்தேனே. (௩௧)

(ஒருதலைவியாதிக் கெண்ணெய்)

ஊரத்துமேத்தலைவியாதிப்பிணிநீங்க
கரத்துமெள்ளளெண்ணெய்கணக்குடனுழிதான்
சிறைக்குமாவின்பால்சோரைகாலதாய்
நிறக்குக்கம்பஞ்சோற்றிநீரையுங்கூட்டிடே. (௯௨)

கூட்டுமாதொண்டைக்கோவைத்துளிர்ச்சாறும்
நீட்டுமிளகுநேர்ந்தபெருங்காயம்
போட்டுமெண்ணெயில்பொடித்துக்கலக்கியே
வாட்டடுப்பினில்வைத்துயெரித்திடே. (௯௩)

எரித்துக்காலையிலேழுநாள்ஸ்தானஞ்செய்
தெரித்துமண்டைநோய்தேர்ந்தகண்ணுக்குத்
கரித்துக்காலையில்கணக்காய்முழுகிட
குரித்துவோடும்வியாதிகைகண்டதே. (௯௪)

(ஒருதலைநோய்க்குநசியாக்கிராணம்)

கண்டபோதுகண்டத்தின்வியாதிக்கு
அண்டமேபெருங்காயஞ்சமுத்திரா
பெண்டுமேமுலைப்பாலினுலாட்டியே
உண்டும்நாசியில்வுறையப்பிழிந்திடே. (௯௫)

(பீநசத்திற்குநசியப்போக்கு)

பிழிந்திடும்மின்னம்பெருத்தநசியங்கேள்
கழித்திடுங்காரங்கருதுமெருக்கனும்
விழித்திடுமாதளம்பூகொழுந்துடன்
துழிந்திடுங்குங்குமப்பூவுந்தூக்கிடே. (௯௬)

தூக்குங்கன்னியின்துய்யமுலைப்பாலில்
தாக்குங்கல்வத்தில்தாழவரைத்துமே
பாக்கும்நாசியில்பாங்காய்ப்பிழிந்திட
நீக்கும்பீனசம்நீக்கியேயோடுமே. (௯௭)

(செவி நோய்க்கு எண்ணெய்.)

ஓடுங்காதிலுறைத்தபிணிகட்கு
தேடும்வெள்ளுள்ளிதேர்ந்தமரமஞ்சள்
காடுஞ்சுக்கொடுக்கடியவலம்புரி
நீடுஞ்சீரகம்நத்தையிறைச்சியே. (௯௮)

இரைச்சிமுட்டையிசைந்தமுசுரண்டம்
கரைச்சிமேகருங்கோழியினண்டமும்
நுரைச்சிடும்நண்டிரைச்சிசமனதாய்
முறைச்சிடுங்கள்ளிமுருக்கசாற்சேர்த்திடே. (௩௯)

சேர்த்துமேசாறுசிறக்கவொருநாழி
பார்த்துமேபசும்பால்படிகாலதாய்
நார்த்தும்வேப்பெண்ணெய்நாழிசமனதாய்
கோர்த்துக்கலந்துகொதிக்களரித்திடே. (௪௰)

எரித்திடுமெண்ணெயிசைந்தசெவியினில்
வரித்திடும்பிணிவாகாய்சொரிந்திட்டு
நிரித்திடும்பஞ்சில்நேராய்ப்பொதிந்திட
குரித்தநோயுங்குடியோடிப்போகுமே. (௪௧)

(கண்படலத்திற்கு நேத்திராஞ் சனக்குளிகை.)

போகும்படலம்பூணியேபோவதற்கு
காகுமிளகுகடியதோர்திப்பிலி
ஏகுஞ்சுக்குவிசைத்தமால்தாரமும்
ஆகுஞ்சங்குவதிமதுரங்கூட்டே. (௪௨)

கூட்டுதுத்துங்கொடியபுங்கன்விரை
காட்டுச்சீரகங்கடுகுரோகணியும்
தீட்டும்பன்றியின்தேர்ந்தகொம்புப்பொடி
மாட்டுச்சிலேயுமாமையெடுத்திடே. (௪௩)

எடுத்திடும்புலிஏகநகமுடன்
நடுத்திடும்வெள்ளிநற்சாவல்தன்மலம்
சடுத்திடுமிந்துப்புச்சரியேசபங்
உடுத்திடுங்கல்வத்திலுறவாடுமே. (௪௪)

ஆடுமேநந்திப்பத்திரியாவட்டம்
சூடும்பூச்சாறுசுண்டவரைத்து
கூடுமேமணிக்கயிர்போலுருட்டியே
நீடுமாத்திரைநிழலிலுலர்த்திடே. (௪௫)

உரைத்துதேனிலுரைத்திடப்படலம்போம்
கரைத்துமேகன்னிப்பாலிலுரைத்திடு

விரைத்தநேத்திரம்விழியினிற்பூசிட
திரைத்தப்படலந்தேர்ந்துதானேடுமே. (சசு)

(மாலைக் கண்ணுக்குமை.)

ஓடிமாலையின் கண்ணுக்குகந்தமை
நீடும்நீர்ச்சுழல்நேர்ந்தசாம்பலுடன்
கூடுங்கல்வத்தில்கூட்டுறவாகவே
தேடுமெள்ளெண்மணைய்தேர்ந்தபூண்டுச்சாறே. (சஎ)

சாறும்பத்திரிச்சார்ந்தவெள்ளுள்ளியும்
நீறுமிளகுநேர்ந்தமைபோலாக
ஆறுவேளையந்திசந்திபோட்டிடு
கூறுமேவிளக்கெண்ணெயில்மூழ்கிடே. (சஅ)

முழுகிடமாலைக்கண்ணுமுறிந்திடும்
நழுகிடப்பார்வைநட்சத்திரங்காணும்
கழுகிடப்பார்வைகண்டுருகப்பாயும்
பழுதிடதேறன் பாடிதுண்மையே. (சகூ)

(நேத்திரநீரவடிதலுக்குமை)

உண்மையாகவுரைக்கிறேன்மையொன்று
வண்மையானவரப்பூலாபச்சிலை
கண்மையானக்கடுக்காய்மாசிக்காயும்
தண்மையானதோர்தான்றியுஞ்சேர்த்திடே. (ருய)

சேர்த்திடுகாசுசிறந்ததோர்கட்டியும்
பார்த்திடும்படிப்பாங்காய்விராகனற்
தூர்த்திடும்படித்துய்யவவித்துமே
ஆர்த்திடும்படிஅறையப்பிழிந்திடே. (ருக)

பிழிநதுமேகறண்டியில்புனிதமாய்
செழிந்துசினமாம்சேர்ந்தபொரியதும்
குழிந்தும்காரங்குறிக்கும்விராகன்கால்
சுழிந்துமைபோல்சுறுக்காய்அரைத்தேடே. (ருஉ)

எடுத்துமையைபிநுகண்பொருந்தவே
அடுத்துவைத்துநாளன்பாகப்பூசிடு

தொடுக்கும்புளியன்தேர்ந்தகிஷாயத்தில்
கடுக்குங்கண்ணைகழுவிநீயர்த்திடே. (௫௩)

பார்க்கும்போதுபரவுங்கண்ணீரெங்கே
ஆர்க்கும்போது அடர்தசிவப்பேகும்
பூர்க்கும்பூளைபொருந்தவேயோடிடும்
தீர்க்கும்தேரையன்றெளிந்தமுறையிதே. (௫௪)

(நேத்திராஞ்சம்.)

தொண்ணூற்ருருக்கும்மருந்து.

தேறன்வாக்குதிசையிலும்பொய்யாது
வேறமருந்துவெளியாயுரைக்கிறேன்
கூறுந்துளசிகொடியபுண்ணுக்கிலை
வீறுமேபுளியிலையையெடுத்திடே. (௫௫)

எடுத்திடுங்கோளமிசைத்தகட்டியுடன்
கடுத்திடுந்தூளுகடிகைவிரண்டதாய்
படுத்திடும்பழம்புளியைபிசைந்துமே
தொடுத்திடுஞ்சிலைதுணியுடன்கட்டிடே. (௫௬)

கட்டுமேகன்னிப்பாலினிலூறவை
எட்டுநாள்ரவியெழிலாகக்கரய்ந்தபின்
முட்டுங்கண்ணில்முயன்றவலிக்கிதை
செட்டும்பட்சஞ்சிறக்கப்பிழிந்திடே. (௫௭)

சிறக்கும்வாரஞ்சிறந்தகலைசீர்வார்
முறக்குந்தொண்ணூற்முயன்றவலிநோயும்
இறக்குங்கபாலயிசைந்தசூலைகள்போம்
பறக்குந்தேறன்பகர்வாக்குபொய்யாதே. (௫௮)

(தந்தவியாதிக்குபஞ்சபூஷிதப்பொடி.)

பொய்யாதய்யாபுகலுங்குருமொழு
அய்யாமாந்தர்க்கறைவன்பொடியொன்று
செய்யாராவடம்சிறந்தபிஞ்காய்தனில்
கையதான்றிகடுக்காயுந்தூக்கிடே. (௫௯)

தூக்குமாசக்கடுக்காய்துடிபலம்
நீக்கும்காரநிகழும்காசுக்கட்டி

பாக்கும்பீங்கான் பழரசந்தான்பிழி
காக்குங்கல்வங்கடியவேபோட்டிடே. (சூ0)

போட்டுமேயரைபொருந்தபூஷிதத்தை
ஆட்டுமேஜாமம் அறுபதுசென்றபின்
கூட்டுமேயெடுகுறித்துக்கணேசனை
கூட்டுமேகல்வம்நிழலிலுலர்த்திடே. (சூக)

உலாத்திடும்பொடியுற்றபல்ரோகத்தை
கலர்த்திடும்பொடிகாலேயில்தேய்த்திட
பெலர்த்திடுந்தந்தம்பெரியபல்நோய்களும்
அலர்த்திடாமலலேந்துதானேடுமே. (சூஉ)

பல்புழுவுக்கு.

ஓடும்பல்லிலுறைத்தபுழுநீங்க
சாடும்பல்லுக்குக்கன்னியினூல்வாங்கி
நீடுங்கீழ்க்காயினேர்ந்தநெல்லிவிரை
ஆடுங்காப்புக்கதிகர்தான்கட்டிடே. (சூ௩)

கட்டியேபின்னுங்கனமசியென்றோது
திட்டமாயுருதேர்ந்ததோராயிரம்
சட்டமாய்ச்சொல்லிச்சாற்றுவவன்பேரை
விட்டுவோடும்விரைந்தபுழுக்களே. (சூச)

(வாய்ப்புண்ணுக்கு ரத்கசசிஞ்க யெண்ணெய்.)

விரைந்தவாயினில்வெல்லும்பிணிநேரில்
கரைந்தமாமணக்கெண்ணெய்யறுபலம்
அரைந்தசங்கஞ்சாறதற்குச்சரியிடை
பரைந்தவெள்ளுள்ளிபத்துப்பலம்போடே. (சூ௫)

எடுத்துமஞ்சளெழிலானகஸ்தூரி
கடுத்துநற்சிரகங்கரியசீரகமும்
தொடுத்துமூன்றுந்துவளப்பொடித்துமே
அடுத்துயெண்ணெயிலன்பாகக்காய்ச்சிடே, (சூசூ)

காக்சும்போதுகடியகடுகுறும்
நீச்சுமேனிநெடியபுண்ணிற்பூச
ஆச்சுமூன்றுநாளாற்வேளேதான்கொள்ளு
போச்சுவாய்ப்புண்ணுபொருந்தவேயுண்டிடே. (சூஎ

உண்டிடும்போதுவோடும்பிணிகேளு
அண்டிடுமரையாப்புபிணிநீங்கும்
கண்டிடுமேகங்கருதியவெள்ளையும்
துண்டிடுஞ்சூலைசிறங்குவகைநீங்கு (சுஅ)

நீங்கும்பத்தியநேர்ந்தபத்துநாளாம்
பாங்கும்வெந்நீருபச்சரிசியுண்ணு
ஏங்குமேழாநாளெண்ணெய்கடுகுசேர்
தேங்கும்வாய்ப்புண்ணுதேறன்சொல்லுண்மையே. (சுகூ)

உண்மையாகவுறைக்கிறேன்சூரணம்
தண்மையானதாரம்பரங்கிச்சக்கை
வெண்மையானவெடியுப்புக்கல்லுப்பு
நுண்மையாகநுறுக்கிப்பலமெடே. (எய)

எடுத்திடுமாவினெண்ணெயாமணக்கு
கடுத்திடுமுறைக்கற்றாழைச்சாற்படி
முடித்திடும்படிமூன்றுசாமமெரி
அடித்துமூன்றுநாளாற்வேளையுண்டிடே. (எக)

உண்டிடும்போதுறையுங்கொறுக்குபுண்
அண்டிடுமரையாப்புதடிப்புகள்
கிண்டிடுஞ்சூலைகிரந்திபறங்கியும்
ஓண்டிடாமலுலகில்விட்டோடுமே. (எ௨)

(சகலரணங்களுக்குஞ்சம்பூரணக்களிம்பு.)

ஓடுங்களிம்புவுரைப்பேனுன்சித்தர்க்கு
தேடுமிருதாறுதேர்ந்தகற்பூரமும்
கூடும்வெள்ளிகுலவுகுங்கிலியம்
தாடுலிங்கந்தயவாகச்சேர்திடே. (எ௩)

சேர்த்திடப்பாசிறந்தமாசிக்காயும்
தார்த்துமேகடுதான்றிகாசிக்கட்டி
பார்த்துவோரொடைபாங்காகக்கல்வத்தில்
கோர்த்துமேவெண்ணெய்குலாவியரைத்திடே. (எச

அரைத்திடப்பாவறுபதுசாமந்தான்
நிரைத்துதண்ணீரில்நேராய்மிதக்கவே

கரைத்துத்தண்ணீரில்கசடுகள்தாறை
சிரைத்தசிமிழில்சிறப்பாயெடுத்திடே. (௭௫)

எடுத்திடுமெழிலானகளிம்பதை
கடுத்திடுஞ்சூலைகடியாணங்கட்கு
அடுத்தடும்படியானதோர்மூன்றுநாள்
தொடுத்திடும்படித்தேறனுரைத்தனே. (௭௬)

தேரன்குருமொழிதிசையிலும்பொய்யாது
வேறவாகடம்வேண்டுமோசித்தர்க்கு
கூறநாவுகிடையாதின்னாலுக்கு
திறயேங்கித்திரியாதேசித்தரே. (௭௭)

சித்தர்கோர்வைகள்செப்பினாரனந்தம்
முத்தரானவர்முயன்றதனங்மாம்
ஒத்தசாஸ்திரம்ஓங்கும்பெருநூல்கள்
பத்தர்மாமுனிபகர்ந்ததிதுவாமே, (௭௮)

தீராதவிக்கலுக்கு.

பகரும்விக்கல்பறக்கும்வழிகௌரு
நிகருஞ்சந்தனம்நேருஞ்சாபிராணியும்
தகருமதுரந்தாக்குமகிதூலுடன்
முகருந்தூளாய்முடிந்துஎடுத்திடே. (௭௯)

எடுத்திமபுகையேகவிக்கலுக்கு
பிடுத்திடும்படிமூன்றிருபோழ்தினில்
கெடுத்திடும்விக்கல்கெதிகெட்டுஓடிடும்
வடுத்திங்தேறன்வாக்குபொய்யாதிதே. (௮௰)

ஜன்னிமயக்கபித்தகியாழம்.

பொய்யாதையாபுகலுங்குருமொழி
அய்யாபித்தம்அகலும்படியாக
மெய்யாய்கோஷ்டபவிரும்பும்பற்பாடகம்
துய்யாசீரகந்துடிசேர்பலமெடே. (௮௧)

எடுத்திடுபச்சைஎழிலானநெற்பொறி
தொடுத்திடுவில்வமதொடர்ந்நிலவேம்பு
கடுத்திம்சுக்குகடியநிவிளா
அடுத்திடுமாறுதண்ணீர்படிசேறே. (௮௨)

சேர்த்திடும்நாழிசிறந்தப்படிபால்சேர்
பார்த்திடுஞ்சீனிபகரும்மறுபலம்
கோர்த்திடும்பாண்டங்குலாவிகலக்கியே
யோர்த்திடுதீயில்லெழிலாயிறக்கிடே.　　　　　(அங)

எறக்கும்போதெழிலானகணேசனே
சிறக்கப்போற்றிசிரமணிதாள்பணி
முறக்கமண்டலமுயன்கியாழுயுண்
பறக்கும்ஜன்னிபயந்தோடிப்போகுமே,　　　　　(அச)

பித்தகாசத்துக்கு குக்கிலாதி.

போகுங்காசம்புசலுங்குக்குலாதி
யேகுமாமணக்கெண்ணெயறுபலம்
ஆகும்பொன்னுக்கண்ணிச்சாறிருநாழி
பாகுங்கையாந்தகரைசாற்கூட்டிடே.　　　　　(அரு)

கூட்டும்மாசிக்குலாவுகடுக்காயும்
நாட்டுசீரகம்நவிலுங்கருஞ்சீரகம்
நீட்டுதான்றிசிகழும்லவங்கமும்
கூட்டும்பத்திரிகூறும்வசம்பெடே.　　　　　(அசு)

எடுத்திடும்பட்டைஎநிலாமகரப்பூ
கடுத்திடுஞ்சக்கைகாசிக்கட்டியுடன்
அடுத்திடும்வால்மிளகுகசகசா
தொடுத்திடும்ஜாதிக்காயுடன்தூக்கிடே.　　　　　(அஎ)

தூக்கியொன்றுதுவளவிடித்துமே
தாக்கிபாண்டங்தனியவேரத்திடு
நோக்கும்நாளிருபோதொருமண்டலம்
தேக்கும்பித்தகாசந்தெறித்தோடுமே.　　　　　(அஅ)

ஓடும்பத்தியமுறையும்பொன்னுங்கண்ணி
சாடுந்துவரைசாற்றுமுருங்கிலே
நீடும்பிஞ்சிங்கலும்புளியாரை
கூடும்பத்தியக்குமையாமலுண்டிடே.　　　　　(அஅ)

(கபாலவலி ஜன்னிக்கி ரத்தினகோடரித் தயிலம்)

உண்டுங்கபாலவலிபோவதற்
கண்டிடுங்கத்திரிவேர்சமன்

அண்டிடுமெண்ணெய்யாவின்படிபால்சேர்
துண்டிடுமுசுக்கைச்சாற்படியெடே. (௬௰)

எடுத்திடும்நொச்சிமெழிலாமாவிலிங்கை
அடுத்திடுமாலின்பட்டையிடித்துமே
தொடுத்திடுமெண்ணெய்தோன்றகலக்கிடு
விடுத்திடுங்காயம்விராகன் சரிசேரே. (௬௧)

சேர்த்திடுங்குப்பைசிறந்தவசம்புள்ளி
கார்த்திடுமோமம்கடியசந்நராஷ்டம்
தூர்த்திடுகோஷ்டந்துடியாய்ப்பலமெடு
கார்த்திடுமெண்ணெய்முறைப்படிக்காய்ச்சிடே. (௬௨)

காய்ச்சுமெண்ணெய்கருதியமண்டலம்
மூச்சுடாமல்முழுகுமுறைவிடா
தோச்சுமேகபாலவலிசன்னியும்
போச்சுதென்றுபுகன்றனர்தேறனே. (௬௩)

சன்னி - ௰௩ - க்கும் - எண்ணெய்.

தேறன்சொல்மொழிதிசையிலும்பொய்யாது
வேறயெண்ணெய்விளம்புவேன்சன்னிக்கி
கூறவேம்பினெய்குறித்திடும்பாண்டத்தில்
தூறமயிற்பீலித்துடியாய்நறுக்கிடே. (௬௪)

நறுக்கியெண்ணெய்நழுகாமல்த்தான்போடு
குறுக்குஞ்சுக்குடன்குறித்திடுஞ்சாம்பிராணி
முறுக்குங்காலமுதிர்ந்ததிப்பிலியும்
வறுக்குவோமம்வகையாக்கிராம்பெடே. (௬௫)

எடுத்திடுமெழிலானமரத்தையும்
தொடுத்திடுங்குப்பைதொடர்ந்தமிளகுடன்
சடுத்திடும்ரசகற்பூரஞ்சமனெடை
பொடுத்திடுந்தேசாவரம்பொடித்திடே. (௬௬)

பொடித்துயெண்ணெய்பொருந்தபுகட்டியே
நடித்துமேபதம்நன்றுயிறக்கியே
படித்துப்பூசைபகர்ந்துகணேசற்கு
முடித்துமண்டலமுறைப்படியுரைத்தேனே. (௬௭)

கசகசாலேகியம்

உரைக்கும்லேகியமிதுமுறை
கரைக்கும்வாலுமிளகுகசகசா
திரைக்குநன்றாரிதேர்ந்ததண்ணிமிட்டான்
முரைக்கக்சூரணமுற்றும்பொடிசெய்யே. (சூஅ)

செய்துசர்க்கரைதெளித்திடும்பாகினில்
எய்துஞ்சூரணமெழிலாகத்தூவியே
பெய்துநெய்யைப்பிசகாமற்கிண்டிடு
கொய்துபாகங்குறுகவெறக்கிடே. (சூகூ)

எறக்கிமெல்லவெழிலாய்க்கணேசனை
சிறக்கப்போற்றிசிறப்பாயிருவேளை
உறக்கமண்டலமுற்றுமருந்திட
பிறக்குவியாதிபோகும்வகைசொல்வேன். (ள)

சொல்லுமீளைசயசகரோகபோய்
வெல்லுந்தாலுவிரைந்தசூடுகள்போம்
அல்லுந்தாதுவதிவிர்த்தியுமாய்க்
கல்லுபோலமேனிக்கடுகவிறுகுமே. (ளக)

(சோகை காமாலே வீக்கத்திற்கு கியாழம்.)

இறுகுஞ்சோகையிசைந்தகாமாலேக்கு
குறுகும்நெல்லிகுறித்திடுமுள்ளியும்
அறுகும்வீழிவேரானவசனும்
நிறுகுங்கையான்சேர்த்ததொட்டிவேறே. (ளஉ)

வேறுடன்சிறுபூனேவேறினெடு
தூறுடன்சம்புடையதுளிருடன்
நாறுடன்சிறுகீரைநெரிஞ்சின்வேர்
ஊறுடன்வாகைவூஞ்சல்பட்டைதூக்கே. (ளந)

தூக்குஞ்சரக்குத்துய்யவொருபலம்
தாக்குங்கடுக்காய்தான்றிரோகணியும்
சீக்குஞ்சீரம்சிறந்தகாட்டுச்சீரகம்
பாக்குந்திப்பிலிபகரும்விரானறே. (ளச)

ஆறுடனிவையறியவிடித்துமே
கூறுபாண்டங்குலாவிகலமிட்டு
நீறுமெட்டொன்றாய்நோராய்க்குறுக்கியே
பாறுமேபதம்பாங்காகக்காய்ச்சிடே. (௱௫)

காய்ச்சியாறுநாள்கடுகவருந்திடு
போச்சுபத்தியம்பொருந்துமுப்பாகாது
நீச்சுசோகைநிலும்நீர்க்கோர்வையுய்
மூச்சிடாமல்முடுகியேயோடுமே. (௱௬)

பித்தவெடிப்புக்கு.

ஓடும்பித்தவெடிப்புவந்தோர்கட்கு
நாடுமருதுநவிலுந்துலுளிர்தனை
நீடுமாவின்நன்னேர்ந்தபாலினிலுண்
ஓடும்பித்தமுயன்றேடிப்போகுமே, (௱௭)

நீரிலுதிரம் கண்டால்.

போகும்நீரில்பொங்குமுதிரங்கண்டால்
ஏகும்பச்சையெழிலாமரிசியை
வாகும்விராலிவன்மூலிதன்னிலே
பாகுமூன்றுநாள்பாங்காகவுண்டிடே (௱௮)

உண்டபோதுவுறையுமிரத்தமும்
அண்டிடாமலவனிவிட்டோடுடும்
தொண்டாரனதொகுப்புள்ளமாந்தற்கு
கண்டுதேறையன்கடியவுரைத்தே (௱௯)

முழங்கால் வாதப்பிடிப்புக்கு

உரைக்கும்வாதமுழங்கால்வியாதிக்கு
திரைக்கும்வீழியிதேர்ந்தபுண்ணாக்கிலே
கரைக்கும்மாவாரைகடியவெள்ளுள்ளியும்
விரைக்குமாமணக்கெண்ணெய்விகூட்டிடே, (௱௰)

கூட்டுந்தீயில்கொதிக்களறக்கிய
தீட்டுவாதந்திமிர்முழங்கால்கட்கு
வீட்டிடாமலேவேதிட்டுகட்டிட
மீட்டுமேமுழங்கால்வாதமோடுமே (௱௰௧)

கிராதரணங்கட்குப் புகை.

ஓடும்ரணங்களூற்றபிணிகட்கு
நீடுங்கொழுஞ்சிநேர்ந்தபட்டாவாரை
பாடுமோரிலேப்பாகுடனூறவை
சூடும்லிங்கமுஞ்சுங்கானில்பூட்டிடே. (௱௰௨)

பூட்டுஞ்சுங்கான்புகைதுளிதம்பெற
நீட்டும்வாசியைநிறுத்திட்டடக்கியே
மூட்டுஞ்சுவாசமுடிக்கிப்பிடித்திட
தீட்டுமேகரணந்தெறித்தேங்குமே. (௱௰௩)

தேங்கும்பத்தியந்தெளிந்தபாலுண்டிடு
ஆங்குமாறுநாளன்னம்பருப்போடுண்
நீங்குஞ்சூலைநெருங்குமரையாப்பு
வாங்குங்கண்ணுவலிபறந்தோடுமே, (௱௰௪)

ஓடும்லிங்கமுறுதிபிளவையாம்
நீடுமேகண்டம்நேரும்விற்புருதி
கூடுங்கண்ணேசைகுறிக்குங்கரப்பனும்
வாடும்பீனிசம்வரைந்தோடிப்போகுமே. (௱௰௫)

வாயுவுக்குக் கியாழம்.

போகும்வாய்வுக்குபுகலுங்கியாழங்கேள்
ஆகும்சுக்குஅடர்ந்தகொடிவேலி
நீகும்பரங்கிநேர்ந்தபட்டையுடன்
போகும்பிரம்பின்பொருந்துங்கிழங்கெடே. (௱௰௬)

எடுத்துமேசமனெழிலாபிடித்துமே
தொடுத்துசலந்தொடர்ந்தபடிநாலு
கடுத்துதீயில்கடுகளறக்கியே
அடுத்துவாறுநாளன்பாகவுண்டிடே. (௱௰௭)

உண்டபோதுமுறுதியாமேகம்போம்
திண்டுமேவாதந்தீராப்பிணியறும்
கண்டுபத்தியக்கத்திரிக்காயுண்ணு
பண்டுவாயுபறந்தோடிப்போமே. (௱௰௮)

சகல கிரந்திக்கு சிகிட்சாசார எண்ணெய்.

ஏகுங்கிரந்திஎழிலாம்பரங்கிக்கு
பாகும்பூசினிபாங்காம்படிச்சாறு
ஆகும்கற்றாழைப்பனகுமுழிவேர்
நீகும்கையான்சாற்நேராகத்தூக்கிடே. (௱௰௯)

தூக்கும்வல்லாரைதுடியானவில்வமும்
தாக்கும்வீழியின்தாங்குமாதொண்டையும்
காக்குங்கொடுப்பைகடியநீர்ப்பூலாவும்
பாக்கும்பாச்சானைபாங்காய்நிறுத்திடே. (௱௨௰)

நிறுத்தியேதென்னைநேர்ந்தபொரிபாளை
கறுத்திடும்யானைகடியநெருஞ்சியும்
தறுத்திடுந்தக்காளியிலைச்சாற்நாழி
மறுத்திடுமறுகன்வேருமாட்டிடே. (௱௨௧)

மாட்டிச்சாறுமதிப்பாய்ப்பிழிந்துமே
கூட்டும்பாண்டங்குலாவிகலக்கியே
நீட்டித்தீயினில்நேராயெறித்துமே
சூட்டிக்கியாழம்சுருக்காயெறக்கிடே. (௱௨௨)

எறக்கியாமணக்கெண்ணெயிருநாழி
உறக்கிக்காடியுகந்தபசுபாலும்
சிறக்கச்சாறுசிறந்தயிளநீரும்
கறக்கவேருங்கணக்காயெடுத்திடே. (௱௨௩)

எடுத்திடப்பாயெழிலாநிலப்பனை
அடுத்திடும்சுவகெந்தியாற்பலம்
கடுத்திடுங்கருவானசீரீர்பலம்
முடுத்திடுநிலக்குமிழிவேர்சேர்த்திடே. (௱௨௪)

சேர்த்துதுத்தியின்சிறந்தசித்திரமூலம்
பார்த்துப்பூமிபகருஞ்சர்க்கரையும்
நீர்த்துசாதிநெருங்குபத்திரியும்
கோர்த்துமதுரங்குறிப்பாய்நிறுத்திடே. (௱௨௫)

நிறுத்துமாஞ்சில்நெடியலவங்கமும்
பொறித்துமேலம்பொருந்தியசோம்புடன்

திறத்துந்திரிபலைதிரிகடுவெந்தியம்
கறித்துசீரமுங்கஸ்தூரிகூட்டிடே. (௱௨௬)

கூட்டும்வாலுகுலவுங்கசகசா
நீட்டுமிளகுநேர்ந்தகடுக்காயும்
தீட்டுதாளிசந்தேர்ந்தகார்போகமும்
காட்டுச்சீரகங்கடுசீனிதூக்கிடே. (௱௨௭)

தூக்குமேமுத்தக்காசுதுடிபலம்
தாக்குங்கோரைத்தனிலவங்கப்பட்டை
பாக்குமேபசும்பாலிருநாழியாய்
போக்கிலாமற்பொதிந்தடுப்பேற்றிடே. (௱௨௮)

ஏற்றிமெழுகுவெண்ணெய்பதத்தினில்
காற்றிலாமல்கடுந்தீயில்தானெறி
போற்றிவீசனைபொருந்தவேதாள்பணி
ஆற்றிகரண்டியன்பாகக்கொண்டிடே. (௱௨௯)

கொண்டபோதுமேகூறியபத்தியம்
கண்டபதார்த்தங்காரிழையாகுங்காண்
அண்டகுலைகளறையுந்தடிபுண்கள்
துண்டமேகந்துடித்தோடிப்போகுமே. (௱௩௰)

போகுங்கிரந்திபொருந்தும்புள்ளிமேகம்
ஏகுஞ்சிறங்குயெழிலாந்தடிப்புகள்
நீங்கும்வாய்ப்புண்நெருங்கியரோகமும்
போகும்புண்புரைபொருந்தாமலோடுமே. (௱௩௧)

ஓடுமேகமுறுதிபிணிநீங்க
நாடுமாமணக்கெண்ணெயிருநாழி
நீடுமிளநீர்நேர்ந்தபசும்பாலும்
கூடும்பொன்னாங்குமரிச்சாற்சேர்த்திடே. (௱௩௨)

சேர்த்துவாதொண்டைசிறந்தவில்வயிலை
கார்த்துவறுகன்கள்ளியுடப்பட்டை
நீர்த்துப்பூண்டுடன்நெருக்கும்பெருங்காயம்
பார்த்துசமனெடைப்பாங்காகத்தூக்கிடே. (௱௩௩)

தூக்குஞ்சீரகந்துடியானவெந்தயம்
தாக்குங்கிராம்புதனியானயேலமும்
காக்குஞ்சாதிக்காய்தடியகொத்தமல்லி
பூர்க்கும்நாகப்பூபொருந்துஞ்சீனமெடே. (௱௰௪)

எடுத்துக்கல்வமெழிலாய்ப்பொடித்துமே
அடுத்துச்சீனியறுபலஞ்சேர்த்துமே
தொடுத்துப்பாகமாய்துவளவிரக்கியே
முடுத்துக்கணேசனைமுன்னின்றுபோற்றிடே. (௱௰௫)

போற்றுமண்டலம்பொருந்துமெண்ணெய்யுண்ணு
தோற்றுமேகந்தொடராதொருநாளும்
காற்றுமேனிதான்கல்போலிறுகிடும்
தூற்றும்வாய்ப்புண்ணுதூறியேயோடுமே. (௱௰௬)

எலி விஷத்துக்கு சிகிட்சை.

ஓடுமேபதினெட்டுஎலிகடி
காடுமேகரும்பூனைமலைத்தைதான்
நீடுங்கழஞ்சிநேர்ந்தளவதாய்
கூடுங்கருப்பன்கட்டியிலுண்டிடே. (௱௰௭)

உண்டபோதுமுறுதியாம்பத்தியம்
கண்டவாறுநாள்கடியவுப்புமாகா
கொண்டவேழாநாள்கூறுந்தலைமுழு
விண்டபத்தியம்விட்டுவருந்திடே. (௱௰௮

நாய். நரி. கடிக்கு மருந்து.

அருந்தும்போது அலறிவிஷமோடும்
திருந்தும்நாய்நரிதீராவிஷங்கட்கு
பொருந்துமருந்துபூட்டுறேன்மாந்தற்கு
குருந்துந்தக்காளிகூறுமருந்திடே. (௱௰௯)

எடுத்துமூன்றுநாளெழிலாயருந்திட
கடுத்துமேவருங்கடியவிஷங்களும்
அடுத்துமேவுடலவனிவிட்டோடிடும்
தொடுத்துபத்தியந்தோன்றுமுப்பாகாதே. (௱௨௰)

ஆகாதாறுநாளன்புடன்பத்தியம்
சாகாத்தயிலஞ்சடுதியில்தான்முழு
போகாவிஷமும்பொருந்தாமலோடிடும்
வாகாத்தேரையன்வலுவாயுரைத்ததே. (௧௨௧)

பூனைகடிக்கு சஞ்சீவி மூலிகை.

உரைத்துமேபூனையுற்றவிஷம்நீங்க
கரைத்துஎட்டியின்காயின்பழத்தையும
பரைத்துமேபசும்பாலிலரைத்துமே
திரைத்துமூன்றுநாள்திரமாய்க்குடித்திடே. (கசஉ)

வண்டுகடிக்கு மருந்து.

குடித்தபோதுமேகூறும்விஷமறும்
கடித்தவண்டுகடிக்குமருந்துகேள்
நடித்தவெள்ளாட்டுநாழிபால்தானெடு
வடித்தமோரினில்வாகாய்கொடுத்திடே. (கசங)

கொடுத்தபோதுமேகூறும்விஷமறும்
கடித்தவண்டுகடிவிஷந்தாணறும்
தொடுத்தசில்விஷம்தோன்றுதொருநாளும்
வடுத்ததேரையன்வாக்குபொய்யாதிதே. (கசச)

இதுவுமது.

பொய்யாதையாபுங்கலுகுருமொழி
அய்யாமருந்தறைவேனொருமுறை
மெய்யாய்ரசங்கத்தின்மேவும்பதங்கத்தை
துய்யாமூன்றுநாள்துடியாய்வருந்திட, (கச ரு

பூரான் செய்யாண் கடிக்கு.

அருந்துபத்தியமாகாபுளிபுகை
பொருந்துமேபூரான்புகலுஞ்செய்யானுக்கு
குருந்துமெருக்கன்கொடியவசம்புடன்
வருந்துநாய்மலம்வாகாகப்பூட்டிடே. (கசசா)

பூட்டியொன்றாய்ப்புகலுங்கலுவத்தில்
மாட்டிரேகித்துமாத்திரைசெய்திடு
தீட்டியாறுநாள்திரமாயுண்டிடு
வாட்டிபூரான்வலிவிஷம்நீங்குமே. (கசஎ)

பெருச்சாளி கடிக்கு.

நீங்குமேபெருச்சாளிவிஷங்கட்கு
தாங்குங்கொல்லன்தனிப்பட்டைத்தானிடி
பாங்கும்வெண்ணெயில்பாக்களவுண்டிடு
வாங்குமேவிஷம்வலிபறந்தோடுமே. (கசஅ)

பெருச்சாளிகடிக்கு ஆக்கிராணப்புகை.

ஓடும்நாசியிலுற்றவாக்கிராணஞ்செய்
தேடுமயிற்பீலிதெளியப்புகைபிடி
காடுறையுங்கடிவிலசுந்தன்வலி
வீடுவிட்டுவெளிப்புறமேகுமே. (கசகூ)

தேள் விஷந்தீர சஞ்சீவி மூலிகை.

ஏருந்தேள்விஷமெழிலுடன்தீர்வதற்
காகும்பெரியகருதுநங்கைவேரை
பாகும்நீரினில்பாக்காயுரைத்துமே
ஆகுமட்டிப்பாலன்பாய்ப்புகைகொடே. (கருய)

கொடுத்திடவிஷங்குடியேகிப்போய்விடும்
தடுத்துநசியந்தாக்குகவிக்கமும்
அடுத்துமூன்றுநாளன்பாகத்தான்காடு
கடுத்தவிஷங்கள்கழன்றோடிப்போகுமே. (கருக)

போகும்பத்தியம்பொன்னுங்கண்ணிக்கீரை
ஆகுமுருங்கையானபருப்புனெய்
ஊகும்வெள்ளாட்டிறச்சியுப்புக்கண்டம்
பாகும்வெல்லமும்பாங்காகத்தள்ளிடே. (கருஉ)

சிறுபாம்புக்கடிக்கு-மருந்து

தள்ளுமேசிறுபாம்புகடிகட்கு
விள்ளும்குறிஞ்சுவேரின்சமூலமாம்
கொள்ளும்வென்னீர்குலாவியரைத்துமே
அள்ளுமூன்றுநாளந்திசந்தியுண்ணே (கருங)

உண்ணும்போதிடிலூதுகடிபாம்பு
வெண்ணுமேயுடல்விட்டுமேநீங்கிடும்
உண்ணும்பத்தியமுற்றபுளியாகா
எண்ணுதேரையனெழிலாயுரைத்ததே (கருச)

குஷ்டம் கஅ-க்கு மருந்து

உரைத்தக்குஷ்டமுடலைவிட்டேகுதற்கு
கரைத்தமருந்துகருதியுரைப்பேன்யான்
தரைத்தவலரித்தைலமிறக்கியே
பரைத்தபாணில்பாங்காயருந்திட (கடுரு)

அருந்திடப்பாஅறுபதுநாள்முறை
பொருந்தும்பத்தியம்பொற்றிப்பிளியாகா
திருந்துமுழுகித்தீரப்புளியுண்ணு
வருந்தும்குஷ்டம்வரைத்தோடிப்போகுமே (கடுசு)

மருந்தீட்டுக்கு சிகிட்சை

போகுமாந்தர்பொருந்துமருந்திடு
ஆகுந்தேங்காய்ப்பாலன்னமுடனுண்ண
வேகுமருந்துவேகமுடலைவிட்
டேகுமென்றுதெளிந்தனர்சித்தரே (கடுஎ)

இது உமது

சித்தர்சொல்மொழிதிசையிலும்பொய்யாது
ஒத்தமுருங்கையோங்கியேசார்பிழி
கத்தசர்க்கரைக்கலந்துகுடித்திடில்
வைத்தமருந்துவாகாய்முறியும் (கடுஅ)

கெற்பநாசனமருந்து

முறியுங்கெற்பம்முறிகெட்டுவோடுதற்
கறியுநீலிவேர்காடியில்தானரை
அறியுங்கெற்பம்மழிந்துமுடலைவிட்
டெறியும்பார்தனில்சேரவிழுமே (கடுகூ)

விழுந்ததுவிலாவுநரம்புநோம்
அழுந்தபூமியிலாறிவளர்த்திடும்
கொழுந்துபூநீரைக்குலாவியெடுத்துமே
மூழுநீரினில்மூன்றுநாளுண்டிடே (கசூய)

உண்டபோதுமுறுதிபத்தியங்கேள்
கண்டுமேபொரிகருப்புக்கட்டியுடன்
அண்டக்காய்ந்தளவாகவேயுண்டிடில்
திண்டுகெற்பநோய்தெறிந்துதானோடுமே (கசூக)

விதவையைக்கூட பிள்ளையில்லாதிருக்க

ஓடுமெங்கையுருதியாய்சேர்வதற்
காடுமேதலைக்கன்னிமுழுகையில்
கூடுமேபுணர்ந்தார்குழவனில்லை
நீடுமேவிதமகினைவாயறிந்திட (௧௬௨)

மூலரோகத்திற்குச் சூரணம்

அறிந்துமூலமறியேயோடுதற்
கறிந்துதூவளைகரிசமூலமும்
தெறிந்துமொசுகன்தேர்ந்தகருணையும்
குறிந்துவறுகன்கூடப்பலனெடே (௧௬௩)

எடுத்துநீர்ப்பூண்டெழிலாங்கிழங்கையும்
விறித்துவிரலிலொன்றுய்ப்பொடிசெய்து
கொடுத்துதேனிலேகுன்றியளவுண்ண
கடுத்துமூலங்கதறியேங்குமே (௧௬௪)

அரையாப்பு கிரந்திக்கு எண்ணை

ஏங்குமெண்ணயெழிலாமரையாப்புக்
காங்குங்கோடுக்கருநொச்சிவீழியும்
பாங்குகுப்பிபகருஞ்சிறுகின்னி
பூங்குபூவரசன்பட்டைசேர்த்திடே (௧௬௫)

சேர்த்திடுமேசிறந்தகிரந்தியும்
கோர்த்தபூண்டுகுறிப்டாயெடுத்திடு
பார்த்துமாமணக்கெண்ணெய்படிநாழி
நீர்த்துவெண்ணெய்திறமாயளந்திடே (௧௬௬)

அளந்துதீயினிலன்பாயெரித்துமே
வளந்துமெழுகுவகயாப்பதமுடன்
தளந்துவீசனைதாளடிதான்பணி
களந்துமண்டலங்கால்மண்டலங்கொள்ளே (௧௬௭)

கொள்ளும்போதுகொடிதானசூலைபோம்
துள்ளுமரோகந்துடிப்புடனேகுங்காண்
பள்ளுமேகண்டமாலைபிணிநீங்கும்
தெள்ளுமாமுனிதெளியவுரைத்ததே (௧௬௮)

(ஸ்ரீ வசியம்.

உரைத்தமங்கையருறவுபிரியாமல்
கரைத்தமருந்துகாரிமைசொல்லுவேன்
விரைத்தமேசுழல்மேவுமனோசிலை
நிரைத்தரோசனைதீரப்பலமெடே. (௧௬௯)

எடுத்துப்பட்டுயெழிலானபூச்சிவை
அடுத்துநாகமழகாம்புனுகுடன்
தொடுத்துமேகருங்கோழியின்பிச்சுடன்
விடுத்துநீரினில்விட்டுஅரைத்திடே. (௧௭௰)

(அனுபானம்.)

அரைத்துக்குன்றிபோலானமாத்திரையை
திரைத்தவெள்ளிலைதேர்ந்தசுன்னத்திலும்
உரைத்தப்பாலும்பழம்பலவஸ்திலும்
நிரைத்தப்பாமல்நெறியுடன்தான்கொடே. (௧௭௧)

கொடுத்தபோதுகுமரிப்பெண்கன்னியும்
அடுத்தமூன்றுநாளன்புடனேகுவாள்
படுத்தபடுக்கைபாவைபிரியாள்காண்
முடுத்தப்பாமல்முறைப்படிசெய்திடே. (௧௭௨)

(ஈளை சயத்திற்கு மருந்து.)

செய்யுமீளைசயகாசரோகத்திற்
குய்யுமருந்துகுறிப்பாயுரைக்கிறேன்
நையும்பரங்கிப்பட்டையெடுத்துமே.
துய்யப்பாலினில்துவளசுத்திசெய்ய. (௧௭௩.)

செய்துபட்டைசிறப்பாயொருபலம்
கொய்துமேனிக்குறிப்பாயிருபலம்
தொய்துநாகப்பூதேரன்றவறுபலம்
உய்துகோஷ்டமுமுற்றப்பலமெடே. (௧௭௪)

எடுத்துமதுரமெழிலானலவங்கமும்
அடுத்துபத்திரியானகிராம்புடன்
தொடுத்துசாதிக்காதுய்யபலமெடு
தடுத்திடாமலேதான்றியுஞ்சேர்த்திடே. (௧௭௫)

சேர்த்திடப்பாசிறந்தபற்பாடகம்
கோர்த்துரோசனைகுலாவுவிளாம்பிசின்
வார்த்துவோமம்வசம்புடன்வெள்ளுள்ளி
பார்த்துப்பதமாய்பாங்காயிடித்திடே. (௧௭௬)

இடித்துச்சூரணமெழிலாயெடுத்துமே
வடித்துசர்க்கரைவாகாய்கலந்துமே
மடித்துமண்டலமதிப்பாயருந்திட
துடித்துக்காசந்துடித்தோடிப்போகுமே. (௧௭௭)

சூலைபதினெட்டுக்கு மருந்து.

போகுஞ்சூலைபொருந்தும்பதினெட்டுக்
காகுஞ்சங்கனின்கருதியவேரெடுத்
தாகுங்காடியில்தனியவரைத்துமே
வாகுமண்டலம்வருந்தியேயுண்டிடே. (௧௭௮)
உண்டபோதுவுறையும்பத்தியங்கேள்
அண்டவாயுவபானனிறுகலும்
கெண்டைவாதங்கெடியானசூலையும்
ஒண்டிடாமலுடலைவிட்டோடுமே. (௧௭௯)

(கற்பஎண்ணெய்.)

ஓடுங்கற்பமுறையுமுறுதிகேள்
நாடும்விழியினத்தையிலைச்சூரி
காடுந்தைவேளைகருதுநிலவாகை
ப்பாடும்பிரமிபாங்காங்கிரந்தையே. (௧௮௰)

கிரந்தைநாரிகெடியானபாலுடன்
கரந்தைபுன்னைக்கஸ்தூரிமருந்துடன்
கிரந்தைவெள்ளுள்ளிசேர்ந்தவசம்புசேர்
மரந்தகடுகுமாசக்காய்தூக்கிடே. (௧௮௧)

தூக்குஞ்சுக்குத்துடியாமொருபலம்
தாக்குந்திரிபலைநாளிசமறுபலம்
பூர்க்குங்காரம்புடமிட்டிருபலம்
கார்க்குமேடையைகடுகளெடுத்திடே. (௧௮௨)

எடுத்திடப்பாயெழிலாமணக்கெண்ணெய்
கொடுத்துஎண்ணெயில்குறிப்பாய்க்கலக்கியே

அடுத்துவிசனையன்பாகப்போற்றியே
கெடுத்திடாமல்கிளறிஎறக்கிடே. (௧௮௩)

எறக்கிமாதவிடைகாலந்தன்னிலே
முறப்படிநிறைமூன்றுநாள்கொண்டிட
திறக்கமாகவேதெளிந்திடுங்கற்பமும்
சிறக்கவேமூாநாள்தெரிந்துதலைவாரே. (௧௮௪)

(தூவனை)

வார்த்துதுவலைவாகாகப்பூசிட
கோர்த்துக்கஸ்தூரிகூழியமஞ்சனை
பார்த்துமேசலம்பதமாயரைத்துமே
நீர்த்துமேனியில்திறமாகப்பூசிடே. (௧௮௫)

(புகை)

பூசியேபுகைபொருந்தவேதான்பிடி
ஆசியேசலமப்பாசிரசில்வார்
கூசிடாமல்குழித்திடுமகிற்புகை
மாசிடாமல்மதிப்பாகக்காட்டிடே. (௧௮௬)

இருமலுக்கு லேகியம்.

காட்டுலேகியங்கடியவிருமலும்
கூட்டுஞ்சாறுகுறிப்பாங்காணிச்சாறு
நீட்டுஞ்சங்கஞ்சாற்நேர்ந்தநறுநெய்யும்
பூட்டுந்தேனுடன்புதுகலசஞ்சேரே. (௧௮௭)

சேருசுக்குச்சிறக்கவறுபலம்
தேருவசம்புதிறமாயிருபலம்
கூருதிப்பிலிகுழித்திடுமுப்பலம்
நீருமிளகுநேராய்ப்பலமெடே. (௧௮௮)

எடுத்திடுபலமெழிலாய்கடுக்காயும்
தொடுத்திடும்பொரிதோன்றுசித்தரத்தை
முடுத்திடும்படிமுற்றிலுந்தூளதாய்
வடுத்திடுநெய்யில்வாகாகக்கிண்டிடே. (௧௮௯)

கிண்டமெழுகுகெடியாம்பதமுடன்
அண்டிநெல்லியளவுப்பிரமாணம்

கண்டுமண்டலங்கணக்காயருந்திடில்
மிண்டுயிருமல்மிரண்டோடிப்போகுமே. (௧௯௰)

போகும்பத்தியங்பொன்னாங்கண்ணியாகும்
ஆகுங்கத்திரியானவழுதலை
வாகுபச்சைப்பயறுவல்லாரையும்
பாகுவெல்லமும்பச்சடிதள்ளிடே. (௧௯௧)

சூலைவாயு மேகத்திற்குத் தயிலம்.

தள்ளுசூலைதயிலமுரைக்கிறேன்
விள்ளுமேகொடிவேலிப்பருத்தியும்
எள்ளுமாவின்றனிசைந்தசங்கம்வேரும்
கொள்ளுக்காவேளைகொடியநாயகஞ்சேரே. (௧௯௨)

சேர்த்துநாழிநீர்சிறக்கவேயெட்டொன்றாய்
பார்த்துக்குறுக்கிப்பதமாயிறக்கியே
நேர்த்துஎள்ளெண்ணெய்நோய்க்கலக்கியே
ஆர்த்துச்சரக்குஅளவாயெடுத்திடே. (௧௯௩)

எடுத்துமிளகுயெழிலாயொருபலம்
தொடுத்துச்சீரந்துடியாமிருபலம்
வடுத்துவாலுமிளகுவறுபலம்
சொடுத்துக்கோஷ்டங்குறிப்பாகத்தூக்கிடே. (௧௯௪)

தூக்கிச்சூரணமதுவளப்பொடித்துமே
தாக்கியெண்ணெயில்தயவாய்க்கலந்துமே
போக்கிலாடல்பொருந்தவிடித்துமே
நீக்குமண்டலம்நினைவாய்முழுகிடே. (௧௯௫)

ஒழுகும்போதுமுறியுஞ்சூலைநோவு
அழகுங்கிரந்திவாராச்சிலந்திபோம்
ஒழுகும்வெள்ளையுறையுமரையாப்பு
நழுகுமடலைநாடாதுவோடுமே. (௧௯௬)

சகலபிரமியத்திற்கு எண்ணெய்.

ஓடுமேகமுடலைவிட்டேகுசற்
காடுங்தேங்காய்க்கருகியபாலுடன்

நீடும்பொடுதலைநேர்ந்தநாயகமும்
கூடும்பிரமிக்குறிப்பாய்வந்திடே. (௧௯௭)

அளந்துமாமணக்கெண்ணெயறுபலம்
வளந்துவர்வின்பரல்வாகாயெழுபலம்
குளந்துயெண்ணெயில்கூராய்க்கலக்கியே
பளந்துமண்டலம்பாங்காயருந்திடே. (௧௯௮)

அருந்தும்போதுவலறியேமேகம்போம்
திருந்தாத்தமும்திகைத்துமேயோடிடும்
உருந்தும்வாயுவுடலைவிட்டேகிடும்
பொருந்துமாமுனிபுகழ்ந்துவுரைத்ததே. (௧௯௯)

சட்சிதசுகபேதி சூரணம்.

உரைக்கும்பேதியுறுதியாய்ப்பூட்டுறேன்
கரைக்குஞ்சிவதைகடியபசும்பாலில்
வரைக்குஞ்சிரமும்வாகாகக்காய்ச்சியே
குரைக்குமவெயிலினில்குறிப்பாயுலர்த்திடே. (௨௱)

உலர்த்திச்சீனியுயர்ந்தசர்க்கரையும்
நிவர்த்தியேலமும்நோய்க்கலந்துமே
குலத்துமாலையில்குணமாயருந்திடில்
பெலர்த்தசீதம்பிரண்டோடிப்போகுமே. (௨௱௧)

சகல விற்பிருதிக்கு சுகட்சித மருந்து.

போகும்பிருதிபொருமல்வந்தோர்கட்கு
ஏகுஞ்சல்லியெழிலானவேறுடன்
பாகும்பற்படம்பாங்காயெடுத்துமே
ஆகுஞ்சூரணமன்பாகவுண்டிடே. (௨௱௨)

உண்டுபத்தியமுற்றபுளியாக
கண்டுவென்னீர்கலந்தன்னமுண்டிடு
திண்டுபுருதிதெறித்துமேயோடிடும்
கொண்டுதேரையன்குறிப்பாயுறைத்ததே. (௨௱௩)

உரைக்குமாந்தருறையுமருந்திடு
கரைக்குங்கரிப்பானகரிசாலைதானெடு

திரைக்குமெலுமிச்சம்சேரப்பழமெடு
அரைக்குமயச்சட்டிஅன்பாகக்கிண்டிடே. (உ௱௪)

கிண்டிமூன்றுகெடியாமிருவேளை
அண்டிமாலையதிகாலைதன்னிலே
கொண்டுமண்டலம்குலாவியருந்திடில்
திண்டிமருந்துதிகைத்தோடிப்போகுமே. (உ௱௫)

போகும்பத்தியம்பொருந்தும்பருப்புடன்
ஏகுங்கஞ்சியிருவேளைதானுண்ணு
ஆகுமிஞ்சியரியதுவயல்கள்
பாகுவெல்லமும்பற்றுதலாகாதே. (உ௱௬)

(இலிங்கக்கட்டு)

ஆகாதையாவவனியில்மாந்தற்கு
சகாலிங்கஞ்சுடுதியில்பூட்டுறேன்
வேகாத்தங்கம்விரும்பியேசுத்தியே
வாகாக்காரம்வகையுடன்பூட்டியே (உ௱௭)

பூட்டிசேரன்பொருந்தவிடித்துமே
மாட்டியாசெய்மறையப்பொதிந்துமே
வாட்டித்தீயினில்வாகாயெறித்துமே
மூட்டுக்களைந்துமுளையாயெடுத்திடே (உ௱௮)

எடுத்திடலிங்கமெழிலாயிறுகியே
கொடுத்திடகோய்குடியேகிப்போய்விடும்
அடுத்துமூன்றுநாளாற்வேளையுண்டிடு
தொடுத்தபத்தியந்தோன்றுமுப்பாகாதே. (உ௱௯)

சூலைக்கு கியாழம்

தோன்றுசூலைதொடுத்திடுவாய்வுக்கு
கான்றுசங்கன்கரியசிவன்வேம்பு
ஆன்றுகெந்தியழகியவீரமும்
நீன்றில்லாவெள்ளருகுமெடுத்திடே (உ௱௰)

எடுத்துமேசமனெழிலாயிருபலம்
அடுத்துமிளகுவழகியசுக்குடன்

தொடுத்துசேரந்துடியாமதுபலம்
வடுத்தகோஷ்டம்வலுவாயிடித்திடே (௨௧௧)

இடித்தகல்லிலெழயபொடித்துமே
பொடித்துகியாழம்பொருந்தகலக்கியே
அடுத்துதீபமழகாயிறக்கியே
முடித்துமண்டலமுறைப்படியுண்டிடே (௨௧௨)

உண்டபோதுவுதரியசூலைபோம்
கண்டமாலைகதரியேயோடிடும்
அண்டவாயுவுமபானனிறுகலும்
உண்டிடாமலுதறியேயோடுமே (௨௧௩)

கிரந்தி அரையாப்பு தடிப்பு

ஓடுங்கிரந்தியுற்றதடிப்புக்கு
நாடுங்கள்ளிநவிலுந்துளிர்பலம்
கூடுமிளகுகொடியவசம்புடன்
தேடுஞ்சுக்குதெளிவாய்ரைத்துண்ணே (௨௧௪)

உண்ணும்போதுவுறையுங்கிரந்திபோம்
நண்ணுந்தடிப்புநடாதொநாளும்
பண்ணுமருந்துபண்பாயருந்திடில்
எண்ணுமேனிதிளைக்காதிறுகுமே (௨௧௫)

காதடைப்புக்குத் தயிலம்

இறுகுங்காதிலெழிலாமடைப்புக்கு
உறுகுமிளகாயுற்றபலமெடு
மறுகும்பாண்டமதிப்பாயிடித்ததில்
குறுகும்நாழிநீர்குறிப்பாகக்காய்ச்சிடே (௨௧௬)

காய்ச்சியெண்ணெய்கருதுமொருபலம்
ஆச்சுமிகுயன்பாய்ப்பலமெடு
மூச்சிடாமல்முடுகியேகுத்திடில்
போச்சுமேசெவிபுகலுந்தயிலம் (௨௧௭)

தயிலந்தன்னில்தரியாதிமிர்வாதம்
கயிலைசூலைகழர்சூலைவாயுவும்

வயிலேமேகமும்வாய்காச்சூலேயும்
ஞயிலேமேல்வலியொழிந்தோடிப்போமே (௨௧௮)

போகுமாந்தர்பொருமல்வயிற்வலி
ஆகுஞ்சுக்குவரைப்பலந்தானெடு
மேருமாசுவெள்ளைத்தான்பொதி
பாகுமோரினிற்பாங்காயெறித்திடே (௨௧௯)

எரித்தசத்தமெழிலாமிதுமுறை
தரித்துமேதயிர்தன்னிலருந்திட
வரித்திரைச்சல்வலிகடுப்புமுதல்
தெரித்துப்போமெனச்செப்பினர்தேறனே (௨௨௰)

தேறன்சொல்மெழிதிசையிலும்பொய்யாது
கூறவாமணக்கெண்ணெயொருபலம்
நீரக்காசுமேகட்டிசமனெடை
சேரவாவின்பால்சிறக்கவரைத்திடே (௨௨௧)

அரைத்துத்துவரையன்பாயுருட்டியே
கரைத்துவென்னீரிற்காலேயில்தானுண்ண
வரைத்தபேதிவருகுமேமாந்தற்கு
முறைதப்பாமல்மொழிந்தனர்சித்தரே (௨௨௨)

தலேவலிசன்னிக்கு நசியாக்கிராணப்புகை

சித்தர்வாக்குதிசையிலும்பொய்யாது
கத்தசன்னியுறுதிதலேவலி
ஒத்தவோமம்கரியபெருங்காயம்
சுத்தசுக்குடன்துய்யமிளகெடே (௨௨௩)

எடுத்துசாரமெழிலானசாம்பிராணி
அடுத்துசிரமழகியலிங்கமும்
கடுத்துமேகழல்கடியவரத்தையும்
தொடுத்துசாரமுந்தோன்றவரைத்திடே (௨௨௪)

அரைத்துயெருக்கன்பாலினிலூட்டிடு
திரைத்துசிலேயில்தீர்த்திதிருத்துமே
உரைத்தவாக்கிராணமுறுதியாய்த்தான்பிடி
பரைத்தசன்னிப்பறந்தோடிப்போகுமே (௨௨௫)

(கற்பூராதிக் குளிகை.)

போகுங்கற்பூரக்குளிகைபுகலுவேன்
ஏகுஞ்சாதிக்காயெழிலானபத்திரி
ஆகுந்தக்கோலமானலவுங்கமும்
பாகுமிளகுபாங்காகத்தூக்கிடே. (உஉசு)

தூக்கும்வாலுமிளகுதுடிபலம்
தாக்குங்கோஷ்டந்தனிபானகஸ்தூரி
பூர்க்குஞ்சந்தனம்புகலும்பச்சைபூரம்
ஆர்க்குங்குங்குமமடவாய்விரானெடை. (உஉஎ)

எடுத்துமேயிளநீரிலரைத்துமே
குடுத்துக்குன்றிமணிபோலுருட்டியே
தடுத்துத்தாம்பூலந்தன்னிலருந்திடில்
கடுத்துப்பல்நோய்கடந்தோடியேகுமே. (உஉஅ)

ஏங்குங்காந்தியெழிலாம்வசியமாம்
தூங்குமந்தந்தொடந்தசன்னிமேகம்
பாங்குசூலைபதின்மூன்றுசன்னியும்
நீங்குமேனியுடலைவிட்டோடுமே. (உஉகூ)

(இதுவுமது.)

(சதுர்முகச்சூரணம்.)

ஓடும்வேலியுயர்ந்தநிலப்பனை
நீடுஞ்சேங்கொட்டைநிகழுந்தசமதாய்
காடுந்தண்ணீர்க்கிழங்குசமனெடை
சாடுஞ்சீனிசரியாகச்சேர்த்திடே. (உ௩௰)

சேர்த்துச்சூரணஞ்சிராய்கலந்துமே
பார்த்துதனிற்பதமாகநறுநெய்யிற்
சார்த்துமண்டலம்நன்றாயருந்திடு
கார்த்துபத்தியங்கருதுபசுமபாலே. (உ௩க)

பாலுமன்னம்பகர்ந்துவருந்திடில்
சூலைகுஷ்டஞ்சொரிவிஷமேகங்கள்
காலுங்குன்மங்கருதியவாயுவும்
ஏலும்பாண்டுமிறண்டோடிப்போகுமே. (உ௩உ)

(பல்லுப் பொடி)

போகுந்தந்தவியாதிக்கொருமுறை
ஆகுஞ்சீனமரக்குடன்துத்தமும்
தாகுந்தான்றிதனிக்கடுக்காயுடன்
வாகுமாசிக்காய்வாகாய்விரானெடே. (உ௩௩)

எடுந்துகுப்பமெழிலாயரைத்துமே
கடுத்துமண்டலங்கருதியேதேய்த்திட
அடுத்ததந்தமசையும்பல்லுக்குத்து
முடுத்தப்பாமல்முடுகியேயோடுமே. (உ௩௪)

வாயுவு விக்கல் சோகைக்கு மருந்து.

ஓடும்வாயுமுறையும்விக்கிலுக்கு
நாடுஞ்சுக்குநவிலுமிளகுடன்
தேடும்ரோசனேதேர்ந்தகடுக்காயும்
கூடியொன்ருய்குலாவியிடித்திடே. (உ௩௫)

இடித்துச்சூரணமெழிலாய்ப்பனவெல்லம்
அடுத்துயாவின்பாலன்பாகக்காய்ச்சியே
கடுத்ததேனெய்யில்களிப்புடனுண்ட
தொடுத்தவயிற்வலிதொடர்ந்துதானீங்குமே. (உ௩௬)

நீக்குஞ்சோகைநிகழும்பொருமலும்
தீங்குவிக்கல்திமிர்கிருமிதோஷம்
பாங்குசூலைபகருமேகசலம்
வீங்குரோகம்வெளிவிட்டுஏகுமே, (உ௩௭)

(திரிகடுகெண்ணெய்.)

ஏகுமேதிரியெநிலாக்கடுகெண்ணெய்
பாகுசுக்குப்பகருமொருபலம்
வாகுதிப்பிலிவாகாயிருபலம்
தாகுமிளகுத்தனிப்பலமேயெடே. (உ௩௮)

எடுத்துக்காயமெழிலானவெள்ளுள்ளி
கடுத்துவசம்புகருதுமொருபலம்
தொடுத்துவோமந்துடியாய்மறுபலம்
அடுத்துச்சாப்பிராணியாறுபலமெடே. (உ௩௯)

எடுத்துமேனிச்சாறெழிலாயரைத்துமே
தொடுத்தக்கடுகுதோன்றும்பதத்தினில்
அடுத்துவிசனையன்பாகப்போற்றியே
வடுத்துமேபதம்வாகாயிறக்கிடே. (௨௪௰)

எறக்கியெண்ணெயெழிலாகப்பூசிடில்
குறக்குங்கைகால்குடைச்சல்வலிதீரும்
நிறக்குமேவலிநீர்ந்தகாதிரைச்சல்
பறக்குமென்றல்லோபாடினேன்தேறனே. (௨௪௧)

மகா பஞ்சீகரண செந்தூரம்.

தேறன்கூர்மொழிதிசையிலும்பொய்யாது
வேறசெந்தூரம்விரும்பியுரைக்கிறேன்
கூறதங்கங்குறிப்பாயொருபலம்
தீறவங்கந்திறமாயெடுத்திடே. (௨௪௨)

எடுத்திடுரவியெழிலாமொருபலம்
தொடுத்திடுமதிதோன்றவரைப்பலம்
அடுத்திடுநாகமன்பாயிருபலம்
கடுத்திடுந்தாரங்கடியப்பலந்தூக்கே. (௨௪௩)

தூக்குகெந்தந்துடியாம்விராகனற்
தாக்குபொற்றலைச்சாற்றாலரைத்துமே
நீக்குகுப்பியில்நெகிழப்பொடித்துமே
போக்கில்லாமல்பொருந்தவெரித்திடே. (௨௪௪)

எரித்துச்செந்தூரமெழிலானதேனி
கரித்தமேனிகரியநிறமாறும்
முரித்தாரத்தமுறித்துசிவந்துமே
தரித்ததங்கம்போல்தானிறமாகுமே. (௨௪௫)

ஆகும்வெள்ளியிவன்பாகயீந்திட
ஏகுமாற்றுறுஎழிலானவாணிக்கு
பாகுதங்கம்பகர்ந்துசரியெடை
வாகுசிவனம்வாகச்செய்திடே. (௨௪௬)

காமாலை சோகைக்கு லேகியம்.

செய்துசோகைசிறந்தகாமலைக்கு
எய்துஞ்சக்குமெழிலாமிளகுடன்

நைதுசிரகம்நவிலுஞ்சாதிக்காயுங்
கொய்துதிப்பிலிகூடக்கிராம்பேடே. (௨௪௭)

எடுத்துச்சோம்புமெழிலானவஞ்சியும்
கடுத்தரோகணிகடுக்காயரத்தையும்
அடுத்ததேங்குஅரத்தைசமனெடை
தொடுத்துச்சூரணந்துவளப்பொடியாக்கே. (௨௪௮)

ஆக்கிச்செம்மறியானபசும்பாலும்
தாக்கிநெய்யில்தனியாங்கருப்பன்சாற்
போக்கிலாமல்பொருந்தும்பனவெல்லம்
வாக்குப்பொய்யாமல்வாகாகிளறிடே. (௨௪௯)

கிளறிமலகம்கெடியாமளவுண்ண
அளறுஞ்சோகையறுவகைபாண்டுவும்
மூளருமந்தம்முளையானகுன்மமும்
தளர்வில்லாமலேதரணிவிட்டோடுமே. (௨௫0)

ஓடும்பத்தியமுரையுமூருங்கையும்
நாடும்வெள்ளாடுநவிலுமிறைச்சியுண்
தேடுமேபசுந்துய்யநறுநெய்யும்
தோடில்லாமல்தொகுப்பாயருந்திடே. (௨௫௧)

மகா பஞ்சிகரண மாத்திரை.

அருந்துமாத்திரைவரியபஞ்சிகரணம்
பொருந்தும்வீரமும்போற்றுங்கெவுரியும்
திருந்தும்லிங்கமும்சேரவெள்ளையுடன்
குருந்தும்பூரமுங்குறிப்பாய்ச்சமனெடை. (௨௫௨)

எடுத்துமேதிரியெழிலானசூரணம்
படுத்துதேனிலேபணவிடையுண்டிட
அடுத்தவாயுவுவறுபத்துநாற்சுரம்
கடுத்தகுன்மங்கதறியேயோடுமே. (௨௫௩)

ஓடுமூர்ச்சையுதரும்பிரமையும்
நீடுரோகமும்நேரும்விஷபாகம்
கோடுவேப்பங்கொடியதொண்டைக்கம்மல்
வாடுசன்னிவலிபறந்தோடுமே. (௨௫௪)

ஏகும்பத்தியமெழிலானகாடையும்
பாகுமுயலுடன்பச்சைசுராவுமாம்
வாகும்வெள்ளாட்டிறைச்சிரிப்புக்கண்டம்
ஆகுநெய்யுடன்பாசவுன்னிடே. (௨௫௫)

பஞ்சமுகச் செந்தூரம்.

உண்டிடும்பஞ்சமுறைமைசெந்தூரம்பார்
கண்டிடுஞ்சாதிகடியரசங்கெந்தி
அண்டிடும்வீரமரியதாரமுடன்
கொண்டுமேசமன்குறிப்பாய்நிறுத்திடே. (௨௫௬)

நிறுத்துக்காட்டாமணக்கின்பாலாட்டியே
மறுத்துப்பில்லையாய்வாகாகத்தட்டியே
குறித்துரவியில்குறிப்பாயுலறவை
வறுத்துமேகோழிவாகாய்ப்புடம்போடே. (௨௫௭)

போட்டுசெந்தூரம்பொற்பணமாமிடை
நாட்டுதேனில்நறுநெய்வெண்ணெய்தனில்
கூட்டுவீச்சன்கூறுங்கருப்பங்கட்டி
நீட்டுமண்டலம்நேரவருந்திடே. (௨௫௮

அருந்தும்போதுமறையும்வெடிசூலை
குருந்து வெள்ளைக்குறித்திடுங்குஷ்டமும்
வருந்துமேகமும்வாகானகுன்மமும்
செரிந்துபோமெனச்செப்பினர்தேறனே. (௨௫௯)

பாலரசச் செந்தூரம்.

தேறன் குருமொழிதிசையிலும்பொய்யாது
வேலசெந்தூரப் விரும்பியுரைக்கிறேன்
கூறகெந்திக்குறித்திடுமாற்பலம்
நீறதாரந்திரிபலந்தூக்கிடே. (௨௬௰)

தூக்குமேரசந்துகள்விருபலம்
தாக்குவம்மியில்தகிக்கப்பொடித்துமே
பாக்குவண்டத்தில்பதியப்பொதிந்துமே
வாக்குதப்பாமல்வாகாய்ப்புடம்போடே. (௨௬௧)

போடசெந்தூரம்பொருந்தும்பணவிடை
நீடவெண்ணெயில்நேர்மையாயுண்டிட
கூடரோகங்குஷ்டரோகங்கிரந்தி
ஓடசூலையொழிந்துதானோடுமே (௨௬௨)

ஓடும்நஷ்டமுறையும்லிங்கப்பற்று
தேடுமாலைதெரிக்குமறையாப்பு
நீடுங்காசம்நெகிழும்விற்பிருதி
மூடுஞ்சன்னிமுறையமிட்டேக்குமே (௨௬௩)

சகலரணங்கட்கு ரஞ்சிதத்தயிலம்

ஏங்கும்நொச்சியெழிலாமழிஞ்சிவேர்
தீங்கில்லாத்திரிகடுவிழுதியும்
தாங்குபாண்டந்தனியவிடித்துமே
பாங்குதயிலம்பாங்காயிறக்கிடே (௨௬௪)

இறக்கித்தயிலமெழுச்சிவிற்புருதி
கறக்குமாலைகடிய ைரையாப்பு
உறக்குவாழைவுறையுங்குழிவாழை
பறக்குமென்றல்லேபாடினேன்தேறனே (௨௬௫)

நீரில் எரிச்சல்கண்டால்

தேறன்வாக்குத்திசையிலும்பொய்யாது
வேறநீரிலாவெகுளுமெரிச்சலுக்
கூறமருந்துகுறிக்குக்கட்டுக்கொடி
தீறராசகன்னிப்பிரமாணமெடே (௨௬௬)

எடுத்துமோரில்வில்பதர்தனுறுடன்
கடுத்தசீரங்கடியவெலமுடன்
பொடித்துரண்டுபொருந்தவிரானெடை
கடுத்தசீனில்கலந்துவருந்திடே (௨௬௭)

அருந்தும்போதுவருகும்நீரெரிவு
பொருந்துமேனிபுடைத்துமேயோடிடும்
வருந்துஞ்சுறுக்குவாகானவெள்ளையும்
முருந்துரத்தமும்மூனெகெட்டுவோடுமே (௨௬அ)

மகா பரங்கிப்பட்டை பதங்கம்

ஓடும்பரங்கியுற்றபதங்கமும்
ருடுஞ்சூரணந்தாக்கிடுமாற்பலம்
நீடும்கையானிகமும்பொற்றலைசாற்
போடுங்குப்புச்சாற்போற்றும்பசும்பாலே (உசுகூ)

பாலில்சாறில்பதமாயவித்துமே
நாவில்கெந்தகம்நவிலுமொருபலம்
மூலிலிங்கமுனையாமிருபலம்
தோலில்லாமல்சொகுசாயவித்தெடே (உஎ0)

எடுத்துரவியிலெழிலாயுலர்த்தியே
அடுத்துக்கணைசனையன்பாகப்போற்றியே
கொடுத்துமண்டலங்குணமாயருந்திடில்
நடுத்தமேகம்நவின்றோடிப்போகுமே (உஎக)

(தீரும் வியாதி)

போகுங்கறுப்புபொருந்தும்வெள்ளைசூலை
ஏகுமரணங்கள்எதிர்க்குஞ்சிரங்குகள்
வாங்குகுஷ்டம்வரையுஞ்செந்தாமரையும்
நோகுமரணங்கள்நொருங்கியேவோடுமே (உஎஉ)

ஓடும்பத்தியமுப்புபுளியாகா
நீடுமண்டலம்நேர்மையாயுண்டிடில்
மூடுவியாதிமுறைகெட்டுவோடிடும்
வீடுவிட்டுவெளிப்படுமேவேந்தரே (உஎந)

மகாவல்லாதி தயிலம்

வேந்தரேகேளும்விரும்பும்வல்லாதியை
காந்தழிஞ்சிக்கருதுபூங்கொட்டையும்
தீந்தவேம்பின்திகழுமெட்டியுடன்
பொந்துபுண்ணாக்கிலைசமன்தூக்கிடே (உஎச)

தூக்குமேசிவன்வேம்புஞ்சமனெடை
தாக்குமேசலந்தன்னிலேயூறவை
யோக்குதயிலம்பொருந்தயிறக்கியே
வாக்குதப்பாமல்மண்டலங்கொண்டிடே (உஎரு)

கொண்டபோதுகொடிதானசூலையும்
அண்டவாயுவபானனிறுகலும்
ரெண்டைவாதகிரந்தியரையாப்பு
ஒண்டிடாமலுடலைவிட்டோடுமே (உஎசு)

ஓடுகுன்மமுறையுமிருமலும்
நீடுவாதம்நெருங்கியகாசம்
கூடுவிக்கல்குறித்திடுரோகமும்
வீடுவிட்டுவெளிப்பட்டுநீங்குமே (உஎஎ)

இடிவல்லாதி

நீகுமேபிடிகிமழும்வல்லாதி
பாங்குசேங்கொட்டைகதிப்பலமெடு
நீங்குமாவின்றிரளுஞ்சானத்தினில்
வாங்குமூன்றுநாள்வாகாயூறவையே (உஎஅ)

வைத்துமேகல்லில்வாகாயிடித்துமே
கைத்துமெள்ளநவிதப்பொடித்திடு
கத்துக்கொப்பரைக்கருதுங்தேங்காயுடன்
சத்துப்போகாமதனியவிடித்தெடே (உஎகூ)

இடித்துப்பட்டையெழிலாமமுக்குரா
கடுத்தமூலங்கஸ்தூரிகருஞ்சீரம்
வடுத்தவாலுழுவாங்குங்குராசாணி
எடுத்தவெற்றிலைஏங்துங்கடுக்காயே (உஅ0)

காயுந்திப்பிலிகடியகோஷ்டமுடன்
தோயுஞ்சரக்குத்துஊளசமனெடை
காயுஞ்சூரணங்கல்லுரலிட்டுமே
பாயுமயனம்பாங்காயிடித்திடே (உஅக)

இடித்துமேரசகெந்திகற்பூரமும்
வடித்துமேசமன்வாகாயெடுத்திடு
முடித்துவெல்லம்முனையாய்க்கலந்திடு
கடித்துமண்டலங்கடியவருந்திடே (உஅஉ)

அருந்தும்போதுமேவாராக்கிரந்தியும
திருந்துக்குஷ்டமுந்தெறிந்திடுசூலையும்

வருந்துமேகம்வரையுமறையாப்புக்
குருந்துகுன்மமுங்குடியேகிப்போகுமே. (௨௪௩.)

போகும்பத்தியம்பொருந்துமிறைச்சியும்
ஆகுமோருமருமைநறுநெய்யும்
பாகுவல்லாரைபசும்பொன்னாங்காணியும்
ஏகும்பச்சையெடுத்துப்பொசித்திடே. (௨௪௪)

சகல மேகங்களுக்கு கெந்தி ரசமெழுகு.

பொசித்தமேகம்பொருந்துபறப்பதற்
கசித்ததாரங்கடுங்காரகாந்தமும்
வசித்ததுத்தம்நவிலுமிர்தாருடன்
வசித்தபூரமுங்வாகாயத்துரிசெடே. (௨௪௫)

எடுத்துச்சுக்குயெழிலானவோமமும்
கடுத்தமஞ்சள்கடியவரத்தையும்
தொடுத்தகோஷ்டம்துவளும்வாலுளுவை
அடுத்தசாதிக்காயன்பாயேலமெடே. (௨௪௬)

ஏலஞ்சோம்புஎடுத்திடுசிரகம்
கோரலக்கார்போகக்கொடியமிளகுடன்
வாலம்வசம்புவகுக்குமாசக்காயும்
தாலலவங்கந்தனிவாய்விளங்கமே. (௨௪௭)

விளங்குந்தேசாவரந்தசேங்கொட்டையும்
களங்குஞ்சிரங்கருஞ்சிரங்கந்தமும்
புளங்குந்தேக்குபுகலுந்தாளிசமும்
அளங்கும்பத்திரியன்பாயெட்டியெடே. (௨௪௮)

எட்டிமுந்திரியேகுந்தேற்றான்விரை
கட்டிப்பூண்டுகடியகொள்ளுடன்
வெட்டிதேங்காய்விரையுஞ்சங்கனுடன்
கொட்டிவேலிகுறிப்பாய்சமன் தூக்கே. (௨௪௯)

தூக்கியண்டந்துடியாம்வெண்கருவை
தாக்குமூரலில்தனியவிடித்துமே
போக்கில்லாமல்பொருந்தசிமிழில்வை
வாக்கிலீசனேவந்திக்தேயுண்டிடே. (௨௫௰)

(திரும் வியாதி)

உண்டபோதுமுறையும்வெடிசூலை
துண்டமேகந்துடியாமிடிசூலை
அண்டசூலையழுந்தும்வாதசூலை
கண்டமாலைகதிகெட்டுவோடுமே. (௨௬௧)

ஓடுமேகமுறையுங்குடைச்சலும்
நீடுமேகரம்நெருக்குங்குஷ்டங்களும்
கோடுநோயுங்குலைநோய்சிரங்குகள்
ஆடுகுன்மமலரியேநீங்குமே. (௨௬௨)

தீங்குலிங்கம்நெருங்கியயோனிநோய்
பாங்குகிலந்திபருத்தகிரந்தியும்
தீங்குபுண்ணுந்திமிர்தடிப்புமாறும்
வாக்குமூலமுவரைந்தோடிப்போகுமே. (௨௬௩)

போகும்பத்தியம்பொருந்தும்பச்சைப்பயர்
ஆகுநெய்யுமரும்பசுப்பால்தயிர்
ஊதும்வெள்ளாட்டிறைச்சியுப்புக்கண்டம்
நாகுங்கத்திரிநவிலவருந்திடே. (௨௬௪)

சூதசெந்தூரம்.

அருந்தசெந்தூரமதையுதேன்மாந்தற்கு
திருந்துகெந்தகமதிரட்டிரசமுடன்
பொருந்துசமனெடைபோற்றுங்கலுவத்தில்
வருந்துசித்தாமணக்கெண்ணெயாட்டிடே. (௨௬௫)

ஆட்டிமெழுகுயன்பாய்த்திரட்டியே
கூட்டிப்பட்டுக்குல விப்பொதிந்துபே
நாட்டுவேலிநவி லுங்கொடிவேலி
போட்டுமூடிப்பொதியப்புடமிடே (௨௬௬)

இட்டுச்செந்தூரமிரக்கியெடுத்துமே
கட்டுதேனில்கலந்துவருந்திட
ஓட்டுநோயுமுடலையுட்டேகியே
விட்டுப்போமெனவென்குருசெப்பினர். (௨௬௭)

மகாகெந்தக ரசாயனம்.

செப்புமாந்தர்சிறந்தரசாயனம்
ஒப்புங்கெந்தமுரைக்குமறுபலம்
தப்பில்லாமல்தனிப்பசும்பாலிலும்
வெப்பில்லாமல்விரைந்துசீலேசெய்யே. (உசகூ)

செய்துசெமமிசிறந்தமணல்தனில்
எய்துமேபுடமெழில்ராய்ப்பொதிந்துமே
கொய்துமேகுமரேசனேப்போற்றியே
வெய்துமண்டலம்விரும்பியருந்திடே. (உசஞ)

அருந்தும்போதுமரையுமறயாப்புக்
குருந்துரோகக்குறிப்பானவெள்ளேயும்
திருந்துவெட்டைச்சிறந்தரணங்களும்
பொருந்துகுஷ்டம்புறப்பட்டுவோடுமே. (௩௰)

ஓடும்பத்தியமுற்றபுளியாகா
நீடுபாலும்நறுநெய்மோருமுண்ணு
வடுதயிருமெழிலாகயுண்டிடு
கோடுமண்டலக்குறிப்பாகவுண்டிடே. (௩௰க)

(வேறு தண்ணீர்.)

உண்டுமேனியுறும்பும்வலிநீங்க
கண்டுநொச்சிகடியதோர்தாழையும்
மிண்டுநீரில்மிதக்கவேசாய்ந்தபின்
திண்டுவாயுதிகைத்தோடிப்போகுமே. (௩௰உ)

சகல சுரங்களுக்குக் கியாழம்.

போகுமேசுரம்பொருந்துமுடலைவிட்
டாகுந்தூதுவளைகண்டங்கத்திரி
நீகுவேம்புநிலவேம்படதோடையும்
வாகுபடகம்வகுத்தக்கோரைபெடே. (௩௰௩)

எடுத்துசிந்திலெழிலானமுட்டியம்
கடுத்தக்காந்தங்கருவேம்பின்மூலமும்
தொடுத்தசெந்தொட்டிதோன்றுமுசுக்கையுங்
கொடுத்துபேய்ப்புடல்கூறும்தும்பைக்கூட்டிடே. (௩௰௪)

கூட்டுந்துளசிகுறிப்பாய்சமனெடை
நீட்டுமுரலில்நேராயிடித்துமே
காட்டுஞ்சரக்குகருதியேசேர்ப்பதற்
கோட்டந்தேக்குகுறிப்பாகத்தூக்கிடே. (௱௫)

தூக்குதாளிசங்கொண்டுபத்திரியும்
தாக்குசங்குடன்தனிபலவங்கமும்
நீக்கித்தோலெருங்குஞ்சதாவேலி
போக்குமரத்தைபொருந்தநிறுத்திடே. (௱௬)

நிறுத்துதிப்பிலிநேருந்தேசாவரம்
அறுத்துவொன்றாயழகாயிடித்துமே
வறுத்துப்பாண்டமறுபடிநீரினில்
கறுத்துக்கியாழங்கடியவிறக்கிடே. (௱௭)

இறக்கிமூன்றுயிருவேளைதான்குடி
உறைக்குமுப்புபுளிபுகைதள்ளிடு
திறக்கமாகவேதிரவருந்திடில்
பறக்குமேசுரம்பகர்ந்தனர்தேறனே. (௱௮)

(வேறு - மருந்து.)

தேறன்வாக்குத்திசையிலும்பொய்யாது
கூறக்கியாழங்கொடிதாயுரைக்கிறேன்
காறதேக்குகடியமதுரமும்
தாறசிரந்தனிவாய்விளங்கமே. (௱௯)

விளங்குமாஞ்சில்விரும்புங்கிராம்புடன்
களங்குபத்திரிகரியதாளிசமும்
வளங்குமிளகுவாகாய்விடையமும்
துளங்குமேயிவைதோன்றச்சமனெடே. (௱௰)

எடுத்துச்சூரணமெழிலாமிஞ்சிரசம்
அடுத்துச்சுரசமன்பாகமண்டலம்
கொடுத்துமேயிருவேளையருந்திடில்
மிடுத்தவுடசுரமிரண்டோடிப்போகுமே. (௱௧௧)

(கண்டா விழ்தம்.)

போகுங்கண்டாவவிழ்தம்புகட்டுதற்
காகும்வெள்ளிக்கருதபவளமும்

ஆகுஞ்சின்னியுமாமையோட்டுடனே
வாகும்வில்வமும்வாசிவிளாவெட்டே. (௩௰௨)

எடுத்திடுஞ்சுக்குமேலங்கிராம்புடன்
கொடுத்திடுவால்மிளகுவரத்தையுங்
கெடுத்திடுஞ்சாதிபத்திரிகோஷ்டமும்
வடுத்திடுந்தேசாவரமுந்தூக்கிடே. (௩௰௩)

தூக்குத்திப்பிலிதுய்யருத்திராட்சமும்
தாக்குமேமுலைப்பாலிலுரைத்திடு
தேக்குமேயிருவேளைதளமிடில்
போக்குமேசலம்பொருந்தவேயூறுமே. (௩௰௪)

ஊறுமேசலமுற்றநாவுதனிற்
காறுந்துமட்டிக்கடியவேரைத்தட்டி
தீறும்வாயில்தெளியவடக்கிடில
கோறுந்தாகங்குடியேகிப்போகுமே. (௩௰௫)

தாகத்திற்குக் கியாழம்.

போகுமாந்தர்பொருந்துந்தாகவிடாய்
பாகும்வெள்ளிலைபச்சைவிளாவிலை
நாகுமரசன்நவிலுமாடாதோடை
வாகுஞ்சாறுவழியாய்ப்பிரிந்திடே. (௩௰௬)

பிரிந்துமணலில்பிரட்டிஎடுத்துமே
தெரிந்துமதுரந்தேர்ந்தமுந்திரிகை
பொருந்துகியாழம்போட்டுவருந்திடில்
முரிந்துதாகமுறையிட்டுவோடுமே. (௩௰௭)

ஓடுந்தாகம்போமுஷ்ணதாகமும்போம்
நீடுமேகத்தினெருங்கியதாகமும்
வாகுதாகமும்வந்திரதாகமும்
மூடுருத்திரதாகமும்நீங்குமே. (௩௰௮)

சகலவாய்வு களுக்கு.

நீங்கும்வாயுவுநிகழுங்கியாழங்கேள்
பாங்குசங்கம்பகருங்கொழுஞ்சியும்

ஓங்குவேலியுறையுங்கெத்தமல்லி
தீங்கில்லாசிறுதேக்குமெடுத்திடே. (௩௰௯)

எடுத்நச்சுக்குவிளங்கஞ்சிறுதேக்கு
தொடுத்தபாண்டந்துகளவிடித்துமே
படுத்தமேசலம்பாங்காயொருபடி
கடுத்ததிட்டிக்கடுகவிறக்கிடே. (௩௨௰)

எடுக்குங்கியாழமெழிலாமிளகுடன்
திறக்குமாமணக்கெண்ணெய்யொருபடி
முறக்குங்கியாழமுற்றுங்கலந்து
உறக்குமூன்றுநாளார்வேளையுண்டிடே. (௩௨௧)

உண்டபோதுமுறையுமேகவாய்வு
அண்டிடாமல்வனிவிட்டோடிடும்
கெண்டைவாதங்கெடியானசூலைபோம்
கொண்டவாயுகுதித்தோடிப்போகுமே. (௩௨௨)

சூட்டுக்கு ரஞ்சிதக்குடிநீர்.

போகுஞ்சூடுபொருந்தாமலோடுதற்
காகுமேபழங்கருதுமிளநீரும்
வாகுசுண்ணம்வரையுங்குமரிச்சாற்
நீடுசேரசங்கோராய்ப்பலந்தூக்கே. (௩௨௩)

தூக்கிச்சீனந்துடியாமொருபலம்
தாக்குமொன்றாய்த்தளியக்கலந்துமே
போக்கில்லாமல்பொருந்துமண்டலமுண்
நீக்குச்சூடுநிகழ்ந்தோடிப்போகுமே. (௩௨௪)

இரும்பலுக்கு லேகியம்.

போகுமாந்தர்புகலுமிரும்பலுக்
காகும்பரங்கிசக்கையறுபலம்
நீகுமேபசும்பாலில்வித்துமே
பாகுசூரணம்பாங்காகச்செய்திடே. (௩௨௫)

செய்தசீனிசிறக்கவறுபலம்
நெய்துதேனும்நறுநெய்சம்பலம்
கொய்தவெண்ணெய்குறிக்கிமெழுபலம்
வைதுலேகியம்வாகாகக்கிண்டிடே. (௩௨௬)

கிண்டியேகழற்சிக்காயளவுடன்
அண்டிமண்டலமன்பாயருந்திடில்
வுண்டிமேகமுடலிலிரும்பலும்
அண்டிடாமலவனிவிட்டோடுமே. (௩௨எ)

ஓடும்பத்தியமுற்றவிரும்பலுக்
காடுவெள்ளாட்டிறைச்சியுப்புக்கண்டம்
நாடுமுருங்கைகவிலுதூதுவளை
தேடிமண்டலஞ்சிறப்பாயருந்திடே. (௩௨அ)

ஒரு தலைவலிக்கி தயிலம்.

அருந்தும்போதுமரையுமொருதலை
குருந்துமோர்தலைகுறிக்குவெள்ளுள்ளியும்
செரிந்துசந்தனம்தேவதாரமுடன்
தெரிந்துசாம்பிருணிதெளிவாகத்தூக்கிடே. (௩௨௯)

தூக்குஞ்சரக்குதுடியாஞ்சம்பலம்
தாக்குமெள்ளெண்ணெய்தனியளர்சேர்பலம்
போக்கில்லாமல்பொருந்தும்பாண்டந்தன்னில்
வாக்குதப்பாமல்வாகாயிறக்கிடே. (௩௩௰)

இறக்கிமாயனையெழிலாகப்போற்றியே
உறக்குமண்டலமோங்குஞ்சநிவாரம்
திறக்கமாகவேதேய்ந்துமுழுகிடில்
பறக்குஞ்சன்னிபகருநோய்போகுமே. (௩௩௧)

குமட்டிக்காய்ப் பதங்கம்.

போகும்வோதைபொருந்துந்துமட்டிக்காய்
ஆகும்வேலியமுக்குராதூதுளை
நீகும்பாவட்டைநேர்ந்தமாவிலிங்கம்
வேகுஞ்சாரணைவிரும்பும்வேளையெடே. (௩௩௨)

எடுத்துமேமுடக்கற்றான்தழுதாழை
அடுத்துக்குப்பையரியசிவன்வேம்பு
தொடுத்துவில்வந்துடர்ந்தவவரியும்
கடுத்துப்பிரம்பின்கருதுசமன்தூக்கே. (௩௩௩)

தூக்கிச்சூரணந்துகளப்போடித்துமே
தாக்குஞ்சுக்குத்தனியலவங்கமும்
போக்குப்பத்திரிபொருந்துங்கிராம்புடன்
வாக்குப்பொய்யாமல்வால்மிளகுசேரே. (௫௫௪)

சேர்த்துவோமஞ்சிறந்ததேசாவரம்
பார்த்துதாளிசைபகருஞ்சிறுநாகங்
கார்த்துதிப்பிலிகருதுஞ்சதகுப்பை
கோர்த்துவிடையங்குறிப்பாய்சிரங்கூட்டே. (௫௫௫)

கூட்டிச்சூரணங்குறிப்பாயெடுத்திடு
நாட்டிக்கல்வம்நவிலுங்கள்ளிப்பாலால்
ஆட்டிமாத்திரையளவாகச்செய்திடு
நீட்டிக்காயினில்நெருங்கப்பொதிந்திடே. (௫௫௬)

பொதிந்துசீலைப்புக்கட்டிப்புடமிடு
அதிந்துசூரணமன்பாகச்செய்திடு
சதிந்துசீனியில்சதுராயருந்திடில்
வதிந்துவாதம்வகைகெட்டுவோடுமே. (௫௫௭)

ஓடுஞ்சூலையனேயும்பட்சவாதம்
நீடுகுன்மம்நெருக்கும்வயிற்றுவலி
கூடுரோகங்குறிக்குங்கழல்வாதம்
வீடுவிட்டுவெளிப்படுமுண்மையே. (௫௫௮)

சூதச்செந்தூரம்.

உண்மையாகயுரைக்கிறேன்செந்தூரம்
தண்மைகெந்திதனியாமிரதமும்
திண்மையாகவகுக்குங்கலுவத்தில்
வண்மையாகச்சிறக்கப்பொடித்திடே. (௫௫௯)

பொடித்துமாமணக்கெண்ணெயிலாட்டியே
முடித்துநாற்பட்டுறையுஞ்சீலையுடன்
வடித்துச்சாணும்வாகாய்ப்புடமிட
நடித்துமோதமகவிலுஞ்செந்தூரமே. (௫௬௰)

தூரமானதுடியானசெந்தூரம்
காரமானகருதும்பரங்கியில்

தீரமாகத்தினையளவுண்டிடில்
கோரமேனிகுறுகிபொன்னாகுமே (௩௪௧)

(கெந்தகர சாயனம்.)

ஆகுங்கெந்தியறையும்ரசாயனம்
நீகுமேபசும்பாலில்பொதிந்துமே
வாகுங்கெந்திவரையுங்கலசத்தில்
பாகுமேசீலைப்பாங்காகச்செய்திடே. (௩௪௨)

செய்துகோழிசிறந்தபுடமிட்டு
எய்துநீர்ப்பூண்டெழிலாயரைத்துமே
கொய்துபணமிடைகுறிக்கும்வெல்லத்தினில்
பெய்துமண்டலப்பெலமாகவுண்டிடே. (௩௪௩)

(தீ ரு ம் வி யா தி.)

உண்டபோதுவுறையுங்குஷ்டரோகம்
கண்டவெள்ளைக்கறுப்புக்கிராந்தியும்
அண்டரோகமகலுங்கடிவிஷம்
துண்டவாயுதுடித்தோடிப்போகுமே. (௩௪௪)

போகும்பத்தியம்பொருந்துநெய்பாலுடன்
ஆகும்பச்சைப்பயறுடன்கீரையும்
வாகுமண்டலமதிப்பாயருந்திட
ஏகும்நோய்களெறந்தோடிநீங்குமே. (௩௪௫)

(பித்தத்திற்கு சூரணம்.)

நீங்கும்பித்தம்நெரிங்கிடுமாந்தற்கு
தாங்குமதுரம்தனிச்சிந்திசர்க்கரை
ஓங்குமேல்முயர்கருஞ்சீரகம்
வாங்கும்நாகப்பூவகைக்குசமனெடே. (௩௪௬)

எடுத்துப்பரங்கியெழிலானசக்கையும்
அடுத்துசட்டியிலன்பாவறுத்திட்டு
தொடுத்தசூரணந்துவளப்பொடித்துமே
அடுத்தசீனியிலன்பாய்ச்சமன்கூட்டே. (௩௪௭)

கூட்டுந்தேனில்குலாவுமோர்மண்டலம்
நீட்டுமேன்னெயில்நோராயருந்திடில்

நாட்டும்பித்தம்நவிலும்நாற்பதுவும்
காட்டுமேவழிகடந்தோடிப்போகுமே. (௱௪௮)

போகும்பத்தியம்பொருந்துமுசுக்கையாம்
ஆகுமிஞ்சியரியகொடுத்தமல்லி
பாகுநிம்பம்பழம்விளக்காயுடன்
வாகுமேபுளியாரையருந்திடே. (௱௪௯)

வாதத்திற்குச் சூரணம்.

அருந்துவாதமவனிவிட்டோடுதற்
குருந்துநன்மிளகுவகையாற்பலம்
திருந்துதிப்பிலிசேரவிருபலம்
பொருந்துசுக்குமேபோற்றுஞ்சமன்சேரே. (௱௫௰)

சேர்த்துப்பத்திரிசிறந்தலவங்கமும்
பார்த்துகோஷ்டம்பகருஞ்சண்பகமும்
கோர்த்துவாலுமிளகுசரிபலம்
தூர்த்துச்சூரணந்துடியாகச்செய்திடே. (௱௫௧)

செய்துசீனிசிறக்கச்சமனெடை
நைதுதேனில்நறுநெய்வெண்ணெயிலும்
பெய்துமண்டலம்பிரியமாய்யுண்டிட
தொய்துவாதந்துடித்தோடிப்போகுமே. (௱௫௨)

சிலேத்துமத்திற்குச் சூரணம்.

போகுமையம்பொருமியேயோடுதற்
காகுங்கண்டங்கத்திரிசமூலமும்
வாகுசீவிவரையுந்தாளிசமும்
தாகுசூரணந்தயவாகச்செய்திடே. (௱௫௩)

செய்துதேனில்சிறக்கவருந்திடு
எய்துமீளைசயகபரோகம்போம்
வைதுசன்னிவலுவானவுஷ்டணம்
உய்துரோகமுடலைவிட்டோடுமே. (௱௫௪)

(தீராத வாந்திக்கு.)

ஓடும்வாந்தியுடலைவிட்டோடுதற்
காடுச்லைசப்பயர்விளாதளிலுடன்

நீடும்நெற்பொரிநெருங்கியமுல்லையும்
கூடுஞ்சுக்குக்குறிப்பாயெடுத்திடே. (௩௫௫)

எடுத்தச்சீனியெழிலாக்கலந்துமே
அடுத்தக்கியாழமறுவேளையுண்டிடு
தொடுத்தவாந்திதுடித்துமேயோடிடும்
தடுத்தப்பத்தியந்தானென்றுமில்லையே. (௩௫௬)

அஷ்டகுன்மத்திற்கு-வுப்புசெந்தூரம்.

இல்லையேகுன்மமிறங்கியேயோடிட
இல்லையாடுஞ்சிவன்பதஞ்சாட்சியாய்
கொல்லைமேவுங்குறித்திடுமுப்பினை
வல்லைதும்மட்டிச்சாற்றாலரைத்திடே. (௩௫௭)

அரைத்துப்பில்லைஅழகாகச்செய்திடு
திரைத்தவோட்டினில்தீரச்சீலைசேய்து
உதைத்துக்குடம்வுற்றப்புடமிடு
நிரைத்தசெந்தூரம்நேமையைப்பார்த்திடே. (௩௫௮)

பார்த்திடப்பாபணவிடைசெந்தூரம்
நேர்த்திடப்பாநிறைபணவெல்லத்தில்
கார்த்துமேயிருவேளையருந்திடில்
தூர்த்துக்குன்மந்துடித்தோடிப்போகுமே. (௩௫௯)

நேத்திராஞ்சன்மை.

போகும்பத்தியம்பொருந்துசென்னாக்குன்னி
ஆகுமிளகுஅரியவெள்ளுள்ளியும்
பாகுபடலைபாங்குடனிஞ்சியும்
வாகுகருணைவாகாகக்கூட்டிடே. (௩௬௰)

(பக்கசூலைக்கு.)

கூட்டுஞ்சூலைக்குடலைவிட்டோடுதற்
காட்டுந்தாரங்கடியதோர்நாபியும்
சூட்டும்லிங்கந்துடியானபூரமும்
தீட்டுகெந்தத்திறமாய்ச்சமன்சேரே. (௩௬௧)

சேர்த்துவெள்ளைத்திறமானகொப்பரை
பார்க்கவுள்ளப்பதியப்பொதித்துமே

நார்த்துக்குக்குடம்நன்றாக்செய்திடு
தூர்த்துவெந்தபின்தோன்றவரைத்திடே. (௩௬௨)

அரைத்துமைபோலன்பாகச்செய்திடு
முறைத்தப்பாமல்முசியாமல்மண்டலம்
நிறைத்தப்படியேநேராயிருவேளை
திறைத்தமாகத்திரிகடிகிலுண்டிடே. (௩௬௩)

உண்டபோதுமுறையுஞ்சூலைபறும்
கண்டமாலைகதறியேயோடிடும்
அண்டவாயுவறையும்யோனிச்சூலை
துண்டசூலைத்துடித்தோடிப்போகுமே. (௩௬௪)

(பவுத்திரத்திற்கு.)

பொசுமாந்தர்புகலும்பவுத்திரம்
ஆகும்பூரமரியகெந்தியுடன்
ஏகுந்தேங்காயெழிச்சிலவங்கமும்
பாகுதேனில்பதமாயரைத்திடே. (௩௬௫)

அரைத்துமண்டலமறியவொருபாகம்
கரைத்துப்பரங்கிகருதுஞ்சூரணத்தில்
திரைத்துமேயிருவேளையருந்திடில்
உரைத்தபவுத்திரமுழன்றோடிநீங்குமே. (௩௬௬)

நீங்குமேயறையாப்புகுஷ்டங்களும்
பாங்குமேமுடநோய்பரங்கிப்புண்கள்
தீங்குசெய்யும்திமிர்வாதநோய்களுந்
வாங்குமென்றல்லோவகுத்தனர்தேறனே. (௩௬௭)

(திமிர்படைக்கு)

தேரன்சொல்மொழிதிசையிலும்பொய்யாது
வேறமருந்துவிரும்பியுறைக்கிறேன்
கூறும்பரங்கிச்சக்கையறுபலம்
தூறும்நன்னாரிதோன்றுநறுக்கிடே. (௩௬௮)

நறுக்கியேசமன்நன்றாகச்சூரணி
குறிக்குச்சீனிகுறிப்பாய்சமபலம்
தறுக்கிலாமல்தனிப்பசும்பாலிலே
முறுக்கிமண்டலமுற்றும்பொசித்திடே. (௩௬௯

சய ரோகத்திற்குச் சூரணம்.

பொசித்தபோதுபுகலுஞ்சயரோகம்
நசித்தசூரணம்நன்முயுறைக்கிறேன்
வசித்தமதுரம்வாகானசந்தானம்
முசித்தகோஷ்டமுமுற்றுஞ்சமனெடே. (௩எ0)

எடுத்துவாகையெழிலானவோமமும்
அடித்துப்பூலாஅழகியசீரகம்
தொடுத்தபத்திரிதோன்றுங்கருஞ்சீரகம்
முடித்நாகப்பூமுற்றும்பொடிசெய்யே, (௩எக)

செய்துசீனிச்சிறக்கச்சமபலம்
கொய்துதேனில்குறிப்பாயருந்திட
நைதுரோகம்நவிலுங்காசரோகம்
மெய்துவிட்டுமிரண்டோடிப்போகுமே. (௩எ௨)

(கண்படலத்திற்கு.)

போகுங்கண்ணில்பொருந்தும்படலங்கள்
ஏகுங்கண்டமிறங்கியேயோடுதற்
காகுங்சங்குகனத்தபிலரோகணி
ஆகும்வெள்ளியரியபொன்னுமெடே. (௩எ௩)

எடுத்துக்கெம்புயெழிலானமுத்துடன்
அடுத்துதுத்தமழகியமோதகம்
கடுத்ததுருசுகடியவெண்காரமும்
தொடுத்துமேபழஞ்சாற்றிலடுத்திடே. (௩எச)

அடுத்துச்சாமமறுதுபவானபின்
தொடுத்துவெண்ணெயில்தோன்றமுப்பதுவாம்
எடுத்துக்கண்ணினெழிலானமண்டலம்
கெடுத்திடாமலேகெட்டியாய்ப்பூட்டிடே. (௩எ௫)

சகல சுரங்களுக்கு கியாழம்.

பூட்டும்போதுபுகழுங்கியாழங்கேள்
நாட்டுவெம்பிநவிலுந்தூதுவளை
காட்டுங்கத்திரிகருதுமாடாதோடை
சூட்டுக்காந்திசுருக்காகத்தூக்கிடே. (௩எ௬)

தூக்கித்தண்டுதுடியாய்ப்பற்படகம்
தாக்கிசெங்தொட்டிதளியவிருவேம்பு
தோக்கிமாதனோதோன்றும்பேய்ப்புடலும்
வாக்குதப்பாமல்வாகாய்நிறுத்திடே. (௩௭௭)

நிறுத்துயேயுரல்நோயிடித்துமே
கறுத்தவாலுமிளகுகசகசா
அறுத்ததாளிசமழகியபத்திரி
வறுத்தச்சுக்குமேவாகாயெடுத்திடே. (௩௭௮)

எடுத்துதேசாவரமுமரத்தையும்
கொடுத்துக்கல்லூல்கூறயிடித்துமே
அடுத்துமேசலமன்பாகக்காய்த்துமே
தொடுத்துமூன்றுநாள்தோன்றக்குடித்டே. (௩௭௯)

குடித்தபோதுகுளிர்சுரமோடிடும்
அடுத்தச்சன்னியலறியேயோடிடும்
தொடுத்தபத்தியங்தோன்றுமுப்பாகாது
அடுத்ததேறையன்வாக்குப்பொய்யாதிதே. (௩௮௰)

அண்டவாதத்திற்கு.

பொய்யாதய்யாபுகலுமண்டவாதம்
அய்யாசிற்றண்டம்அரியாமிளகுடன்
துய்யாவாமணக்கெண்ணெயிற்காச்சியே
மெய்யாய்மண்டலமேவிடவுண்டிடே. (௩௮௧)

உண்டபோதுமுழலுமண்டவாதம்
கண்டமாலைகதரியேயோடிடும்
திண்டரோகங்தெறித்துவுடலைவிட்
டண்டிடாமல்தரணிவிட்டோடுமே. (௩௮௨)

கபாலபீனிசத்திற்குத் தயிலம்.

ஓடுமேகபாலவலிசன்னிக்கு
தேடுஞ்சுக்குத்திடமாமபெருங்கிழங்
காடுகண்டங்கத்திரிசமூலமும்
கூடுந்தேசாவகமுஞ்சமனெடே. (௩௮௩)

எடுத்துப்பத்திரியேலமிலவுங்கமும்
கொடுத்துமதுரங்தோன்றுவிருசீரம்

முடித்துமேமுலைப்பாலிலரைத்துமே
வடித் துவெண்ணெயில்வாகாகக்காய்ச்சிடே. (௲-௮௪

காய்ச்சுமெண்ணெய்க்கருதும்பதத்தினில்
மூச்சிடாமல்முதியவோர்மண்டலம்
தேய்ச்சுவாரந்திறமாயிருமுறை
நோய்ச்சிடாமல்நெருங்கமுழுகிடே. (௲-௮௫)

முழுகும்போதுமுறையுந்தலைவலி
கழுகும்பீனசம்நவிலுஞ்சன்னிதோஷம்
ஒழுகுநாசிலுற்றநீர்ப்பாய்ச்சலும்
அழுகுங்கண்ணீரலறியேயோடுமே. (௲-௮௬

புருஷர் மதன லீலாவதிக் குளிகை.

ஓடுமாந்தருறையும்லீலாவதிக்
காடுக்குளிகைகருதியுரைக்கிறேன்
தேடுமுருங்கைதிடமானவித்தும்
நீடுஞ்சாரப்பருப்புமெடுத்திடே. (௲-௮௭)

எடுத்திடப்பாயெழிலானவபினியும்
அடுத்திடுமாலனரசுவித்துடன்
தொடுத்திடுங்கஞ்சாதோன்றும்பூனைக்காலி
கொடுத்திடும்பூமிசர்க்கரைசேர்த்திடே, (௲-௮௮)

சேர்த்துத்தேத்தான்சிறந்தபேரீச்சனும்
பார்த்துப்பலகரைபசருமராட்டியும்
கோர்த்துப்பூரங்குலாவியகுங்குமம்
தீர்த்துச்சாம்பிராணிப்பதங்கமுந்தூக்கிடே. (௲-௮௯)

தூக்கியேபசும்பாலிலவித்துமே
தார்குகல்வந்தனியப்பொடித்துமே
போக்கில்லாமல்பொருந்துநெய்சீனியில்
வாக்குதப்பாமல்வாகாய்க்கிளறிடே. (௲-௯௰)

கிளறிவீசனைக்கிருபையாய்ப்போற்றியே
தளரமண்டலந்தானுண்ணிருவேளை
வளரப்பத்தியம்வாகாயினை சியும்
சளரக்காடையுஞ்சதுராசயுண்டிடே. (௲-௯௧)

உண்டபோதுமுடலுமுறுக்கேறி
கண்டபோதுகருதியதாதுவும்
நிண்டவாயுநெருங்கியகுத்துபோம்
பண்டுபோல்மேனிப்பாங்காயிறுகுமே (௩௬௨)

இறுகும்லீலேயிலிருநூறுகன்னியாம்
மறுகுமண்டலமதிப்பாய்ப்புணர்ந்திடு
குறுகுந்தேரையன் குருமொழிபொய்யாது
சுறுகுமாந்தர்க்குநயந்துவுரைத்ததே. (௩௬௩)

வண்டுகடி தடிப்புக்கு சவ்வீரக் களிம்பு

உரைக்குமாந்தருறையும்வண்டுகடி
திரைக்கும்வீரக்களிம்புவுரைக்கிறேன்
முரைக்கும்வீரத்தைமுயலும்வெண்ணெய்தனில்
கரைக்குங்கல்வத்தில்கலக்கஎழைத்திடே. (௩௬௪)

எழைத்துமேகரணக்கள்தடிப்புக்கு
குழைத்துமண்டலங்குறிப்டாகப்பூசிடில்
தழைக்கும்புண்கள்தடுமாறியோடிடும்
பிழைக்கமாந்தற்குப்டேணியுரைத்தே. (௩௬௫)

உஷ்ண காங்கைக்கு குடிநீர்,

உரைத்தக்காந்தலுளறியேயோடுதற்
கரைத்தவறுகன்கருதியநெருஞ்சிலும்
நிரைத்தமுருங்கைநேரும்பிடியீர்க்கு
வரைத்தப்பாமலேவாகாகக்காய்ச்சிடே. (௩௬௬)

காய்ச்சுசீரங்கருதுமிளகுடன்
மாய்ச்சிடாமல்மறுமுறைக்காய்ச்சிடு
தீய்ச்சுவெண்ணெய்சிறக்கக்கழஞ்சியாம்
மூய்ச்சிடாமல்முறைப்படியுண்டிடே. (௩௬௭)

உண்டபோதுமுரையும்வயிற்வலி
கண்டகாங்கைகதறியோடிடும்
வண்டரோகம்வலிகடுப்புந்தீரும்
தெண்டன்தேறன்தெளிவாயறைந்ததே, (௩௬௮)

குடைச்சலுக்குத் தயிலம்.

அறையுமாந்தரலருங்குடைச்சலுக்
குறையுமயிற்பீலிகுறிக்குமனொசிலே
நிறையுஞ்சட்டியில்நோய்க்கருக்கியே
பறையும்வேப்பெண்ணெய்பாங்காகச்சேர்த்திடே. (௧௯௯

சேர்த்துத்தயிலஞ்சிறப்பாயிறக்கியே
பார்துங்குடைச்சல்பதமாகப்பூசிடில்
ஆர்த்துவாயுவலறியேயோடிடும்
தூர்த்துப்பத்தியந்தோன்றுமுப்பாகாதே. (௨௱)

மாந்த தோஷத்திற்கு குளிகை.

ஆகாதய்யாவளருமாந்ததோஷம்
வாகாவில்வம்வகுக்குவிளாவுடன்
சாகாவேளைசதுர்கஞ்சாங்கோரையும்
போகாசின்னிபொருந்துமோச்சையெடே. (௨௱௧)

எடுத்துக்கத்திரிபெழிலானபச்சையும
கடுத்துத்தும்பைகருதும்முக்கா
தொடுத்துவேலிதொகுக்கும்நுணவுடன்
வடுத்தசாரணைவாகாச்சமன்றூக்கே. (௨௱௨)

தூக்கிக்காவளைத்துய்யகொழுஞ்சியும்
தாக்கும்பிரண்டைதனிசித்திரமூலமும்
போக்கில்லாமல்பொருந்துங்கையானுடன்
வாக்குதப்பாமல்வசம்புநிறுத்திடே. (௨௱௩)

நிறுத்துவோமம்நெருங்கிபசுக்குடன்
குறுத்துக்குப்பைக்குறித்திடுமேலமும்
அறுத்துக்கோஷ்டமழகியசீரகம்
திறுத்துரோசனைதீரச்சமன்சேரே. (௨௱௪)

சேர்த்துக்கல்வஞ்சிறப்பாய்ப்பொடித்துமே
பார்த்துநாய்வேளைப்பகரும்ரசத்தினில்
தீர்த்தஞ்சாமந்திறமாயரைத்துமே
கோர்த்துமாத்திரைக்குளிகைபோல்செய்திடே. (௨௱௫)

அ

செய்துதேனில்சிறக்கும்கன்னிப்பாலில்
எய்துநாய்வேளைஏற்குந்தும்பைச்சாற்றில்
பைதுகாலையில்பாங்காயருந்திட
நைதுமாந்தம்நவின்றோடிப்போகுமே. (சாசு)

(தாளக பற்பம்.)

போகுமாந்தர்புகலுமரிதாரம்
ஆகுஞ்சிங்கியரியகடுக்காயால்
பாகுசாமம்பதமாயரைத்துமே
வாகுசிலைவலுவாய்ப்பொதிந்திடே. (சாஎ)

பொதிந்துகுக்குடம்பொருந்தவேபோட்டிடு
வதிந்துமாயானைவாகாகப்போற்றியே
பதிந்துபற்பத்தைப்பாங்காயருந்திடில்
நதிந்துசயரோகம்நவின்றோடிநீங்குமே. (சாஅ)

குன்மவாந்தி எப்பத்திற்கு சியாழம்.

நீங்குமேப்பநெருங்குங்குன்மத்திற்கு
பாங்குவேலம்பகரும்நெல்லிமுள்ளி
தாங்குந்நெற்பொரிதனியபசும்பயற்
வாங்குவில்வம்வகைக்குச்சமன்சேரே. (சாகூ)

சேர்த்துச்சூரணஞ்சிறப்பாய்ப்பொடித்துமே
பார்த்துமேயிளநீரிலரைத்துமே
வர்த்துக்கோமியம்வாகாகக்காய்ச்சுமே
தூர்த்துமண்டலந்துணிவாகவிண்டிடே. (சாய)

உண்டபோதுவுரையுமிருமலும்
கண்டகுன்மகருதியயேப்பமும்
நீண்டவாந்திநெருங்கியவூறலும்
அண்டிடாமலவனிவிட்டோடுமே. (சாயக)

ஓடும்பத்தியமுற்றபருப்பாகும்
நீடுமேபசும்பாலும்வென்னீருண்ணு
ஆடுந்தூதுளையாகும்பொன்னாங்கண்ணி
தேடிமண்டலஞ்சிறப்பாயருந்திடே. (சாயஉ

காமரேசரிக் குளிகை.

அருந்துமாந்தற்கறையுறேன்கேசரி
திருந்துகுளிகைதிறமாமதனப்பூ
பொருந்துங்கிராம்புபுகலுஞ்சாதிக்காயும்
குருந்துமொக்குகுறிப்பாய்ச்சமனெடே. (சாயஙு)

எடுத்துத்தங்கமெழிலானபற்பமும்
அடுத்துச்சாம்பிராணியத்திமுருங்கையும்
வடுத்துமதுரம்வாகாவயினியும்
தொடுத்துமுருங்கைப்பூச்சாற்றாலரைத்திடே. (சாயச)

அரைத்துச்சுண்டைக்காயளவுப்பிரமாணம்
வரைத்துமேபசும்பாலிலருந்திடு
நிரைத்துமண்டலம்நெருங்கியபத்தியம்
குறைத்திடாமல்குறிப்பாகவுண்டிடே. (சாயரு)

உண்டபோதுமேயோங்கிடும்விர்த்தியாம்
கண்டதாதுகருதுமுருக்கேறி
அண்டயானையதிகபலமுண்டாம்
தொண்டன்யோகித்தொகுக்குமுறையிதே. (சாயகூ)

முறையாம்போகமுனேந்துசெய்தாலுமே
நிறையாம்விந்துவுநீணிலந்தான்விழா
சிறையாமாந்தர்சினேந்துநடுங்குவார்
வறையாமோகம்வதிந்துமேவாடுவார். (சாயஎ)

வாடுவார்மாயக்கிருஷ்ணவதாரனும்
நீடுமேபதினாயிரம்பெண்களை
கூடுபோகக்குலாவிபுணர்ந்திட்டான்
தேடுங்குளிகைதெளிவாயருந்திடே. (சாயஅ)

அருந்தும்போது அறையுறேன்மாந்தரே
தெரிந்துமாதர்தினம்நூறும்போதாது
குருந்துபார்வைகுமரிவசமாவார்
பருந்துமன்மதன்பகரும்லீலைசெய்யே. (சாயகூ)

தாதுபுஷ்டிக்கு குளிகை.

செய்யலீலைசெழிக்கத்தாதுபுஷ்டி
ஐய்யவாலைரசமுமறுபலம்

துய்யலிங்கந்துடியாமிருபலம்
வய்யகிராம்புவகுக்கும்வீரானெடே. (சஉம)

எடுத்துக்கஞ்சாவெழிலானகாரமும்
அடுத்துச்சாதிக்காயானமுருங்கையும்
தொடுத்துக்காசுடன்தோன்றுபத்திரியும்
விடுத்துப்பூனைவிருப்புஞ்சமன்சேரே. (சஉக)

சேர்த்துச்சாரச்சிறந்தபூமிக்கிழங்
கார்த்துமேசமன்கருதுமுக்கண்ணிலை
பார்த்துவுள்ளினில்ப ங்காய்ப்பொதிந்துமே
தூர்த்துக்குடந்துணிவாகப்போட்டிடே. (சஉஉ)

போட்டுவந்துபுகலுமாவின்பாலில்
கீட்டுச்சாமம்நெருங்கவரைத்துமே
பூட்டுமுண்டைபொருந்துங்கழற்சிக்காய்
கூட்டுமண்டலங்குறிப்பாகவுண்டிடே. (சஉங)

உண்டுமுப்புமுறையும்புளிதள்ளு
கண்டுசர்க்கரைக்காய்ச்சியபாலுண்ணு
மெண்டுபோகம்பிரியமாய்ச்செய்திடு
விண்டுதேறன்விரும்புமொழியிதே. (சஉச)

மொழிந்தகுருமொழிமுற்றும்பொய்யாதுகாண்
அழிந்துபோகமரிவைபுணர்ந்திடில்
குழிந்துவிந்துகுவலயன்தான்விழா
விழிந்துஸ்தம்பனம்வாகாயிறுகுமே. (சஉரு)

சர்வசுர வேங்கைக் குளிகை.

இறுகுமாந்தரிறக்குஞ்சுரத்திற்கு
அறுகுஞ்சங்குவரியகௌவுரியும்
குறுகுந்தாரங்குறிப்பாய்சப பலம்
முறுகுமேமூலைப்பாலிலரைத்திடே. (சஉசு)

அரைத்துப்பச்சைப்பயரளவாகவே
உரைத்துமேமுலைப்பாலிலருந்திடு
கரைத்தமேசுரங்கதறியேயோடிடும்
முரைத்தகுருமொழிமொழிந்ததுவுண்மையே. (சஉஎ

சுரத்திற்கு அபின் குளிகை.

உண்மையாகவுரைப்பேன்குளிகையொன்
றுண்மையானதனிச்சுக்குசீரகம்
வண்மைதிப்பிலிவருக்குமிளகுடன்
இண்மையாம்பின்றீரச்சமவெடைடே. (௪௨௫)

எடுத்துக்காந்தியெழிலாங்கிஷாயத்தால்
அடுத்துச்சாமமறுபதுவானபின்
வடுத்துக்குன்றிபோல்வாகாயுருட்டியே
தொடுத்துத்தேனிலேதுவளக்கொடுத்திடே. (௪௨௬)

இதுவும் சுரக்குளிகை.

கொடுக்கும்பத்தியங்கூறும்புளியாகா
அடுக்குங்குளிகையன்பாயுரைக்கிறேன்
தொடுக்கும்லிங்கமுந்தோன்றுவெண்காரமும்
முடுக்கு நாபிமுசியச்சமன்தூக்கே. (௪௩0)

தூக்கித்திப்பிலி துய்யமிளகுடன்
தாக்குவாளந்தனிப்பழச்சாற்றிலே
போக்கிலாமல்பொருந்தவரைத்துமே
வாக்குதப்பாமல்வாகாயுருட்டிடே. (௪௩௧)

உருட்டிக்குன்றிபோலாங்குமாத்திரையை
அருட்டுமேசுரமன்பாயருந்திடு
தெருட்டுப்பத்தியந்தீரப்புளிதள்ளு
வெருட்டுதேறையன்வேண்டியுரைத்ததே. (௪௩௨)

அமுர்தசஞ்சீவிக் குளிகை.

உரைக்குஞ்சஞ்சீவியுற்றகுளிகையொன்
றிரைக்குஞ்சாதிலிங்கம்வெண்காரம்
வரைக்குஞ்சுக்குவதிர்கடுதிப்பிலி
முரைக்குங்கிராம்புமுற்றிலும்பொடித்திடே. (௪௩௩)

பொடித்துமேபழச்சாற்றாலரைத்துமே
வடித்துக்குளிகைவாகாயுருட்டியே
நடித்துதேனில்நறுநெய்யிலீய்ந்திட
அடித்தகிரிசுரமலறியேயோடுமே. (௪௩௪)

வாலேசுகபேதிக் குளிகை.

ஓடும்பேதியுலகில்மாந்தருக்கு
தேடுமிளகுதேர்ந்ததொருபலம்
கூடுஞ்சுக்குக்குறித்திடுமீர்பலம்
வாடுந்திப்பிலீவகையரப்பலமெடே. (சகூரு)

எடுத்துவோமமெழிலானரோகணி
அடுத்துகோஷ்டமுமன்பானவாளமும்
தொடுத்துமேபழச்சாற்றாலரைத்துமே
கொடுத்துபேதிக்குழம்பியேயாகுமே. (சகூசு)

சகலருக்கும் பேதிமாத்திரை.

ஆகும்பேதியறையுங்கிராம்புடன்
வாகுவோமம்வரையும்லவுங்கமும்
பாகுசிரம்பகருஞ்சாதிக்காயும்
கூகுரீருங்குறிப்பாய்சமன்தூக்கே. (சகூஎ)

தூக்குசுக்குடன் துய்யகஸ்தூரியும்
தாக்கிவேளைதளியவசம்புடன்
போக்கில்லாதபொருந்துங்கஸ்தூரியும்
நோக்கிவென்னீரில்நருங்கவரைத்திடே. (சகூஅ)

அரைத்துச்சுண்டைக்காயளவுப்பிரமணம்
கரைத்துவென்னீரிற்காலேயில்தானீய
வரைத்தபேதியுவாகாப்பிழிந்திடும்
திரைத்தவென்னீருமன்னமுமுண்டிடே. (சகூகூ)

வாந்திபேதிக்கு கற்பூராதிக் குளிகை.

உண்டபோதுமுறையுமூழிக்காற்று
அண்டிடாமலவனிவிட்டோடுதற்
கண்டுலிங்கங்கருதுகற்பூரமும்
பண்டுசாம்பிராணிப்பாய்காய்நிறுத்திடே. (சசய)

நிறுத்தியொன்றாகிகழவரைத்துமே
முறுத்துமாத்திரைமெழுகாயுருட்டியே
பொறுத்துமாற்வேளைபொருந்தவேதானீயில்
கறுத்தபேதிக்கதறியேயோடுமே. (சசக)

ஓடும்பத்தியமோதுகோதுமையாம்
ஆடுங்கஞ்சியடிக்கடிதான்கொடு
நீடும்பேதிநெருங்கியேநின்றிடு
தேடுங்கற்பூராதிதெளியவுரைத்ததே. (௪௪௨)

சாம்பிராணிக் குளிகை.

உரைத்தக்குளிகையோங்குஞ்சாம்பிராணியாம்
நிரைத்தசட்டியில்நெருகப்பொதிந்துமே
வரைத்தச்சீலைமண்வாகச்செய்திடு
வரைத்தவெண்ணெயில்பாங்காயெரித்திடே. (௪௪௩)

எரித்தப்பூவையெழிலாயெடுத்துமே
கரித்தவெற்றிலைக்கருதுங்கச்சாயத்தில்
எரித்தமுளகுகுன்றுபோலுண்டிட
முரித்ததாதுமுயன்றுயிறுகுமே. (௪௪௪)

கட்டுவாதிமாத்திரை.

இறுகுமேமலமெழிலாயுடைந்திடில்
குறுகும்பத்திரிகூறுஞ்சாதிக்காயும்
அறுகுங்கோஷ்டமதிவிடையம்பிசின்
நிறுகுமாசக்காய்நேராயெடுத்திடே. (௪௪௫)

எடுத்துக்கோஷ்டமுமேலலவுங்கமும்
அடுத்துச்சரக்குவன்பாய்ச்சமனெடை
தொடுத்துமாதுளங்காயிற்பொதிந்துமே
முடுத்துச்சீலைமுனையாகச்செய்திடே. (௪௪௬)

செய்துகுக்குட்டஞ்சிறக்கப்பொதிந்திடு
எய்துசரக்கையெடுத்துமேகல்வத்தில்
கொய்துகஞ்சாகுறிக்குங்கையான்றனில்
பெய்துமெழுகாய்பேணியறைத்திடே. (௪௪௭)

அறைத்துமாத்திரையன்பாயுருட்டியே
உறைத்துமேபசும்பாலிலருந்திட
முறைத்தபேதிமுயன்றுமேநின்றிடும்
வறைத்துமேபுளிவாகாகவுண்டிடே. (௪௪௮)

இலிங்கக் கோடபி.

உண்டபோதுமுறைகாச்சல்நீங்கிட
சண்டலிங்கஞ்சருதுமுலைப்பாலில்
அண்டகூடனகலுஞ்சாம்பிராணியும்
துண்டசுக்குமேதுய்யச்சமனெடே. (௪௪௯)

எடுத்துதிப்பிலியேலமிளகுடன்
அடுத்தப்பத்திரியானலவங்கமும்
தொடுத்தப்பட்டைதுளுங்கிராம்புசேர்
கொடுத்துத்தேனில்குறிப்பாயரைத்திடே. (௪௫௰)

கற்பூர சலாசத்து பற்பம்

அறைக்கும்பற்பமறைவேனொருபாகம்
மறைக்குங்கற்பூரசத்துப்பலம்வாங்கி
நிறைக்குஞ்செருப்படைநேர்ந்தசாற்றிலரை
முறைதப்பாமலேமூன்றுசீலைசெய்யே. (௪௫௧)

செய்துக்குக்குடஞ்சிறந்தபுடமிட
எய்துபற்பமெழிலுருவட்டம்போல்
கொய்துமேநிறங்குறித்திடும்பற்பத்தை
நைதுவெண்ணெயில்நயந்துவருந்திடே. (௪௫௨)

அருந்திடப்பித்தமறியதடிப்புகள்
குருந்திடும்வெள்ளைகுறிக்கும்பிரமேகமும்
திருந்துமேயுடல்செறிந்துமேயோடிடும்
வருந்துபற்பம்வகையாகவுண்டிடே. (௪௫௩)

சலாசத்துப் பற்பம்.

உண்டபோதுமுடலைவிட்டேகுதற்கு
கண்டுவெண்காரம்கருதுஞ்சலாசத்து
பண்டுமேபழச்சாற்றிலரைத்துமே
ரண்டுகுக்குடம்நயந்துமேபோட்டிடே, (௪௫௪)

போட்டபோதுபொருமியேபற்பமாம்
நீட்டவெண்ணெயிற்நோயருந்திட
காட்டுவெள்ளைக்கடுப்புவருசலும்
கேட்டமாசதிலசைத்தோடிப்போகுமே. (௪௫௫)

போகும்பத்தியம்பொருந்துமுருகையாம்
ஆகுங்கத்திரியானவுப்புக்கண்டம்
பாகுசர்க்கரைப்பாலும்பழமுண்ண
நீகுமேகம்நெருங்கியேயோடுமே. (௪௫௬)

வெள்வங் கற்பம்.

ஓடும்வங்கமுசுக்கைபொதிந்துவே
நீடுமேபுடம்நேராகப்பூண்டிட
தேடுபற்பந்தெறிக்குஞ்சங்குபோலாம்
ஆடுமண்டலமன்பாகத்தின்றிடே. (௪௫௭)

தின்றபோதுதிமிர்பெருக்குஷ்டநோய்
தன்றுவாதந்தடிப்புகருக்குஷ்டம்
குன்றுகுன்மம்குழவியேயோடிடுமே
வென்றுதேறன்விரும்பியறைந்ததே. (௪௫௮)

வெண்குட்டந்தீர தங்கபற்பம்.

அறைந்தபற்பமறியவொருபாகம்
நிறைந்ததங்கம்நெருக்குமொருபலம்
உறைந்தமுள்ளியினேக்குஞ்சமூலத்தில்
வறைந்துமேபொதிவாகாய்ப்புடமிடே. (௪௫௯)

இட்டபோதுயிறைஞ்சியேபற்பமாம்
திட்டமாகத்திறைக்கும்வெண்ணெய்தனில்
அட்டமண்டலமன்பாயருந்திட
குட்டநோய்முதல்குடியேகிப்போகுமே. (௪௬0)

வெள்ளி பற்பம்.

போகுமேவெள்ளிப்போற்றிடும்பற்பஞ்செய்
ஆகுஞ்செம்முள்ளியன்பாயரைத்துமே
வாகுமுழுப்புடம்வண்மையாய்ப்போட்டிட
பாகுபற்பம்பவளநிறமாமே. (௪௬௧)

நிறமாம்பற்பம்நிகழுமுக்காவேளை
உறமாயரைத்துஒங்குசீலைசெய்து
திறமாய்க்குக்குடந்தீரப்பொதிந்தடு
குறமாய்வெண்ணெயில்குறிப்பாயருந்திடே. (௪௬௨)

அருந்திடகாசமலறியேயோடிடும்
பொருந்துமேசயம்பொங்கியேநின்றிடும்
திருந்துமீளைசிதறியேதங்கிடும்
வருந்துசூலைவனம்விட்டுவோடுமே. (௪௬௩)

சிறுகண்ணுகைப் பற்பம்.

ஓடுநாகமுனையும்பற்பங்கேளு
நீடுமம்மான்னெருக்கும்பச்சையிலை
கூடுந்தேங்காய்குறிப்பளவாகவே
போகுமேபலம்பொருந்தப்பொதிந்திடே. (௪௬௪)

பொதிந்துபற்பமும்போற்றுந்தவளமாம்
வதிந்துநெய்தனில்வாகாயருந்திட
கதிந்துமூலமுங்கருதியவெள்ளையும்
சதிந்துரோகமுஞ்சடுதியில்நீங்குமே. (௪௬௫)

மேகங்களுக்கு மருந்து.

கட்டுமெள்ளெண்ணெய்கருதியமாவினில்
ஒட்டும்பரங்கியோங்கியசூரணம்
எட்டுந்தும்பையெழிலானசர்க்கரை
மட்டுமொன்றாய்மசியவேகண்டிடே. (௪௬௬)

பல்நோவுக்கு இயாழம்.

கண்டுகராங்கருதுமாவாரையும்
வெண்டுகியாழம்விரும்பியேகாச்சிடு
மொண்டுமூன்றுநாள்முசியவேகொப்பளி
கொண்டுபல்நோய்குடியோடுமுண்மையே. (௪௬௭)

தந்தவாயுவுக்கு வேறு.

உண்மைவாதமடக்கிகருநொச்சி
திண்மைமாதுளைதேர்ந்தகருங்காலி
வண்மையாகவகுக்கும்வேதுதன்னை
பண்மைபாகவேபத்துமேல்கட்டிடே. (௪௬௮)

வயிற்று வலிக்கு மருந்து.

கட்டிச்சிக்குசழுறுமரைப்பலம்
அட்டிவெள்ளுள்ளிஅடுக்காயிருபலம்

முட்டிக்கோஷ்டமுளைப்பாய்சமபலம்
கொட்டியெண்ணெயில்கொதிக்கயிறக்கிடே. (சசுகூ)

எறக்கிமண்டலமெழிலாயருந்திடில்
உறக்குமேவலியோக்கும்பெருஞ்சூலை
திறக்கமானதிமிர்வலிகுன்மமும்
பறக்குமென்றுபகர்ந்தனர்தேரனே. (சஎய)

விரைவாதத்திற்கு.

தேறன்கூர்மொழிதிசையிலும்பொய்யாது
கூறவாதங்குறிக்கும்விரைவாதம்
தூறமருந்துதுறையாயுரைக்கிறேன்
நீறமானநெருங்குமுப்புமெடே. (சஎக)

எடுத்துச்சீனமெழிலானசூதமும்
கடுத்துலிங்கங்கருதியசூதமும்
அடுத்துமிளகுஅரிதாரவீரமும்
தொடுத்துவொன்றாய்த்துகளப்பொடித்திடே. (சஎஉ)

பொடித்துத்தேனில்புகலவரைத்திடு
கடித்துமண்டலங்காலையருந்திடு
வடித்தசோறுடன்வரையும்பசும்பயற்
துடித்துநெய்யுடன்துணிவாகவுண்டிடே. (சஎங)

உண்டபோதுமுறையும்விரைவாதம்
கண்டுசெய்குவோர்காசினிலில்லையே
தொண்டுசெய்துமேதோற்றுங்குருவிடம்
பண்டுபோல்முறைபகர்ந்துகொடுத்ததே. (சஎச)

கணமாந்தக் குளிகை.

கொடுத்துமாந்தங்குளிகையகலிட
அடுத்துரோசனையானகஸ்தூரியும்
தொடுத்தசண்பந்தோன்றுவிலாமிச்சும்
வடுத்தபேதிமதுரமுந்தூக்கிடே, (சஎரு)

தூக்கிவேலியின்றய்யகளஞ்சிடை
தாக்கியொன்றாய்த்தனிமுலைப்பாலிலே
போக்கிலாமல்பொருந்தவரைத்துமே
வாக்குத்தப்பாமல்வருந்திகொடுத்திடே. (சஎசு)

கொடுத்தபோதுகுழவியெழுமாந்தம்
நடுத்தசெவ்வாப்புநடுக்கியேயோடிடும்
கடுத்தமுக்கல்கலக்கியேநின்றிடும்
வடுத்ததேரையன்வாக்குப்பொய்யாதிதே. (௪௭௭)

(குஷ்டத்திற்கு.)

பொய்யாதய்யாபுகலுங்குருமொழி
அய்யாகுஷ்டமகலும்படியாக
மெய்யாகள்ளிவிரும்புமிலைக்கள்ளி
துய்யாபரங்கிச்சக்கைநிறுத்திடே. (௪௭௮)

நிறுத்தியொன்றாய்நெகிழயரைத்துமே
கறுத்திடாமல்கருதியகுக்குடம்
பொறுத்துபற்பம்பொருந்துஞ்சாம்பல்நிறம்
வறுத்துப்பஞ்சாங்கம்வாகாவுண்டிடே. (௪௭௯)

உண்டபோதுவுறுத்தும்பெருக்குஷ்டம
கண்டமாலைகருதியவெள்ளையும்
அண்டவாயுவபானனீறுகளும்
கொண்டுகர்னக்குடியோடிப்போகுமே. (௪௮௰)

போகும்பத்தியம்போற்றும்பிரண்டையாம்
ஆகும்வெள்ளாட்டிறைச்சிவுப்புக்கண்டம்
தாகும்பாலுசரிசீனிகற்கண்டு
வாகுமண்டலமதிப்பாகத்தின்றிடே. (௪௮௧)

தாம்பர பற்பம்.

தின்றிடபற்பந்திறமாயுரைக்கிறேன்
நன்றுதாம்பாகவிலுமொருபலம்
சென்றுமேகருக்குன்றியரைத்துமே
குன்றிடாமல்குறிப்பாய்ப்புடமிடே. (௪௮௨)

இட்டபோதுயிறுகியேபற்பமாம்
துட்டைநெய்யில்தோன்றுமரிசிடை
அட்டமண்டலமன்பாயருந்திடில்
குட்டநோய்பதினெட்டுமகலுமே. (௪௮௩)

நெல்லிக்காய் கெந்திபற்பம்.

அகலும்பற்பமறைவேனொருபாகம்
நிகலும்புரசைநோரயரைத்துமே
புகலுஞ்சீலைபொருந்தவலுவுடன்
பகலின்சூரியன்பற்பமுமாமே. (௪அ௪)

ஆகும்பற்பமரிசிப்பிரமாணம்
வாகுதேனில்வகுக்குமோர்மண்டலம்
பாகுபத்தியம்பாங்காயருந்திடில்
நோகுமேகம்நொருங்கியேயோடுமே. (௪அ௫)

அண்ட வாயுவுக்கு.

ஓடுமேயண்டமுற்றகருவினை
நீடுலிங்கமும்நேர்ந்தகந்தகமும்
வாடும்பூரமும்வகுக்குமரிதாரம்
தேடுந்தேனில்தெளிவாயரைத்திடே. (௪அ௬)

அரைத்துக்குன்றிபோலானமாத்திரையை
முறைத்துதண்டலமுற்றுமருந்திட
கரைத்துப்பத்தியங்கருதுமுப்புக்கண்டம
உரைத்துமிளகுநீர்முசியவேயுண்டிடே. (௪அ௭)

உண்டபோதுவுறங்கும்விரைவாதம்
கண்டவாயுவுகடியகழல்வாதம்
அண்டவாயுவபானகடுக்கலும்
மிண்டுவாதமிறங்கியேநீங்குமே. (௪அ௮)

இ ர ச ப ற் ப ம்.

நீங்குமேசூதம்நெகிழவரைத்திட
ஓங்குந்தும்பையுறையுநெல்லியுடன்
வாங்குமவ்விடைவாகாயரைத்துமே
தீங்கில்லாமல்திறமாகத்தட்டிடே. (௪அ௯)

தட்டிக்குக்குடந்தனியவேபற்பமாம்
கட்டிதேனில்கருதுமோர்மண்டலம்
முட்டிக்கியாழமுறைப்படிக்காலையில்
நெட்டிடாமல்நெகிழவருந்திடே. (௪௯௰)

அருந்தும்போதுமறையாப்புவெள்ளையும்
திருந்துசூலையுந்திமிபெருங்குஷ்டமும்
வருந்துமேகமும்வாட்சிபாமாலையும்
பொருந்திடாமல்புவிட்டகலுமே. (சகூக)

மிருகார் சிங்கிபற்பம்.

அகலுஞ்சிங்கியறைவேனொருபாகம்
நிகலுவேம்புநிறைப்பழச்சாற்றினில்
சகலுஞ்சிங்கியைசாமமறுபது
புகலுமரைப்புபொருந்தவேபூண்டிடே. (சகூஉ)

பூண்டுபில்லைப்புகழாகத்தட்டியே
கூண்டுமுட்டைக்குறிக்குங்குக்குடமாம்
மாண்டுபற்பமறையுந்தவளமாம்
ஆண்டுமும்முறையன்பாகத்தின்றிடே. (சகூங)

தின்றபோதுதிரேகமிறுகிடும்
நன்றுதாதுநவிலும்நஷ்டங்களும்
குன்றிடாமல்குமிழியேதங்கிடும்
என்றுதேறையனெழிலாயறைந்ததே. (சகூச)

கலைமான்கொம்பு பற்பம்,

அறையுமானினழகியபற்பங்கேள்
நிறையுமேபழச்சாற்றாலரைத்துமே
திறையுமேரவித்தீரவேகாய்ந்தபின்
முறையுங்குக்குடமுற்றும்பொதிந்திடே. (சகூரு)

பொதிந்துதீயைப்பொருந்தப்புகட்டியே
வதிந்துமாயனைவாழ்த்தியெடுத்திடு
சதிந்துபற்பந்தனியநறுநெய்யில்
முதிந்துமண்டலமுற்றும்பொசித்திடே. (சகூசா)

பொசித்தபோதுபொருமலிரைப்புகள்
நசித்தமேனிநவிலுமிருமலும்
கசித்தரோகங்கதறியேநீங்கிடும்
பசித்தபற்பம்பகர்ந்தனற்தேறனே. (சகூஎ)

இலிங்க பற்பம்.

தேறன்கூர்மொழிதிக்கிலும்பொய்யாது
கூறபற்பங்குறித்திடுமிலிங்கமாம்
தூறமுருங்கைத்துளிர்கருங்குன்றியும்
திறவரைத்துதிறமாய்ச்சீலைசெய்யே. (௪௯௮)

செய்துகுக்குடந்தெரித்திடுபற்பமாம்
எய்துதேனிலெழிலாயருந்திட
நைதுமேசுரம்நவிலுமறுபது
தொய்துகானகந்துடர்ந்தோடிப்போகுமே. (௪௯௯)

நேத்திராஞ் சனக் கலிக்கம்.

போகுந்துத்தம்பொருந்துமுத்துவுடன்
ஆகுஞ்சங்குவரியரோகணியும்
பாகுவெள்ளிபகருமிந்துப்புடன்
வாகுநந்தியின்பூவாலரைத்திடே. (௫௱)

அரைத்துச்சாமமறுபதுவானபின்
கரைத்துவெண்ணெயில்காலையில்பூண்டிட
திரைத்தபித்தநீர்திரைக்கண்புகைச்சலும்
மரைத்தகண்ணுணிமறைந்துதானேடுமே. (௫௱க)

நேத்திராஞ்சன ஸ்தானத் தயிலம்.

ஓடுஞ்சந்தனமுய்யுந்தேவதாரம்
நீடுமதுரம்நெருங்கும்விலாமிச்சு
கோடுநெல்லிக்குறிக்குஞ்செங்கழுநீர்
வாடுமலலியுவாகாய்மிளகெடே. (௫௱உ

எடுத்துக்கோஷ்டயெழிலானபிரமியாம்
அடுத்துவாலுமிளகுகசகசா
தொடுத்தப்பத்திரிதோன்றுங்கருஞ்சீரகம்
கொடுத்துப்பாலில்குமுறவறைத்திடே. (௫௱௩)

அறைத்துயெண்ணெயிலன்பாகக்காய்ச்சியே
கரைத்துமெழுகாய்கருதும்பதத்தினில்
குறைத்துமேவடிகொண்டுகலயத்தில்
முறைத்துமண்டலம்முற்றுமுழுகிட. (௫௱௪)

முழுகும்போதுமுறையும்புகைச்சலும்
அழுகுங்கண்ணிலடர்ந்ததிரைமறை
ஒழுகும்பித்தநீரோங்கியமாலையும்
நழுகிகானகம்நாடாதுறங்குமே. (௫௰௫)

வாதம், அழ - க்கு மருந்து,

உறங்கும்வாதமொழியவெண்பதுக்கு
நிறங்கும்பூரம்நிகழுங்கற்பூரமும்
குறங்குமூலிகொடியவெண்காரமும்
மிறங்குகாரமும்வேண்டிசமன் தூக்கே. (௫௰௬)

தூக்கிலிங்கமுந்துய்யவொருபலம்
தாக்கிகெந்தந்தனியவிருபலம்
நோக்கிசூதம்நெருங்கக்கலந்துமே
வாக்குதப்பாமல்வாகாகச்சேர்த்திடே. (௫௰௭)

சேர்த்துக்கையான்சிறக்கவிருசாமம்
பார்த்துமேபதம்பாங்காயரைத்திடு
கோர்த்துக்குன்றிபோல்குறிப்பாயுருட்டியே
ஆர்த்துமூன்றுநாளன்பாய்க்கொடுத்திடே. (௫௰௮)

காக்கை வலிக்கு மருந்து.

கொடுத்திடும்வலிகுழவியேயோடுதற்
கடுத்தகள்ளியின்கருதிய வாளமும்
தொடுத்தகல்வந்துகள்வரைத்துமே
அடுத்துமூன்றுநாளன்பாகயீந்திடே. (௫௰௯)

ஈந்தபோதுயிறையுங்காக்கைவலி
மாய்ந்துகானகமடிந்துமேயோடிடும்
தோய்ந்துபத்தியந்தோன்றுமுப்பாகாது
வாய்ந்துதேரையன்வறைந்ததுவுண்மையே. (௬௰)

கபோலசன்னிக்கு எண்ணெய்.

உண்மைவெள்ளுள்ளியோங்கியநாபியும்
தண்மையாகியதண்ணீர்மிட்டான்கிழங்
கண்மையில்லாசருதுஞ்சாம்பிராணியும்
வெண்மையானசற்பூரமுந்தூக்கிடே. (௬௰௧)

தூக்கிவேப்பெண்ணெய்துய்யவறுபலம்
தாக்குஞ்சரக்குதனியவொருபலம்
போக்கில்லாமல்பொருந்தப்பதத்தினில்
வாக்குதப்பாமல்வாகாயிறக்கிடே. (ருயஉ)

இறக்கியீசனிணையடிபோற்றியே
உறக்கமண்டலமுச்சியில்தேய்த்துமே
திறக்குமாமணக்கெண்ணெயில்மூழ்கிட
பறக்குங்கபோலசன்னிபறந்ததே. (ருயந)

கபால பித்தத் திற்குக் கியாழம்.

பறக்கக்கியாழம்பச்சைப்பயறுடன்
சிறக்கநெற்பொரிசிறந்தசீனியுடன்
திறக்கச்சுக்குடன்சேர்ந்தமதுரமும்
நிறக்கவில்வமும்நேர்ந்தநிலவேம்பே. (ருயச)

வேம்புபற்படம்விரும்புநாழிசலம்
காம்புவெற்றிலேகடியவேலமுடன்
சோம்புமோரிடைதோன்றவெந்துமே
தேம்புகாலேவதளிவாயருந்திடே. (ருயரு)

அருந்தும்போதுவகலுமதமூர்ச்சை
திருந்துமேகபாலவலிபித்தமும்
குருந்துவாயூறல்கொடியபினத்தலும்
தருந்திடாமல்தரணிவிட்டோடுமே. (ருயசு)

மேகம்-உக-க்குமருந்து.

ஓடுமேகமுறைந்திடுமோந்தற்கு
ஆடும்பூரமழகியசூதமும்
தேடுலிங்கந்தெளிந்திடுதாரமும்
போடுகல்வம்பொருந்தவரைத்திடே. (ருயஎ)

அரைத்துத்தேனிலேபன்பாயுருட்டியே
கரைத்துப்பத்துநாள்காலேயருந்திட
வரைத்தமேகமறைந்துமேயோடிடும்
நிரைத்தமருந்துநேர்ந்ததுவுண்மையே. (ருயஅ)

உண்மைபத்தியமோங்குமிறைச்சியாம்
தண்மைமுருங்கைசாற்றுந்தூதுவளை
வண்மையிஞ்சியும்வகுக்குமெலிமிச்சம்
கண்மையெண்ணெய்கடுகுடன்நீக்கிடே. (ருயசு)

தீராத வெள்ளைக்கு மருந்து.

நீக்குமேவெள்ளைநீனிலமாந்தற்கு
பாக்குப்பட்டையில்பகருஞ்சிங்கிதனை
தாக்குகுக்குடந்தனியவிருமுறை
போக்கில்லாமல்பொருந்தவேயூண்டிடே. (ருஉய)

பூண்டபற்பம்புகலும்வெண்ணெய்தனில்
நீண்டமண்டலம்நேராயருந்திடில்
பாண்டுமேகப்பகரும்வெள்ளைப்புண்ணு
மீண்டுமேபோமெனவிரும்பியுரைத்ததே. (ருஉக)

கரப்பானுக்கு மருந்து.

உரைக்குமைந்தருறையுங்கரப்பனுக்
கரைக்கும்பூவரசன்காய்பாலுமுடன்
திரைக்கும்பூரமுந்தேறவரைத்துமே
மரைக்குந்தேங்காநெய்வாகாய்க்கலந்திடே. (ருஉஉ)

கலந்தயெண்ணெய்க்கருதுங்கரப்பனுக்
குலர்ந்திடாமல்குறிப்புடன்பூசிடு
அலர்ந்திடுஞ்சொரிஅலறியேயோடிடும்
மலர்ந்தயெண்ணெய்வகுத்தமுறையிதே. (ருஉந)

விக்கலுக்கு.

முறையும்விக்கலுமுற்றும்நடுங்கிட
பறையுமுத்திராட்சம்பாங்கானபற்பமாம்
நிறையுந்தேனினில்நேராயருந்திட
குறையும்விக்கல்குடியோடிப்போகுமே. (ருஉச)

வயிற்றிரைச்சல் பேதிக்கு.

போகுமேவயிற்பொருமலிரைச்சலுக்
காகுமிளகுகழறும்பருத்தியும்
பாகுவேலிப்பருத்திசமூலமாய்
ஆகுந்தேனிலரைத்தவேவுண்டிடே. (ருஉரு)

உண்டபோதுமுடலிலிறைச்சலுக்
கண்டபேதிகடியபொருமலும்
அண்டிடாமலவனிவிட்டேகியே
விண்டுமேகடல்விடுபட்டொளியுமே. (௫௨௬)

இரத்தக்கடுப்புக்கு.

ஒளியுமிரத்தமுடலைவிட்டேகுதம்
களியுமேயெழுத்தாணியிலைதனை
அளியுநெய்யிலடவாய்க்கிளறியே
வளியுமூன்றுநாள்வாகாயருந்திடே. (௫௨௭)

மூளைமூலத்திற்கு.

அருந்துமூலமறியேயோடுதற்
குருந்துகருனை குறிக்கும்பிரமியாம்
வருந்துமோரினில்வாகாயறைத்துமே
பொருந்துகாலையில்புகலக்கொடுத்திடே. (௫௨௮)

கொடுத்தபோதுகுமறியேயோடிடும்
அடுத்தபப்பத்தியமானபச்சைப்பயற்
தொடுத்தமுள்ளாங்கிதோனறுவெங்காயமும்
வடுத்ததேரையன்வாக்குபொய்யாதிதே. (௫௨௯)

இராமபாணம்.

பொய்யாதய்யாபுகலுங்குருமொழி
அய்யாபாணமறைவேன்குளிகையாம்
துய்யாசுக்குத்துகளுமிளகுடன்
மெய்யாவெள்ளையைமேவயெடுத்திடே. (௫௩௰)

சுடுத்துக்குன்றியெழிலானமூலிகை
தொடுத்துக்கல்வமுந்தோன்றவறைத்துமே
கடுத்துரவியிற்காணவுலர்த்தியே
தொடுத்துமண்டலந்தொகுப்பாகவுண்டிடே. (௫௩௧)

கெந்தகரசாயனம்.

உண்டபோதுமொடுங்குஞ்சுரபாணம்
கண்டுகெந்தங்கருதும்ரசாயனம்
பண்டுயேலம்பகருங்கிராய்புடன்
தண்டுபத்திரிதாளிசந்தூக்கிடே. (௫௩௨)

தூங்குஞ்சுக்குத்துடியாமொருபலம்
தாக்குத்திப்பிலி தனியவிருபலம்
போக்குமிளகுபோற்றிடுமுப்பலம்
வாக்குசீரம்வகைநான்குசேர்த்திடே. (௫௩௩)

சேர்த்துசாதிக்காய்சிறக்கவிருபலம்
பார்த்துவிலாமிச்சுபகருமொருபலம்
கோர்த்துதிப்பிலிகொடியசித்திரமூலம்
நூர்த்துப்பூலாத்துடியாப்பலமெடே. (௫௩௪)

எடுத்துச்சீரமெழிலானமுந்திரி
கடுத்தமதுரங்கடியகொத்தமல்லி
தொடுத்துமாஞ்சில்துடர்ந்தபேரீச்சமும்
வடுத்தபாலைவராகனிறுத்திடே. (௫௩௫)

நிறுத்திமுள்ளிநெரிஞ்சிநிலப்பனை
கறுத்தபூனைகடியகுங்குமமும்
பொறுத்தகெந்திபுகலுஞ்சரியெடை
முறுத்தசர்க்கரைமூன்றுசேர்கூட்டிடே. (௫௩௬)

கூட்டுமேபசும்பாலிலரைத்துமே
நீட்டுதேனினில்நேராய்க்குழப்பியே
ஆட்டுமேபதமன்பாய்நறுநெய்யில்
பூட்டுரசாயனம்புகலயெறக்கிடே. (௫௩௭)

எறக்கியீசனிணையடிபோற்றியே
முறக்கமண்டலமுற்றும்பொசித்திடில்
திறக்கவாதமுந்தீராதபித்தமும்
பறக்குங்கிரந்திபதினெட்டுசூலையே. (௫௩௮)

சூலைகுன்மஞ்சொரிபாண்டுசோகையும்
வாலைரோசம்வழங்குஞ்சயரோகம்
மேலைகிரந்திமேவியபாண்டுவும்
சோலைகானகந்துடர்ந்துமேயோடுமே. (௫௩௯)

ஓடும்பத்தியமுற்றபுளியாகா
ஆடும்பயறுஅரியதுவரையாம்
நீடுமுருங்கைநேர்ந்தகத்திரியும்
தேடுமேபசும்பாலுநெய்யாகுமே. (௫௪௰)

சகல வலிக்குமருந்து.

ஆகும்லிங்கமரியவுறைக்கிறேன்
வாகும்வீரம்வகுக்கும்வெடியுப்பு
பார்குபூரம்பகருமரிதாரம்
நீகுமேமுலைப்பாலிலரைத்திடே. (௫௪௧)

அரைத்துமெழுகாயன்பாயுருட்டியே
கரைத்துத்தேனில்கருதுங்குன்றியிடை
நிரைத்துமண்டலம்நோயருந்திடில்
வரைத்துமேவலிவாரிதியோடுமே. (௫௪௨)

ஓடும்வாயுமுறையும்பிறவீச்சு
நீடுஞ்சன்னிநெருங்குமுசல்வலி
கூடுரோகங்குலைந்துதானேடிடும்
தேடுமுப்புபுளிபுகைதள்ளிடே. (௫௪௩)

பரங்கிப்பட்டை லேகியம்.

தள்ளடாபரங்கிப்பட்டைலேகியம்
கொள்ளடாசங்கக்குப்பியொருபலம்
அள்ளடாவேலமரத்தைலவங்கமும்
விள்ளடாகோஷ்டம்விரும்பியேதூக்கிடே. (௫௪௪)

தூக்கிப்பரங்கித்துய்யசமனெடை
தாக்கிசர்க்கரைத்தனியாறுநெய்யும்
போக்கில்லாமல்பொருந்தக்கிளறியே
நோக்கிமண்டலம்நினைவாயருந்திடே. (௫௪௫)

அருந்தும்போதுமகலும்பிரமியம்
திருந்துகுஷ்டமுந்தீராதவெள்ளையும்
வருந்துரோகமும்வாயூரல்மந்தமும்
பொருந்திடாமல்புகலவேநீங்குமே. (௫௪௬)

மகாசிரகச்சூரணம்

நீங்குஞ்சூரணம்நெருங்கியசீரகம்
ஓங்குமேலமுறையுமதுரமும்
தீங்கில்லாபழச்சாற்றினிலூறவை
பாங்குமேநிழல்பதமாயுலர்த்திடே. (௫௪௭)

உலர்த்திச்சீனியுமொன்ருய்ச்சமனிடை
கலர்த்திமண்டலங்காலேயருந்திட
பிலர்த்தப்பித்தம்பிரண்டுமேயோடிடும்
அலர்த்தகாங்கையலறிடுங்கண்டிடே. (௫௪அ)

அரிதார பற்பம்.

கண்டிடுமரிதரபற்பமுறை
விண்டுதேரையன்விரும்பியுரைக்கிறேன்
நண்டுச்சுன்னம்நவிலுமரிதாரம்
பண்டுசீலேப்பதியப்பொதிந்திடே. (௫௪௯)

பொதிந்துகுக்குடம்போட்டிடபற்பமாம்
வதிந்துநெய்யினில்வாகாயருந்திட
சதிந்தகாசமுந்தங்கியரோகமும்
பொதிந்தவிஷமும்பொய்கியேயோடுமே. (௫௫0)

(ரோகாதிக் குளிகை.)

ஓடும்ரோகமுடலில்மானிடற்கு
தேடுங்கெந்திதிறமாயிருபலம்
ஆடுமிளகுஅரியவொருபலம்
போடுஞ்சுக்குப்பொருந்தப்பலமெடே. (௫௫க)

எடுத்தயெல்லாமெழிலாயரைத்துமே
தொடுத்துப்பத்துநாள்துய்யவருந்திடு
கடுத்தக்குன்மமுங்கதறியேயோடும்
வடுத்ததேரையன்வாக்குப்பொய்யாதிதே. (௫௫௨)

பித்தப்பயித்தியத்திற்குப் பற்பம்.

பொய்யாதையாபுகலுங்குருமொழி
அய்யாதேறனுமன்பாயுரைக்கிறேன்
தொய்யாவண்டமுந்தோன்றுசிற்றண்டமும்
மெய்யாவண்டக்கருவாலரைத்திடே. (௫௫௩)

அரைத்துக்குக்குடமன்பாகப்பூண்டிடு
நிரைத்துயிஞ்சியில்நிகழ்த்திடுமண்டலம்
முரைத்துக்காலேயில்முசியவேயுண்டிடில்
வரைத்தப்பித்தம்வசன்ருேடிபோகுமே. (௫௫௪)

(ஆக்கிராணம்.)

போகுமாந்தர்பொருந்துமாக்கிராணம்
ஆகுங்கத்திரியரியசித்திரமூலம்
ஏகுமழிஞ்சியெழிலானதோடையும்
வாகுகஸ்தூரிவாகாய்சுருட்டிடே. (௫௫௫)

சுருட்டிசீலையில்துய்யப்புகைபிடி
மருட்டுபித்தமதிக்கும்பீனசமும்
தொருட்டுமண்டை,திஞரக்குத்துமுதல்
உருட்டும்வியாதியுறங்கிடுங்கண்டதே. (௫௫௬)

சகல ரணங்களுக்குப் புகை.

கண்டவாயுகடிசரணங்களும்
ஒண்டிடாமலுடலைவிட்டேகுதற்
குண்டுகற்கண்ணங்கொடியபவாச்சாரம்
விண்டுமேகள்ளிப்பாலாலரைத்திடே. (௫௫எ)

அரைத்துச்சீலையிலன்பாகவூட்டியே
விரைத்துவெயிலில்விரைவுடன்காயவை
முரைத்துத்திரித்துமுயலுந்திரிதனை
திரைத்துநாசியில்திறமாய்ப்பிடித்திடே. (௫௫அ)

பிடித்தபோதுபிடிசூலைமேகமும்
நடித்தரோகங்கள்நண்ணும்பவுத்திரம்
வடித்தசீழும்வகுக்கும்ரணங்களும்
வெடித்துக்கானகமிரண்டோடிப்போகுமே. (௫௫௯)

சூட்டுக்கு யெண்ணெய்.

போகுமெள்ளெண்ணெய்போற்றுமரைப்படி
ஆகுந்தாமரையரியகீழாநெல்லி
வாகும்பூலாவகைக்குச்சமனதாய்
பாகுமாமணக்கெண்ணெய்சரிகூட்டே. (௫௬௰)

கூட்டியொன்றாய்க்குலாவியரைத்துமே
பூட்டிப்பாண்டப்புகலக்கலக்கியே
ஆட்டிமெழுகாயன்பாயிறக்கியே
மூட்டுமண்டலமுற்றுமுழுகிடே. (௫௬௧)

முழுகும்போதுமுதிர்ந்தசூடுகள்போம்
அழகுமேனியதிகசூளிர்ச்சியாம்
புழுகுவாசனைப்போலவேவீசிடும்
தொழுகுந்தேரையன்தேர்ந்துவுரைத்ததே. (௫௬௨)

உரைத்தசூத்திரமொன்றும்பொய்யாதுகாண்
நிரைத்தமருந்துநேராயுரைக்கிறேன்
அரைத்தமுப்புஅறைவேன்மானிடற்கு
குரைத்தசித்திரைப்பங்குனிபார்த்திடே. (௫௬௩)

பார்த்துச்சீனம்பகரும்வெடியுப்பு
கோர்த்துவிந்துடன்கூறுஞ்சவுக்காரம்
ஆர்த்துக்கல்லுப்புஅரியதோர்வீரமும்
தீர்த்துமுத்தீட்சைதீறயெரித்திடே. (௫௬௪)

எரித்துச்சுன்னமெழிலாயெடுத்துமே
கரித்துச்சரக்குகருதுமறுபதும்
முரித்துக்கவசமுனையாகப்பூண்டிடு
தெரித்தசரக்குத்திறமாயிறுகுமே. (௫௬௫)

(பி ள ா ஸ் தி ரி.)

இறுகுமேரணமெழிலாய்ப்பறப்பதற்
குறுகுங்குங்கிலியரசபூரமும்
நிறுகுவீரமும்நேர்ந்தவிளக்கெண்ணெய்
உறுகுந்தீயிலுறவாய்க்கிளறிடே. (௫௬௬)

மேக ராசாங்க எண்ணெய்.

கிளறியேரணங்கெட்டியாய்ப்பூண்டிடு
உளறுமேகராசாங்க ரைகிறேன்
அளறுமேரண்டமெண்ணெயொருநாழி
தளறுபிரமியின்சாறுயெடுத்திடே. (௫௬௭)

எடுத்துக்குமட்டியெழிலான்கையானும்
அடுத்துமுப்பிரமி ஆனவல்லாரையும்
தொடுத்துசெருப்படைதோன்றுகருமெல்லி
வடுத்துவாதொண்டைவாகத்தூக்கிடே. (௫௬௮)

தூக்கிநொச்சித்துகளுமாவாரையாம்
தாக்கிவேம்புதனிநிலவாகையும்
நோக்கிவரசன்னொருங்குஞ்சங்கங்குப்பி
வாக்குதப்பாமல்வாகாகச்சேர்த்திடே. (௫௬௯)

சேர்த்துவெண்காரந்துய்யவொருபலம்
தூர்த்துமதுரந்தோன்றுமரைப்பலம்
கூர்த்துசீரங்கொடியகருஞ்சீரம்
பார்த்துதாளிசம்பாங்காகக்கூட்டிடே. (௫௭0)

கூட்டிதாளிசங்குறிப்பாயரைப்பலம்
மாட்டிவிடையமதிப்பாய்சமபலம்
நீட்டிமாஞ்சில்நெருங்கவொருபலம்
தீட்டியானைதிறமாம்பத்திரியே. (௫௭௧)

திரியாய்காரந்திரிகடுவோமமும்
சொரியாம்பரங்கிப்பட்டையறுபலம்
வரியாஞ்சாரம்வருக்குமெவச்சாரம்
சரியாமெள்ளெண்ணெய்சரியாய்க்கலந்திடே. (௫௭௨)

கலந்துயெண்ணெய்க்கணதிபோற்றியே
சலந்தனிற்பூசைசதுராய்முடித்துமே
பெலந்துமண்டலம்பிரியமாயுண்டிடு
அலந்துபத்தியமன்பாகவுண்டிடே. (௫௭௩)

உண்டபோதுமுடலில்மகாரோகம்
அண்டவாயுவபானபவுத்திரம்
கொண்டசூலைகொடியகற்பிணியும்
விண்டமேகம்விரைந்துதானேடுமே. (௫௭௪)

வயிற்முறுக்கல் சத்திக்கு.

ஓடுமேவயிருற்றமுறுக்கலுக்
காடுஞ்சீரகங்கருதுமேலமுடன்
நீடுநெற்பொரிநேர்ந்தசீனியுடன்
கூடுஞ்சுக்குகுறிப்பாயெடுத்திடே. (௫௭௫)

எடுத்துமேகொத்தமல்லிசமனெடை
விடுத்துக்கியாழுமேவவருந்திடில்

அடுத்தசத்தியடிமுறுக்கல்வயிற்
தொடுத்தவாந்திதொடர்ந்தோடிப்போகுமே. (௫எ௬)

வயிற்கொட்டலுக்குகிராணிக்கு.

போகுமேவயிற்பொருமல்கிராணியும்
ஆகுங்கிராம்புஅரியலவங்கமும்
நீடும்பட்டைநிகழுங்கடுக்காய்ப்பூ
வாகுஞ்சூரணம்வகுப்பாயருந்திடே. (௫எஎ)

அருந்தும்போது அறையுங்கிராணியும்
திருந்துமேவயிற்றிருகிக்கொட்டல்களும்
குருந்துகடுப்புகொடியமுறுக்கலும்
பொருந்திடாமல்புவிவிட்டுவோடுமே. (௫எஅ)

(அதிசாரபேதிக்கு.)

நீடுமேயதிசாரமுடையவற்
காடுமாங்கொட்டைகருதும்பருப்புடன்
நீடுங்கசகசாநேர்ந்தசுக்குமுடன்
கூடுமேபழச்சாற்றாலரைத்திடே. (௫எ௯)

அரைத்துமைபோலழகியாதமாம்
கரைத்துநெய்யில்கடியளவுண்டிட
நொரைத்தபேதிநொருங்கியேயோடிடும்
திரைத்ததேறன்தெளியசெப்பினதே. (௫அ0)

(தீராத படைக்கு.)

செப்புமாவாரைதேர்ந்தபஞ்சாங்கமாம்
ஒப்பும்பரங்கியுற்றசூரணமாம்
தப்பில்லாமல்தனியக்கலந்துமே
வெப்பில்லாமல்விரும்பிசீனியுண்ணே. (௫அக)

உண்ணும்போதுமுடம்புப்பட்டைரோகம்
நண்ணுஞ்சொரியும்நாடாதுறங்கிடும்
குண்ணுமேனிகுழவியேதங்கமாம்
எண்ணுந்தேறனெழிலாயறைந்ததே. (௫அ௨)

(வாந்திக்கு.)

அறையும்வாந்திஅலறியேதான்வீழ
கூறையுந்துருசுகொடியகல்லுப்புடன்

நிறையுமொன்றுகநேர்மையாயுண்டிடு
பறையும்வாந்திபாரில்விழுங்கண்டிரே. (ரு அ௩)

வாய் நீரருகலுக்கு.

கண்டூர்வாயில்கருதுங்கக்கலுக்கு
உண்டுசுக்குமுயன்றயேலமுடன்
அண்டுசீரகமரியசீனியுடன்
தொண்டுநெய்யில்துகளவேவுண்டிடே. (ரு அ௪)

உண்டபோதுமுறையும்வாயூரலும்
கண்டபித்தங்கதரியேயோடிடும்
அண்டநோயுமகலவேநீங்கிடும்
விண்டுதேரையன்விரும்பியுரைத்ததே (ரு அரு)

கரிவங்கபற்பம்

உரைக்கும்வங்கமுசல்மூலிதன்னிலே
கரைக்கும்வால்மிளகுசரியெடை
நிரைக்கும்வங்கம்நிகழவேபூண்டிடு
திரைக்குஞ்சீலைத்திறமாகச்செய்திடே (ரு அசு)

செய்துகுக்குடந்திறமாகப்போட்டிடு
வைதுபற்பம்வகையாநறுநெய்யில்
கொய்துமண்டலங்குறிப்பாயருந்திடிற்
பெய்துமேகம்பிரண்டோடிப்போமே (ரு அஎ)

போகும்பத்தியமடொருந்தும்பொன்னுங்கண்ணி
ஆகும்வெள்ளாட்டிறைச்சியுப்புகண்டம்
தாகுவென்னீர்தனியநறுநெய்யும்
பாகுவெல்லமும்பாங்காகத்தின்றிடே (ரு அஅ)

பருவுகளுக்கு மருந்து

தின்றபோதுமேதீரும்பருவுக்கு
நன்றுவீரம்நவிலுஞ்செங்காவியும்
குன்றுவாய்நீரால்குமுறவரைத்திடு
வென்றுதேரையன்விரும்பியறைந்ததே (ரு அகூ)

சூதகெந்தி தாம்பர செந்தூரம்

அறைந்ததாம்புரமரியவொருபலம்
நிறைந்தகெந்திநெகிழுமிருபலம்

உறைந்தகூதமுனையாய்சமபலம்
கரைந்தமேபழச்சாற்றாலரைத்திடே (ருசூஎ)

அரைந்துமேபில்லையழகாகத்தட்டியே
நிறைத்துகெசபுடம்நேராகப்பூண்டிடு
திரைத்தசெந்தூரம்தேர்ந்தகுங்குமமாம்
பரைத்துமேபுடம்பத்துமேபூண்டிடே. (ருசூக)

பூண்டபோதுபுகஞ்செந்தூரத்தை
நீண்டுமண்டலம்நேராயருந்திடில்
கூண்டுகுஷ்டங்குறைபதினெட்டுமே
ஆண்டுக்குள்ளாகவகன்றோடிப்போகுமே. (ருசூஉ)

போகவனுபானம்புகழ்ந்துவுரைக்கிறேன்
வாகாய்திப்பிலிவன்பரங்கிப்பட்டை
தோகாசீரகந்தோற்றும்பனவெல்லம்
வேகாவெண்ணெய்யில்பிரும்பிக்கொடுத்திடே (ருசூங)

ஊஷ்ணக்கிரதம்

கொடுத்தபோது குரித்திடுமூஷ்டணம்
அடுத்தசீரகமுமகலுந்திப்பிலியும்
விடுத்தகாயம்விரும்புரோசனையும்
படுத்தவோமமும்பாங்காகத்தூக்கிடே (ருசூச)

தூக்கிலவுங்கந்துய்யசமனெடை
தாக்கிச்சூரணந்தனியப்பொடித்துமே
போக்கில்லாமல்பொருந்தும்பனவெல்லம்
நோக்கிநெய்யில்நுகளக்கிளறிடே (ருசூரு)

கிளறிமலகக்கெடிப்பிறமாணமாய்
தளறிடாமலேக்கிடுவாறுநாள்
குளறுமூஷ்டணங்குடிவிட்டுயேகியே
வளறுகானகம்வாடியுறங்குமே (ருசூசா)

நீரடைப்புக்கு,

உறங்குமரந்தருறையும்நீரடைபுக்
கறங்குவெண்மதிகருதும்வெண்காரமும்

திறங்கும்வாழைநீர்தோர்ந்தசலத்திலே
துறந்துவாறுநாள்தோன்றக்கொடுத்திடே. (௫௬௭)

கொடுத்தபோதுகுறியிலடைக்குநீர்
தடுத்திடாமல்தரணியில்தான்விழும்
தொத்தபத்தியந்தோன்றுபசுமோராம்
தடுத்ததேறையன்வாக்குபொய்யாதிதே (௫௬௮)

௭ அஷ்டகுன்மத்திற்கு

பொய்யாதய்யாபுகலுக்குருமொழி
அய்யாதேறன்றைவேன்குன்மத்திற்கு
துய்யாமேனியுந்தோன்றுங்கையானுடன்
மெய்யாய்மதுரமேவிடக்கூட்டிடே (௫௬௯)

கூட்டிக்கிராம்புகுறிக்கும்பர்ப்படகம்
நீட்டுவெள்ளுள்ளிநேரும்பொருங்காயம்
மாட்டிவெல்லமதிக்குநறுநெய்யில்
பூட்டிலேகியம்பொருந்தவருந்திடே (௫௱)

அருந்துமண்டலமானதின்தன்பிற
குருந்துதயிலங்குறிப்பாகத்தேய்த்திட
திருந்துவேம்புதிரைக்குநன்னரியும்
பொருந்துமதுரம்போற்றுஞ்சரியாமே (௫௱௧)

ஆமேகஸ்தூரியரியதேவதாரம்
தாமேபூலாவுதனியலவங்கமும்
வாமேநெருஞ்சிவருக்குங்கோறையுடன்
போமேமேனியும்பொருந்தவேதூக்கிடே (௫௱௨)

தூக்குஞ்சரக்குதுய்யசமனெடை
தாக்குமேபசும்பாலிலரைத்துமே
வாக்குதப்பாமல்வன்பாண்டத்தூற்றியே
போக்கில்லாமல்பொருந்தவேகாச்சிடே (௫௱௩)

காச்சிமாயன்கணபதியைபோற்றியே
மூச்சிடாமல்முழுகுமோர்மண்டலம

போச்சுபத்தியம்பொருந்தும்புளியாகா
ஆச்சுமாய்கை அணத்தையுந்தள்ளிடேன். (சுாசு)

கபோலபீனச் சன்னிக்கி.

முக்கூட்டு சிட்சிகா பரிகாரம்.

தள்ளிடாகானகத்துவுரைந்தகா
வுள்ளிடாபட்டைவுசிலத்துளிருடன்
கொள்ளிவேளைசொழிஞ்சியாவரையாம்
விள்ளிடாமல்விழிதிசமன்கூட்டிடே. (காரு)

கூட்டியொன்ருய்குலவுமாமணக்கு
ஆட்டியெள்ளெண்ணெய்யரியனறுநெய்யும்
மாட்டியொன்ருய்மருவக்கலக்கியே
பூட்டிபாண்டம்பொதியவிறக்கிடே. (சுாசு)

இறக்கிமாயனெழிலடிபோட்டியே
உறக்கமண்டலமூற்றுமுழுகிட
திறக்கபோலதேர்ந்தபீனசம்போம்
சிறக்கதேரையன்தேன்மொழிபொய்யாதே. (சுாஎ)

ருத்திராங்க சன்னிக்கு தயிலம்.

பொய்யாதையாபுகலுக்குருமொழி
அய்யாவேறேமருந்துவுரைக்கிறேன்
செய்யாகொம்புசிறந்தவறக்குடன்
துய்யாமதுரம்தோன்றளேகூட்டிடே. (சுாஅ)

கூட்டம்நாவிகுலவும்வசுவாசு
நீட்டுஞ்சந்தணம்னேரும்பொரிகாரம்
கூட்டுமகிலினகுறிப்பானபற்பாடம்
மாட்டுமேபசும்பாலிலரைத்திடே. (சுாசு)

அரைத்துயெண்ணெயிலன்பாய்கலக்கியே
முரைத்துயீசனேமுனேயடிதாள்பணிக்
திரைத்துப்பதமாய்தீறவேகாய்ச்சியே
வரைத்துமண்டலம்வாகாய்முழுகிடே. (சுாய)

முழுகும்போதுமுறங்குஞ்சன்னிகளும்
அழுகுஞ்சீதளமலறியேயோடிடும்
ஒழுகும்பீனசமுயன்றுமேநீக்கிடும்
வழுகும்பத்தியம்வாகாகவுண்டிடே. (சூ௰க)

(கண்ட மாலைக்கு.)

உண்டபோதுமுறையுங்கண்டமாலை
அண்டிடாமலவனிவிட்டோடுதற்
கண்டங்கத்திரிகருதுசமூலமாம்
தண்டமேபுகைதயவாய்ப்பிடித்திடே. (சூ௰உ)

பிடித்தபோதுபிறக்குங்கண்டமாலை
கடித்தவிஷமுங்கருதியரோகமும்
நடித்தபல்விஷம்நாற்றமுமீலையும்
துடித்துப்போமெனசெப்பினர்தேறனே. (சூ௰ங)

கூழ்ப்பாண்டக் கிரதம்.

தேறன்சொல்மொழிதிசைநான்கும்பொய்யாது
கூறமருந்துகுறிப்பாயுரைக்கிறேன்
நீறக்கூழ்ப்பாண்டந்திறமாய்ப்படிநாலு
ணிறமோர்பசும்பாலுமெடுத்திடே. (சூ௰ச)

எடுத்துத்தேனுமெழிலாநறுநெய்யும்
அடுத்துமதுரமானலவங்கமும்
தொடுத்தபத்திரிதோன்றுமிருசீரம்
விடுத்துக்கோஷ்ட்டம்விருப்பம்விலாமிச்சே. (சூ௰ரு)

விலாமிச்சோடுவிளங்கும்வாலுளுவை
துலாவுமொக்குதுடியானசாதிக்காய்
குலாவுதிப்பிலிகூறுமிளகுடன்
புலாவுசீனியும்பூணவேதூக்கிடே. (சூ௰சு)

தூக்கிப்பாண்டந்துடியாய்க்கலந்துமே
தாக்கிக்கிரதந்தனிப்பதமாகவே
போக்கில்லாமல்புகழுக்மெழமசிக்காய்
வாக்குதப்பாமல்மண்டலம்வுண்டிடே. (சூ௰எ)

உண்டபோதுமுடலில்சயரோகம்
கண்டுமேககணக்காச்சலான்றிடும
பண்டுமேனிபருத்துமேபுஷ்டியாம்
வீண்டுதேறன்விரும்பியுறைத்ததே. (கூயஅ

அதிசார கிராக்ணிக்கு.

உரைத்தசாரகிராணியொடுங்கிட
நிரைத்தவேம்புநிலப்பனேசாதிக்காய்
குரைத்தலவுங்கஞ்கூறுங்கடுக்காய்ப்பூ
திரைத்தப்பட்டைதிறமாய்ச்சமன்சேரே, (கூயகூ)

சேர்த்துவாலுமிளகுகசகசா
பார்த்துமோரிடைப்பாங்காயெடுத்திடு
ஆர்த்துமேபசும்பாலிலரைத்திடு
தீர்த்துமெழுகாய்திறளறக்கிடே. (கூஉய)

எறக்கிவீசனெழிலடிபோற்றியே
முறக்கமண்டலமுற்றுங்கொடுத்திட
திறக்கமாகியதேர்ந்தவதிசாரம்
பறக்குமென்றல்லோ பாடினர்தேறனே. (கூஉக)

(சிங்கி பற்பம்.)

தேறன்பற்பம்தெளிவாயுரைக்கிறேன்
கூறநாய்மலங்குறிக்குமிருபலம்
தீறகெந்திதிறமாய்சமபலம்
மாறக்கவசம்வகையாகப்பூண்டிடே. (கூஉஉ)

பூண்டுசீலேப்பொருந்தவேமாட்டிடு
தூண்டுகுக்குடந்திறமாகப்போட்டிடு
நீண்டபற்பமாம்நேராகயடுத்திடு
கூண்டுதேனில்குறிப்பாயருந்திடே. (கூஉங)

அருந்தும்போதுஅறையுங்கண்டமாலே
திருந்துமேகமுந்திராப்பிணியறும்
பொருந்துவெள்ளேயும்பொங்கியேநின்றிடும்
குருந்துமேமுறைக்குறிப்பாயறந்ததே. (கூஉச)

பிள்ளைமாந்த பேதிக்கு மருந்து.

அறையும்பிள்ளையகலவேமாந்தமும்
குறையுமோமங்குறிக்கும்வசம்புடன்
நிறையும்வாலுமிளகுகசகசா
பறையுமேமுலைப்பாலிலரைத்திடே. (௬௨௫)

அரைத்துமைபோலழகாய்க்கலக்கியே
கரைத்தமருந்தைக்காலையில்தாணிய
முரைத்தபேதிமுயன்றுமேயோடும்
திரைத்ததேறன்தெளிந்துசெப்பினதே. (௬௨௬)

செரியாக் குணத்திற்கு.

செப்புமாந்தர்செரியாக்குணத்திற்கு
ஒப்பும்பேதியுறையுங்கல்லுப்புடன்
தப்பில்லாமல்தணிப்பழச்சாற்றிலே
கப்புமேபுடங்கணக்காகப்பூண்டிடே. (௬௨௭)

பூண்டுமேபுடம்புகலுமறுபது
நீண்டுசெந்தூரம்நேர்மையுண்டிடு
தீண்டுபத்தியந்திறமாம்புளியாகர்
டாண்டுமேசெரியாக்குணம்நீங்குமே. (௬௨௮)

சர்வ மேகத்திற்கு லேகியம்.

நீங்குமேகம்நெருங்கியேயோடுதற்
காங்குமிளகுகருதுங்கசகசா
வாங்குகசக்சாவகைக்குச்சரியெடை
தாங்குமேபூனைக்கால்விதைச்சேர்த்திடே. (௬௨௯)

சேர்த்துப்பதமாய்ச்சிறக்கவறுத்துமே
பார்த்துச்சீனியும்பாங்காய்ச்சரிசமன்
தூர்த்துலேகியந்துய்யநறுநெய்யும்
ஆர்த்துப்பதமாயன்பாய்கிளறிடே. (௬௩௰)

கிளறிமண்டலங்கெட்டியாய்த்தாணிண்ண
அளறுமேகமலறியேயோடிடும்
தளறுமேனிதடிந்துயிறுகிடும்
பளறுலேகியம்பாங்காகவுண்டிடே. (௬௩௧)

உண்டபோதுமுரையாமரையாப்பு
கண்டமாலைகதறியேபோடிடும்
அண்டவாயுவபானபௌத்திரம்
துண்டரிணங்கள்துடித்தோடிப்போகுமே (௯௰௨)

போகும்வெள்ளைபொருந்துங்குருதிப்புண்
ஏருங்கிரந்தியெறில்ரணஞ்சிலந்தியும்
வாகுஞ்சூலைவகுக்கும்யோனிப்புற்று
பாகுமார்த்தண்டன்பனிபோலேநீங்குமே. (௯௰௩)

நீங்குபத்தியம்நேரிழையேகேளும்
பாங்குமுருங்கைபகரும்பசுப்பயர்
ஓங்கும்வெள்ளாட்டுயிறைச்சியுப்புக்கண்டம்
தீங்கில்லாமல்திறமாயருந்திடே. (௯௰௪)

சன்னிமுதல் தலைமயக்கம் வேர்வைக்கும்.

அருந்தும்போது அரையுமொருபாகம்
திருந்துலவங்கந்திறமானரோகணி
பொருந்துமேலம்போற்றுஞ்சமனெடை
குருந்துமூன்றையுங்குறிப்பாய்வறுத்திடே. (௯௰௫)

வருத்துசூரணம்வாகாயெடுத்திடு
நிருத்துசந்தனநேருங்கலைக்கொம்பு
குரித்துப்பேசுபின்கூராயரைத்திடு
தெரித்தவெந்நீரில்திறமாய்க்கொடுத்திடே. (௯௰௬)

கொடுத்தபோதுகுரிக்குந்தலைவேர்வை
அடுத்துசன்னியும்அலறியோடிடும்
நடித்தபித்தம்விழுமயக்கமும்
வெடித்தமூர்ச்சைவிரண்டோடிப்போகுமே. (௯௰௭)

வேதுபுகை-இதுவுமது.

போகும்வேதுபொருந்துவிடாதிக்கு
ஆகுஞ்சந்தனமரைப்பலஞ்சாம்பிராணி
வேகுஞ்சிலையில்விரும்பசுருட்டியே
போகுமேபுகைபுகழப்பிடித்திடே. (௯௰௮)

பிடித்தபோதுபொருமலிரைப்புகள்
அடுத்தபகலினில்கன்றுவோடிடும்
கடுத்தபத்தியக்கடுகெண்ணெய்தானுகா
வடுத்ததேரையன்வாக்குசொல்லாமிதே. (௯௩௯)

(சிகடி தயிலம்.)

சொல்லுமாந்தர்தொடருமேகமற
வெல்லுஞ்சிகடிவிரும்புந்தயிலங்கேள்
கொல்லுமாமணக்கெண்ணெயாழாக்குமே
புல்லும்பாண்டம்புகலவடித்திடே. (௯௪௰)

வடித்துசேங்கோட்டைவாகாயிருபலம்
நடித்துயெண்ணெயில்நன்றாய்நருக்கியே
வெடித்தகெந்திவிரும்புமொருகசகசா
நடித்துமூன்றையும்நன்றாய்த்தூள்செய்திடே. (௯௪௧)

செய்புஞ்சூரணஞ்சிறக்கக்கலக்கியே
எய்புகமலயெழிலாயெரித்திடு
உய்யுங்கணேசன் உத்தமன்தாள்பணி
பய்யபோற்றிபதமாயெடுத்திடே. (௯௪௨)

எடுத்துக்கம்மாருயெழிலானவெற்றிலை
அடுத்துதுளசிபாருபத்திரியில்
கொடுத்துமாந்தர்குலாவுமிருதூளி
தடுத்திடாமல்தனிபஞ்சமுண்டிடே. (௯௪௩

உண்டபோதுமுறையும்பெருவயற்
கண்டமாலைகரியபுரைசூழல்
அண்டநோயுமகலுமபுவிவிட்டு
தெண்டன்தேரையன்திறமிதுபார்த்திடே. (௯௪௪)

கண்ணோய் தொண்ணூற்றுறுக்கு மருந்து.

பார்த்துவிந்துப்புபகருந்திப்பிலியும்
சேர்த்துரோகணிதேர்ந்தபவளமும்
ஊர்த்துவெள்ளியுமுற்றராவடமு
கார்த்துப்பொன்னுங்கருதுமுத்துமெடே. (௯௪௫)

எடுத்துதுத்தமெழிலானகற்கண்டு
அடுத்துநந்தியாவட்டப்பூச்சாற்றினுல்
தொடுத்துமூன்றுநாள்துவளவரைத்துமே
கடுத்தநெத்திரங்கடுகவேபூண்டிடே. (௯௪௬)

பூண்டபோதுபுகலும்புழுவெட்டு
ஆண்டுதீராவதலும்நேத்திரஞ்சனம்
நீண்டபாய்ச்சல்நெருஙகுந்தசைவள
மாண்டுகண்ணேப்மதிகெட்டுவோடுமே. (௯௪௭)

கண்ணேய் தொண்ணூற்றுறுக்குத் தயிலம்.

ஓடுங்கண்ணேபுறைந்தயிலங்கேள்
ஆடுமதுரமரியக்கஸ்தூரியாம்
தேடுஞ்சந்தனம்தெறிக்குந்தேவதாரங்
கூடுங்சோரைக்கிழங்குசமன்தூக்கே. (௯௪௮)

தூக்குங்கத்திரிதோன்றுங்கருஞ்சீரம்
தாக்குநற்சீரந்தனியலவங்கமும்
போக்கில்லாமல்பொருந்துமிளகெடு
வாக்குதப்பாமல்வால்மிளகுகூட்டிடே. (௯௪௯)

கூட்டுவேலிகுலவும்விலாமல்லி
நீட்டுமேபசும்பாலிலரைத்திடு
பூட்டும்பச்சிலேபுகலும்வழுதலே
தீட்டுங்கையான்தகரைச்சாற்சேர்த்திடே. (௯௫௰)

சேர்த்துமூலிகைசிறக்கச்சமனெடை
பார்த்துயெண்ணெய்பகருஞ்சமனெடை
கோர்த்துயொன்ருய்க்குறுகக்கலக்கியே
வார்த்துப்பாண்டத்தில்வாகாகச்காய்த்திடே. (௯௫௧)

காய்த்துயீசன்கணபதியைபோற்றியே
சாய்த்ததுபாண்டந்தனியவடிகட்டி
தேய்த்துமண்டலந்திறமாமுழுகிடில்
நோய்த்தக்கண்ணேய்நொருங்கியேயோடுமே. (௯௫௨)

திரேகம் சில்லிட்டால் சீதளத்துக்கு மேல்மருந்து.

ஓடுமாந்தருறையுஞ்சீதளத்துக்
காடுங்கற்பூரங்கடியமஞ்சத்துளும்

நீடுங்காணம்நெருங்குழச்சுன்னம்
போடுமோமம்பொருந்தச்சமன் தூக்கே. (௬௫௩)

தூக்கியொன்றாய்த்துகளப்பொடித்துமே
தாக்கிப்பாண்டந்தனியவறுத்துமே
போக்கில்லாமல்பொருந்தவேதேய்த்திடு
வாக்குத்தேரையனவன்மொழிபொய்யாதே. (௬௫௪)

(பக்கசூலைக்கு.)

பொய்யாதையாபுலவன்குருமொழி
அய்யாதேரையனன்பாயுரைக்கிறேன்
மெய்யாசூலைவிளம்பும்பக்கசூலை
தையாள்குமரிச்சாறுமெத்திடே. (௬௫௫)

எடுத்துச்சிங்கியெழிலாயரைத்துமே
தொடுத்துமேயப்பாண்டத்தில்காய்ச்சியே
படுத்துமேற்புறம்பக்கசூலையரை
கொடுத்துவுள்ளுக்குமுறவேவுண்டிடே. (௬௫௬)

அஷ்ட குன்மத்துக்கு.

உண்டதேரையனுறுதிமொழியிது
கண்டகுன்மங்கதறியேயோடுதற்
கொண்டவெண்மதிகூறுஞ்சினக்காரம்
அண்டவோடிலரைப்பொதிந்திடே. (௬௫௭)

பொதிந்துயண்சீலைபோட்டுகெசபுடம்
சதிந்துவெந்துசருகியவெண்ணீறும்
வதிந்துவெண்ணெயில்வாகாகாவுண்டிட
அதிந்துமண்டலமலறிப்பறக்குமே. (௬௫௮)

பறக்குமேகம்பகரும்வெள்ளைப்புண்ணு
சிறக்குங்கிரந்திசீறும்பறங்கிப்புண்
திறக்குங்குன்மமுந்தீராப்பிணிகளும்
பறக்குமென்றல்லோபாடினன்தேறனே. (௬௫௯

பரங்கிப் புண்ணுக்கு.

தேறன்வாக்குத்திசையிலும்பொய்யாது
கூறமருந்துகுறிக்ும்ரசப்பூரம்

திரகெந்தியுந்தேர்ந்தரசபற்பம்
ஆறாறுக்கண்கனியுமெடுத்திடே. (சுசுய)

எடுத்துப்பாலுமெழிலானவெல்லமும்
தொடுத்துலேகியந்தோன்றக்கிளறிடு
அடுத்துமண்டலமன்பாகவுண்டிடே.
கடுத்துப்பரங்கிப்புண்கதறியேயோடுமே. (சுசுக)

குன்மக் குடோரி.

ஓடுங்குன்மமுறையுமரிதாரம்
நீடுங்கெந்தியுநேரானபூரமும்
கூடுநாபிக்குலவுந்திரிகடு
தேடுந்திரிபலைத்திரசசமன்றூக்கே. (சுசுஉ)

தூக்கிவாளமுந்துய்பசமனெடை
தாக்கியிஞ்சியின்சாற்றாலரைத்திடு
போக்கில்லாமல்பொருந்தக்குன்றியிடை
வாக்குதப்பாமல்வாகாயருந்திடே. (சுசுங)

அருந்துகுன்மமுமறையும்பெரும்பாண்
டிருந்துபாண்டுடன்றீராப்பிணியறுங்
குருந்துவெட்டையுங்கூறுபிரமியம்
வருந்துரோகமும்வரண்டோடிப்போகுமே. (சுசுச)

(சுரக் குளிகை.)

போகுமேசுரம்பொருமலீளையுற
ஆகுஞ்சூதமரியமனோசிலை
வாகுந்தாளகம்வரையும்வெண்காரமும்
பாகுங்கெந்திபகருந்திரிகடே. (சுசுரு)

கடுகுவாளங்கருதுங்கரிப்பான்சாற்
மடுகுமேயூறல்மாட்டிபிடித்திடு
படுகுவெல்லம்பகருமிஞ்சிரசம்
முடுகுமண்டலமுற்றும்பொசித்திடே. (சுசுசு)

பொசிக்கப்பீலிகைபொருமலிரைப்புகள்
கசக்கிமீளையுநாற்றக்கவுச்சுகள்
வசிக்குமாந்தமும்வறுபதுசுரங்களும்
மசிக்குநோய்களுமலறிப்பறக்குமே. (சுசுஎ)

சகல சம்பிரதாயச் சூரணம்.

பறக்குஞ்சூரணம்பகருஞ்சம்பிரதாயம்
நிறக்குங்காந்தநெரியகெந்தகமும்
சிறக்குமயப்பொடிதேர்ந்தசமனெடை
உறக்குங்கற்றாழைச்சாற்றாலரைத்திடே. (௬௬அ)

அரைத்துவெய்யலில்லன்பாயுலர்த்தியே
வரைத்துச்சூரணம்வாகாய்ப்பொடித்திடு
குரைத்துச்சர்க்கரைகூறக்கலந்திடு
பரைத்துமண்டலம்பாங்காகவுண்டே. (௬௬௯)

உண்டபோதுமுறையும்பெருவயிற்
கண்டமாலைகதறியேயோடிடும்
அண்டவாயுவபானமுறுக்கலும்
கொண்டகுன்மமுங்குழவியேயோடுமே. (௬௭0)

காரீயச் செந்தூரம்.

ஓடுங்காரீயமுற்றசெந்தூரங்கள்
நீடுமேகருங்குன்றியிலையரை
தேடுஞ்சிலைத்திறமாறெழுசீலை
கூடுமேபுடம்கெசப்புடம்போட்டிடே. (௬௭௧)

போடச்செந்தூரம்புகலுமரிசெடை
நீடத்தேனில்நெருங்குமோர்மண்டலம்
கூடமேகங்குமறியேயோடிடும்
பாடப்பிரமியம்பாங்காகநீங்குமே. (௬௭௨)

நீங்குபத்தியநேராம்பசும்பயர்
ஆங்கும்வெள்ளாட்டிறைச்சியுப்புக்கண்டம்
தீங்கில்லாமல்திறமாயருந்திடு
வாங்குமேகுருவன்மொழிபொய்யாதே. (௬௭௩)

கன்னப் புற்றுக்கு மருந்து.

பொய்யாதையாபுகலுங்குருமொழி
அய்யாபுற்றுஅறைவேனொருமருந்
தையாபூரமுந்தாங்கும்படிகாரம்
மெய்யாகாரமும்விரும்புஞ்சமனெடே. (௬௭௪)

எடுத்துவெண்ணெயிலெழிலாயரைத்துமே
அடுத்துமூன்றுநாளன்பாகக்கொண்டிடில்
கடுத்தபுற்றுங்கருதும்ரோசிகப்
பிடுத்துப்போமெனவிளம்பினர்தேறனே (சுஎரு)

வாந்தி விக்கலுக்கு

தேறன்வாக்குத்திசையிலும்பொய்யாது
கூறமருந்துகுறிக்குமேலமுடன்
ஆறநெற்பொரிஅரியகருஞ்சீரகம்
திறதிராட்சப்பழமுமெடுத்திடே (சுஎசு)

எடுத்துக்கியாழமெழிலாகமூட்டியே
அடுத்துமூன்றுநாளன்பாகஉண்டிடில்
தொடுத்தவாந்தியுந்தோன்றுவிக்கல்களும்
விடுமதுக்கானகம்விரண்டோடிப்போகுமே (சுஎஎ)

சுகபேதி மாத்திரை

போகுமேசுகபேதிமாத்திரைகேள்
ஆகும்பூரமழகியசுக்குடன்
வாகுரோகணிவாகானகோதும்பை
பாகுமேகடுக்காயின்கியாழமே (சுஎஅ)

ஆகுமேசாமமறுபதுவானபின்
தாமேமாத்திரை தாங்கும்பிரமாணம்
போகுமேகுன்றியின்போதளவுண்டிடில்
நாமேமேபேதியாநற்சுகபேதியே (சுஎசூ)

சுரக்குளிகை

பேதிவெள்ளைபெரியமிளகுடன்
சாதிலிங்கந்தனிரசப்பூரமாம்
வாதிக்காகும்வழகியமும்பூவாம்
ஆதிதேன்விட்டரைமெழுகாகுமே (சுஅய)

ஆகுமேசுரமறுபதுநீங்கிடும்
வாகுபித்தம்வழங்கியநாற்பதும்
சாகுசிலேத்துமந்தவிர்ந்துபோந்தொண்ணூற்றூற்
பாகுதேறையன்பாடினதுண்மையே (சுஅக)

இடுமருந்து ராமபாணம்.

உண்மையாகவுரைக்கிறேனிடுமருந்
தண்மையானதனிப்பஞ்சமாவாரை
கண்மையானகடியகஞ்சாங்கோரை
வெண்மையானவிரும்பும்பூரமெடே. (௬௮௨)

எடுத்துத்தேங்காயெழிலாம்பனைவெல்லம்
அடுத்துகெந்தமுமானலவங்கமும்
தொடுத்தபத்திரிதோன்றுமிருசீரம்
விடுத்தகாந்தமும்விரும்பிச்சமன்கூட்டே. (௬௮௩)

கூட்டியொன்றாய்க்குலாவியிடித்துமே
ஆட்டிமருந்தையருந்திடில்மண்டலம்
வாட்டுரோகமும்வாங்காப்பெருநோயும்
காட்டுங்காளகங்கதறியேயோடுமே. (௬௮௪)

ஓடும்பத்தியமுற்றப்பசும்பயற்
ஆடும்வெள்ளாட்டிறைச்சியுப்புக்கண்டம்
நீடுங்காடைநெருங்கும்புறாக்கறி
தேடுநெய்யுந்திறமாகவுண்டிடே. (௬௮௫)

விரைவாதத்துக்கு மேற்கட்டு.

உண்டுமூலியுறையுந்துத்தியிலே
அண்டுமேகழற்சிக்காயிலையுடன்
கொண்டுசெம்மைகுறிக்குமிம்மூன்றையும்
பண்டுமாமணக்கெண்ணெயில்வாட்டிடே. (௬௮௬)

வாட்டியேகடுக்காய்த்தூள்கலந்துமே
கூட்டியண்டங்குலாவியிறுக்கியே
பூட்டிமண்டலம்போதவேகட்டிடில்
சூட்டிவாதம்சுழன்றோடிப்போகுமே. (௬௮௭)

போகும்பத்தியம்போற்றுமகத்தியாம்
ஆகுமிஞ்சியரியவெள்ளுள்ளியாம்
பாகுமேபசும்பாலுமோரன்னமாம்
வாகுதேரையன்வரைந்ததுபார்த்திடே. (௬௮௮)

ஒரு தலைநோய்க்குத்தயிலம்.

பார்த்துமேதலைநோய்க்குத்தயிலங்கேள்
ஆர்த்துவெள்ளுள்ளிவரியவலம்புரி
கோர்த்துமாசக்காய்குறிக்கும்லவங்கமும
தீர்த்துச்சமனெடைதீரவெடுத்திடே. (சுஅகூ)

எடுத்க்கொம்பரக்கெழிலாகவவ்விடை
உடுத்துமேபசும்பாலிலரைத்துமே
தொடுத்துமேயெண்ணெய்தோன்றக்கலக்கியே
கொடுத்துமுத்தியும்கூறயெறக்கிடே. (சுகூ0)

எறக்கிமாயனெழிலடிபோற்றியே
உறக்கமண்டலமுற்றுமுழுகிட
திறக்கக்கபாலசூலைவலியறும்
பறக்குமென்றல்லோபாடினர்தேறனே. (சுகூக)

திரிதோஷசுரத்திற்குக் கியாழம்.

தேறன்கூர்மொழிதிசைநான்கும்பொய்யாது
வேறக்கியாழம்விரும்பியுரைக்கிறேன்
கூறசுக்குக்குறிக்குஞ்சிறுதேக்கு
ஆறக்கோஷ்டமுமன்பாய்நறுக்கிடே. (சுகூஉ)

நறுக்கிப்பற்படாகவிறுமதுரமாம்
குறுக்கிக்காஞ்சொறிகூறுஞ்சீந்தலுடன்
முறுக்கிநன்னரிமுதிர்ந்தமுத்தக்காசு
சொறுக்கிப்பேய்ப்புடல்தேவதாரங்கூட்டே. (சுகூங)

கூட்டியொன்றாய்க்குமுறவிடித்துமே
ஆட்டிப்பாண்டமறுபடிநற்சலம்
நீட்டிக்காய்ச்சுநெருங்குமிருசாமம்
பூட்டிமூவேளைபுகலக்கொடுத்திடே. (சுகூச)

கொடுத்தபோதுகுமிறிடுமுச்சுரம்
அடுத்துச்செந்தூரமரியகுன்றியெடை
தொடுத்துக்கியாழத்திலதோன்றக்கொடுத்திடு
கடுத்துமேசுரங்கதறியேயோடுமே. (சுகூரு)

ஓடுமேகசுரமிருபதும்போம்
நீடுமேயிளைநெருங்குங்கபமிளை
வாடுரோகம்வறையுஞ்சுவாசமும்
காடுபோமெனக்கதறினர்தேறனே. (௬௯௬

தேறன்வாக்குத்திசையிலும்பொய்யாது
கூறபத்தியங்குறிக்குங்கோதும்பையாம்
திறவெள்ளாட்டிறைச்சியுப்புக்கண்டம்
பாறநெற்பொரிபகருங்கஞ்சியுண்ணே. (௬௯௭)

பாரிச வாயுவுக்கு அயச்செந்தூரம்.

உண்ணசெந்தூரமுற்றமுறைகேளு
திண்ணகூதம்திறமாம்பரிச்செம்பு
கண்ணன்மூலிகருதுகெந்தகமும்
வண்ணமாகவேமாட்டியுருக்கிடே. (௬௯௮)

உருக்கியேயெடையுற்றவரிதாரம்
மருக்கிப்பொற்றலைமாதளம்பூச்சாறு
நெருக்கும்பூலரசம்நீலசெம்பருத்தம்பூ
யுருக்கிவங்கிஷப்பாதிசார்வார்த்திடே. (௬௯௯)

வார்த்துமேயரைவாகாய்த்தினமைந்து
கோர்த்திடுங்குப்புகூறிடுவாலுகை
ஏர்த்துவாலுகையெரிப்பாய்தினமொன்று
சேர்த்துவாலுகைசெந்தூரமாகுமே. (௭௰)

செந்தூரமொன்றுசிறந்தநவலோகம்
மந்திக்கிலாயிரமதிப்பாகப்பாய்ந்திடும்
கொந்திக்கோர்மண்டலங்கூட்டோரரிசிடை
சிந்தித்துமேனிசிவந்ததோர்மேனியே. (௭௰௧)

குஷ்டத்துக்கு நவலோகச்செந்தூரம்.

மேனிசெந்தூரமேவிடுங்குஷ்டத்திற்
கானிச்செந்தூரம்கருதுவயச்செம்பு
தானிக்காந்தந்தருவானதங்கமும்
வானிலப்பிரேகம்வாகாய்ச்சரிபிடே. (௭௰௨)

இட்டயிடைபோலிதிற்சங்கச்செம்பிடு
இட்டயிடைபோலிதிலண்டச்செம்பிடு
இட்டயிடைநன்றிதமாங்கிளிஞ்சியில்
இட்டயிடையதினிதமாயுருக்கிடே. (எ௱௩)

உருக்கியொன்ருயுலர்ந்தசெயசூதம்
நெருககியிடைசரிநேர்ந்தசெயசெந்தி
அருக்கிகேசரிஅரிதயிலமமை
பருக்கும்பில்லையாய்ப்பகர்ந்துபுடஞ்செய்யே. (எ௱௪)

செய்துமேபுடந்தீரச்செந்தூரமாம்
மெய்துலோகத்தில்மீட்டிடில்தங்கமாம்
வைதுமண்டலங்காணியருந்திடில்
பொய்துமேனிப்புகழ்ந்திடத்தங்கமே. (எ௱௫)

தங்கபத்தியம்தாக்கும்பச்சைப்பயர்
வெங்கும்வெள்ளாட்டிறைச்சியுப்புக்கண்டம்
கங்குல்பால்தயிர்கருதுநெய்யன்னமாம்
பொங்குமண்டலம்போற்றவருந்திடே. (எ௱௬)

சுரத்துக்கு சண்டமாருதச் செந்தூரம்.

அருந்தும்போதுமறுபதுசுரமற
திருந்துலிங்கமுந்தேர்ந்தரசபற்பம்
குருந்துபூரமுங்கூறுநேர்வாளமும்
வருந்தும்பாஷாணம்வாகாய்ச்சமனெடே. (எ௱௭)

எடுத்துமேரசமெழிலானசெந்தூரம்
அடுத்துக்கல்வத்திலன்பாயரைத்திடு
தொடுத்துமூவாறில்தோன்றுமரிசிடை
கொடுத்திடச்சுரங்குழவியேயோடுமே. (எ௱௮)

தீராத தாகத்துக்கு.

ஓடுந்தாகமுறையுமயிற்பீலி
தேடுந்திப்பிலிதேர்த்தவேலமுட்ன்
கூடுநெற்பொரிகுறிக்குமதுரமாம்
ஆடுங்கோஷ்டமரியகஸ்தூரியே. (எ௱௯)

தூரிப்பாலேதுகளுந்திராட்சமாம்
வாரிக்கியாழம்வகுக்குமயிற்சாம்பல்

சாரிநற்சலந்தாக்குவிருநாழி
பாரிக்கியாழும்பகிர்ந்துறயறக்கிடே. (௭௱)

எறக்கியீசனெழிலடிபோற்றியே
திறக்கசாமந்திறமாமிருசாமம்
உறக்கசாமந்திறமாமிருசாமம்
பறக்குந்தாகம்பகரவேபோற்றிடே. (௭௱௧)

போற்றுங்கோஷ்டம்புகலுஞ்சடாமாஞ்சி
தேற்றுஞ்செம்பூராம்பட்டைதேவதாரம்
ஆற்றுஞ்செண்பகம்அறையுங்கருஞ்சீரம்
காற்றும்பூலாக்கிழங்குயெடுத்திடே. (௭௱௨)

எடுத்துக்கஸ்தூரியெழிலானமஞ்சளும்
அடுத்துக்கார்போகவரிசிநற்சிரகம்
கடுத்துசெவ்வியம்கழருஞ்சிறுதேக்கு
தொடுத்தசிறுநாகப்பூவுங்குருவேரே. (௭௱௩)

வேராமநன்னாரிவிரும்புமகில்கட்டை
காராம்பச்சிலைகருதும்வெட்டிவேரும்
நீராஞ்சந்தனம்நேருங்கொம்பரக்கு
கூராஞ்சாம்பிராணிகுறிக்குமூட்டியெடே. (௭௱௪)

பிட்டிச்சூரணம்முழுதுஞ்சரியெடை
கட்டிச்சாம்ராணிகதறிடுங்காலெடை
எட்டுயெண்ணெயிலெழிலாகக்காய்த்துமே
நெட்டிமண்டலம்நேராய்முழுகிடே. (௭௱௫)

முழுகும்போதுமுறையும்பிறவலி
அழுகுநீரும்அறையுந்தலைவலி
ஒழுகும்பாய்ச்சலொடுங்குங்கபரோகம்
நழுகும்வியாதிநவின்றனர்தேறனே. (௭௱௬)

கால்வலிக்கு மேற்பூசல்.

தேன்கூர்மொழிதிசையிலும்பொய்யாது
வேறமருந்துவிரும்பியுரைக்கிறேன்
கூறகால்வலிகுறிக்குமூலிகைகேள்
தீறவெண்குன்றிதிறமாமூலியெடே. (௭௱௭)

எடுத்துக்கற்பூரமெழிலானமூலியும்
அடுத்துமேபழச்சாற்றிலரைத்திடு
தொடுத்துவைந்துநாள்மேற்பதம்பூசிட
கடுத்துநோமவுவலிகதறியேயோடுமே. (எ௰அ)

ஓடும்பத்தியமுற்றபுளியாகா
தேடும்வெள்ளாட்டிறைச்சியுப்புக்கண்டம்
நீடும்வெள்ளுள்ளிநேரும்பச்சைப்பயர்
கூடும்பத்தியங்குறிக்கவேயுண்டிடே. (எ௰௯)

குழந்தை மாந்தம் பதினெட்டுக்குங்கியாழம்.

உண்டபோதுமூறையும்பாலகர்கட்கு
அண்டமாந்தமலரியேயோடுதற்
கண்டங்மத்திரிகருதுந்துளசியாம்
இரண்டுமேயிலையியம்புநல்மேனியே. (எ௨௰)

மேனிசெம்பருத்தியிலையோர்புடி
ஆடாதோடைஅரியவொருபிடி
தானிக்காயுடன் தனிப்புளிச்சாதமும்
வானியோமம்வகைக்குப்பிடியோடே. (எ௨௧)

எடுத்துக்கோஷ்டமெழிலானதிப்பிலி
தொடுத்தபத்திரிதொன்றுமிளகுடன்
கொடுத்துக்கியாழம்குறிக்குமிருவேளை
கெடுத்தமாந்தங்கிளறிபறக்குமே. (எ௨௨)

ஒருகால் ஒருவிரை வீக்கத்திற்குமெழுகு.

பறக்குமேயொருகால்வீக்கம்போவதற்
கிறக்குலிங்கங்கெடியகற்பூரமும்
திறக்கமானதோர்தேர்ந்திடுகெந்தகமும்
சிறக்கத்தேனில்தெளிவாயரைத்திடே. (எ௨௩)

அரைத்துமெழுகாயானதோர்காசெடை
முரைத்துமண்டலமுற்றும்பொசித்திட
திரைத்தவாதமுந்தீராப்பெருநோயும்
விரைத்துப்போமெனவிளம்பினர்தேரனே. (எ௨௪)

நீரடைப்புக்கு பற்பம்

தேறன்வாக்குத்திசைநான்கும்பொய்யாது
வேறேபற்பம்விரும்பியுரைக்கிறேன்
கூறவுப்புக்குறிக்கும்வெடியுப்பு
ஆறமூளையிலன்பாய்ப்பதிந்திடே. (௭௨௫)

பதிந்துமேபுடம்பத்துமேபோட்டிடு
சதிந்துப்பற்பந்தபவளநிறம்போலாம்
கதிந்துவெண்ணெயில்காலையில்தானுண்டை
வதிந்துநீர்தடைவாரிப்பறக்குமே. (௭௨௬)

பறக்கும்பத்தியம்பகரும்முள்ளங்கியாம்
திறக்குமேசுரைதேர்ந்ததுளிருடன்
நிறக்குமோருடன்நேர்ந்தபாலேடன்னம்
சிறக்கநித்தியந்திரப்பிபாசித்திடே. (௭௨௭)

சகல மேகத்திற்கும் கெந்தக தண்மை.

பொசித்தகெந்திபுகலுமிருபலம்
நசித்தமாந்துளிர்நவிலுமிருபலம்
வசித்தபாண்டத்தில்வலுக்கவேசில்லிட்டு
மசித்தகசபுடம்வாகாகம்பூண்டிடே. (௭௨௮)

பூண்டபோதுபுகழ்ந்திடும்பற்பமாம்
நீண்டுவெண்ணெயில்நேராயருந்திட
கூண்டுமேகங்குறிக்குமூலரோக
மாண்டுபோமெனவகுத்ததுவுண்மையே. (௭௨௯)

மகா ஆனந்தவயிரவம்.

உண்மைசூதமொடுங்குவெண்காரமும்
தண்மைநாவிதனிச்சாதிலிங்கமும்
வெண்மையானவிரும்புமநல்மிளகும்
திண்மைமேபழச்சாற்றிலரைத்திடே. (௭௩௰)

அரைத்துயிஞ்சிச்சாரதிலுமிருசாமம்
குரைத்துக்குன்றிபோல்குமுறவுருட்டியே
நிரைத்துப்பஞ்சாங்கம்நேருங்கியாமத்தில்
கரைத்துமாத்திரைகடுகக்கொடுத்திடே, (௭௩௧)

கொடுத்திடவதிசாரமுந்தானறும்
அடுத்துமந்தமுமக்கினிமந்தமும்
கடுத்தமேகனவாயுமிகவறும்
விடுத்துப்போமெனவிளம்பினர்தேறனே. (எ௩௨)

சகலமேகக்குளிகை.

தேறன்மேகத்திற்மாங்குளிகைகேள்
கூறசூதங்குறிக்குமொருபலம்
ஆறப்பிரேகம் அரியதிருமாலும்
தீறகெந்திதிறமாயெடுத்திடே. (எ௩௩)

எடுத்துமேசலாசத்துசரிசமன்
அடுத்துத்தேனிலழகாயரைத்துமே
கொடுத்துக்குன்றிபோல்கூறயுருட்டியே
விடுத்துமண்டலமுற்றும்பொசித்திடே. (எ௩௪)

பொசித்தபோதுபுகலுமிருமலும்
நசித்தவீளைவிலுங்கமீளை
வசித்தரோகம்வகுக்குங்கபரோகம்
பசித்தமந்தமும்பதைத்துமேநீங்குமே. (எ௩௫)

காசரோகத்திற்கு திட்பிலிநெய்.

நீங்குவேறும்கிலப்பனைநன்னறி
தீங்கில்லாததிறமானசந்தனம்
பாங்குமல்லிபகருமெலுமிச்சம்
ஓங்குமுந்திரியுற்றசீரகமே. (எ௩௬)

ஆமேரோகணிஅரியவாளமுடன்
தாமேதிப்பிலிதாக்குஞ்சரியெடை
போமேபேசும்பாலிலரைத்துமே
நாமேநெய்படிநவிலயெடுத்திடே. (எ௩௭)

எடுத்துமேபதமெழிலாகக்காய்ச்சியே
அடுத்துமண்டலமன்பாகக்கொண்டிடே
தொடுத்தகாசந்தொடரும்நீலகாசம்
கடுத்தநீர்க்காசம்கதறியேயோடுமே. (எ௩௮)

ஓடும்பத்தியமோங்குமுயற்கறி
ஆடும்வெள்ளாட்டிறைச்சியுப்புக்கண்டம்

நீடுங்காடைநெருங்குங்கவுதாரி
தேடுமிதுகளைத்திறமாகவுண்டிடே. (எ௩௯)

மகா ஏலாதி கிருதம்.

உண்டபோதுமொருங்குமகாலேதி
அண்டுமேபசும்பாலினறுநெய்யும்
தொண்டுமேலந்தொடருமதுரமாம்
கண்டுபரங்கிகடிகிச்சமனெடே. (எ௪௰)

எடுத்துச்சந்தனமெழிலானவெள்ளறு
கடுத்துத்தேனில்கலந்துமேகாய்ச்சிட
முடுத்துக்கிருதமுடுகுஞ்சமபதம்
தொடுத்துமண்டலந்தோன்றவருந்திடே. (எ௪௧)

அருந்தும்போதுமறையுமேலெரிவு
திருந்துகிரந்திதிராப்பிணியறும்
பொருந்துமழலைபோற்றுமிருமலுங்
குருந்துரோகக்குடியோடிப்போகுமே. (எ௪௨)

உள்மாந்தைக்கு நெய்.

போகுமாந்தைபுகலுமவனிவிட்
டேகுமருந்துதெளிவாயுரைக்கிறேன்
ஆகுதோடைஅரியவழுதலை
பாகுசங்குபகருமதுரமே. (எ௪௩)

மதுரமேலம்வகுக்குங்கருஞ்சீரம்
சதுரக்கள்ளியின்தாக்குமுளைத்துளிர்
விதுரமானவிரும்புவாய்விளங்கம்
முதுரமாய்நெய்யில்முசியவேகாய்ச்சிடே. (எ௪௪)

காய்ச்சிமாயன்கணேசற்குபூசித்து
ஆய்ச்சிநெய்யிலரியபணவிடை
மூச்சிடாமல்முசியவோர்மண்டலம்
பேச்சுதப்பாமல்பிரியமாயுண்டிடே. (எ௪௫)

உண்டபோதுமுறையும்பீனிசமும்
கண்டமாலைகருதியரோகமும்
அண்டவாயுமறுவிதகுலையும்
கொண்டுபோமெனகூறியதுண்மையே. (எ௪௬)

மகா கதலிப்பழக் கிருதம்.

உண்டையானவுறையுங்கதலிச்சாற்
தண்மையானதனிநெல்லிச்சாறெடை
வண்மையாம்பசுப்பாலுமோரிடை
கன்மையானகடைசாகயேத்திடே. (௪௬௭)

எத்திவாளமிணங்குலவங்கமாம்
ஆத்திமாஞ்சிலவறையுந்திரிபலே
நேத்தியானநெருங்குஞ்செங்கழுநீர்
பூர்த்தியாகப்பொருந்தவேகாய்ச்சிடே. (௪௬௮)

காய்ச்சியேகுருகருதும்பதாம்புயம்
மூய்ச்சிடாமல்முழுதுங்கால்மண்டலம்
நீய்ச்சுநீக்கியேநோய்வருந்திடில்
போய்ச்சுசகலநோய்பொருந்தவேகண்டிடே. (௪௬௯)

கண்டுதேரையன்கருதுமுறையிது
பண்டுபோல்மேனிபகரவிறுகுமாம்
உண்டுனித்தமுடனேசீனிபால்கொள்
விண்டுமேனிவிறுகியேதங்கமே (௪௭௰)

நன்னாரி கிலப்பனை நெய்.

தங்கமாகிலப்பனைநன்னாரிவேரும்
எங்கும்போற்றுமெழிலாங்கருங்காலி
புங்கம்பட்டைபுகலுமொதியனும்
சங்கம்பட்டையுஞ்சார்வாய்ச்சமனெடே. (௪௭௧)

எடுத்துநெய்யிலெழிலாகக்காய்ச்சியே
அடுத்துமண்டலமன்பாகவுண்டிட
தொடுத்தபாண்டுவுந்தோற்றுநீரிழிவும்
கடுத்தமேகங்கதறியேயேகுமே. (௪௭௨)

அசுவ கெந்தி ராசாங்க நெய்.

ஏகுமேயசுவகெந்திநெய்முறை
ஆகுஞ்சிவதையரியசாரணையாம்
பாகுதுஞ்சியும்பகருஞ்சங்குமுடன்
வாகுமிளகுணகையாகக்கூட்டிடே. (௪௭௩)

கூட்டிக்கூவிளங்குறிக்கும்பாதிரியாம்
ஆட்டும்வாகையரியபேராமல்லி
சூட்டுநெல்லியுந்தோன்றுங்கருஞ்சீரம்
பாட்டுதப்பாமல்பாங்காய்நிறுத்திடே. (௭௫௪)

நிறுத்துமேபசும்பாலிலரைத்துமே
கறுத்திடாமல்கருகியேநெய்தனில்
முறுத்திடப்பதம்முத்தீயும்மேத்தியே
உறுத்துமேகுருபோற்றியணைத்திடே. (௭௫௫)

அணைத்துவீசனெழிலடிபோற்றியே
வணைத்துமண்டலம்வாகாய்ப்பணமெடை
பணைத்துக்காலையில்பாங்காயருந்திடில்
கணைத்தசகலநோய்கதறியேநீங்குமே. (௭௫௬)

குழந்தைகளுக்கு அமிர்த சஞ்சீவிநெய்.

நீங்கும்வேலிநினைக்குநன்னாரியாம்
பாங்குபச்சைபகருமாதண்டனும்
தீங்கில்லாததோர்தேர்ந்தரசஞூரம்
ஆங்குபாலையதிமதுரங்கூட்டே. (௭௫௭)

கூட்டிப்பற்படம்கூறும்பேரீச்சமாம்
ஆட்டியொன்றாயரியநறுநெய்யில்
மூட்டிபாண்டமுசியவேகாய்த்துமே
காட்டிதீபமாங்கர்த்தனுக்கேற்றிடே. (௭௫௮)

ஏற்றிமண்டலமெழிலாயருந்திடில்
காற்றுபோல்மேனிகடிகிபெருத்திடும்
தூற்றுரோகந்தொடர்ந்துவனமேகுந்
தேற்றியிம்முறைதெளியவுரைத்ததே. (௭௫௯)

கலியாண பூசினிக்காய்நெய்.

உரைக்குங்கூழ்ப்பாண்டமுலகிற்புதுமைகேள்
திரைக்கும்பூசினிச்சாறுமிருநாழி
வரைக்குங்கிழங்குச்சாறுமொருநாழி
குரைக்குமேபசும்பாலுஞ்சமன்தூக்கே. (௭௬௰)

தூக்குஞ்சீனிதுடியாமதிறமாதி
தாக்குமொன்றாய்த்தளறக்கலக்கியே

போக்கில்லாமல்பொருந்தாறுநெய்யில்
வாக்குதப்பாமல்வகைபாண்டமூட்டிடே. (எசுக)

மூட்டித்தீயில்முதிராமல்காய்த்திடு
ஆட்டிமண்டலமன்பாகவுண்டிடில்
நீட்டுரோகம்நெருங்குங்கபரோகம்
பூட்டுபோல்வழிபோலப்பறக்குமே. (எசுஉ)

பறக்குமென்பதுபாடியதுண்மையே
பறக்குமென்பதுபாடியதென்குரு
பறக்குமென்பதுபாடியசெந்திரு
பறக்குமென்பதுபாடியதேறனே. (எசுங)

தேறன்வாக்குத்திசையெட்டும்பொய்யாது
தேறன்வாக்குசிறந்தசித்தர்கட்கு
தேறன்வாக்குபொய்யாதுமெய்யாகுங்காண்
தேறன்வாக்கிதுதெளிந்துவறைத்ததே. (எசுச)

சூதகவாயுவுக்கு மகாலிங்காதி மெழுகு.

அறையுஞ்சூதகமறிவைவெளிப்பட
திறையுங்கூமுட்டிச்சாறுமிருநாழி
நிறையும்வெள்ளுள்ளிநேரும்நொச்சிலிச்சாறு
பறையும்முப்புப்பகர்ந்திடகாலேடே. (எசுரு)

எடுத்துலிங்கமெழிலானவோமமும்
தொடுத்துகாயந்தொடரும்வெண்காரமும்
கடுத்தமிளகுகருதுநேர்வாளமும்
தொடுத்தவெட்டுடன்தோன்றக்கிளறிடே. (எசுசு)

கிளறிதூதுளங்காய்போலுருட்டியே
களறிமண்டலகவிலவருந்திடில்
களறிகுன்மமுங்கருதியசூதகம்
உளறிகானகமுழன்றோடிப்போகுமே. (எசுஎ)

போகும்பத்தியம்பொன்னுங்கணிக்கீரை
ஆகும்கத்தியரியமுருங்கையாம்
பாகுங்கத்திரிபகருமிறைச்சியாம்
ஆகுமென்றேயறைந்தனர்தேறனே. (எசுஅ)

திரேக நமச்சலுக்குத் தேய்ப்பொடி.

தேறன்பஞ்சாங்கந்தேர்ந்தகசகசா
கூறக்கஸ்தூரிக்குறிக்கும்பச்சைப்பயற்
நீறக்காய்ச்சுநெருக்குமுழுந்துடன்
திறவேபழச்சாற்றாலரைத்திடே. (௭௬௯)

அறைத்துக்காலையிலன்பாகப்பூசிடில்
நிறைதப்பாமல்நெருக்குமுச்சிதனில்
கறைபட்டிலுப்பைகழறுங்களிமண்ணும்
குறைதப்பாமலேகுளித்துமேமூழ்கிடே. (௭௭௰)

மூழ்கும்போதுமுறையுஞ்சொரிரோகம்
ஏழ்குங்கிரந்தியெழும்புஞ்சிறங்குகள்
நீங்கும்நமச்சல்நேரும்பொடிப்புண்கள்
வீழ்குங்கானகம்விரைந்தோடிப்போகுமே. (௭௭௧)

போகும்பத்தியம்போத்தும்மிறைச்சியாம்
ஆகும்பால்தயிரன்னமுடனெய்யாம்
பாகுமலுவாபால்கோவாதன்னுடன்
வாகுமுறைப்படிவாகாகவுண்டிடே. (௭௭௨)

கண்டரோகத்திற்கு மருந்து.

உண்டபோதுமுறையுங்கண்டரோகம்
அண்டமதூரம்யானைதிப்பிலியும்
திண்டுசுக்குத்திறமாமிருசீரம்
கொண்டகோஷ்டம்குறிக்கிமிளகெடே. (௭௭௩)

எடுத்துவாலுமிளகுபெருங்காயம்
அடுத்தபத்திரியானவிடையமாம்
தொடுத்தகாரமுந்தோற்றுவாய்விளங்கம்
கடுத்தகடுகுகருதுந்தான்றிக்காயே. (௭௭௪)

காயுமாசக்காய்கருதுமமுக்கரா
தோயுங்காட்டெருமைப்பால்சரியெடை
வாயும்பேய்ப்புடல்வளருங்குராசானி
தேயுஞ்சூரணந்திரளப்பொடித்திடே. (௭௭௫)

பொடித்துச்சூரணம் புகலந்திரட்டியே
நடித்துச்சீனியில்நன்றாய்க்கலந்துமே
வடித்துமண்டலவன்பாகவுண்டிடே
கடித்தரோகங்கதறியேயோடுமே.

கிராரோகத்துக்குச் சூரணம்.

ஓடுஞ்சூரணமுற்றவெள்வேலுடன்
ஆடுமகிலினமுக்குராசந்தனம்
தேடுமேலந்திசமூங்கவுழ்தும்பை
நீடுரோகணிநெருங்கச்சமன் றூக்கே. (எஎஎ)

றூக்கிவேம்புடன் றுய்யநறுவலி
வாக்குதான்றியும்வரையும்புல்லுருவி
ஆக்குஞ்சோனைப்புல்லறியவெள்ளறுகுடன்
பாக்குநெரிஞ்சிபாங்காய்சமனெடே. (எஎஅ)

எடுத்துச்சீனியிலெழிலாய்ச்சமனெடை
அடுத்துக்கடிகையானதோர்சூரணம்
தொடுத்துமண்டலந்தோன்றவருந்திடில்
நடுத்தரோகம்நடுங்கியேயோடுவே. (எஎகூ)

காதெழுச்சிக்குத் துயிலம்.

ஓடுங்காதிலுறையுமெழுச்சிக்கு
தேடுநன்றுதிறமாமிளகுடன்
கூடுமொன்றாய்க்குலாவியேகரய்த்திடில்
ஓடுமெழுச்சியொதுங்கிக்கீழ்நீங்குமே. (எஅ௰)

நரம்புவலிக்கும் தொடைசுளுக்குமருந்து.

நீங்குமேனிநெடியவகிலுடன்
டாங்குதேத்தான்பகருங்கற்றாழையாம்
ஓங்குகொன்றையுயருங்குறிஞ்சாவும்
தீங்கும்புள்ளடிதேய்ந்தவழிஞ்சியே. (எஅக)

அழிஞ்சிவாழையறியகொள்ளெள்ளுண்ட
கொழிஞ்சிவேளைகுலாவுந்தைவேளையாம்
பழிஞ்சியோமம்பகருஞ்சித்தரத்தி
நழிஞ்சிகொன்றைநறுவிளிசேர்த்திடே. (எஅஉ)

சேர்த்துவெள்ளுள்ளிசிறந்தவனிச்சையாம்
பார்த்துமூலிபகருமூசானியாம்
கோர்த்துபத்தியங்கூறுநீலோர்பலம்
ஆர்த்துநெரிஞ்சியரியவெங்காயமே. (எஅங)

காயமொன்றுய்கருதியிடித்துமே
ஆயப்பாண்டமறுபடிநற்சலம்
தூயக்கியாழுந்துகளவிறுத்துமே
காயமேனிகழறவேபூண்டிடே. (எஅச)

பூண்டபோதுபுகலும்நரம்பிசு
நீண்டக்குத்தம்நெருங்குந்தொடைரோகம்
ஆண்டுமுடக்குஅறியபிறவலி
கூண்டரோகம்குடியேகிப்போகுமே. (எஅரு)

போகும்பத்தியம்புகலும்தூதுவேளை
ஆகும்வெள்ளுள்ளிஅறியவிஞ்சியுடன்
பாகும்வெள்ளாட்டிறைச்சியுப்புக்கண்டம்
வாகுங்காடைவகுக்கவருந்திடே. (எஅசு)

திராரிணத்துக்குச் சிலெயெண்ணே.

அருந்தும்போதுமறையுஞ்சிலெயெண்ணே
குருந்துகெந்தியுங்கூறநர்ப்பூரமும்
பொருந்துமேரசம்போற்றுங்குங்கிலியம்
திறந்துசீனந்திறமாய்ச்சமன்கூட்டே. (எஅஎ)

கூட்டிசிங்கிகுலாவுமொருபலம்
ஆட்டிமுக்கண்ணரியபாலிலறை
நீட்டியெண்ணெநெருங்கவேகாய்த்துமே
பூட்டிமாயன்புகல்பதம்போற்றிடே. (எஅஅ)

போற்றித்தீபம்புகலக்கொடுத்தபின்
ஆற்றியெண்ணெயரியரோகங்கட்கு
தூற்றிமண்டலத்தோன்றவேபூசிடில்
காற்றுபோல்ரோகங்கதறிப்பறக்குமே. (எஅகூ)

பறக்குமென்றல்லோபாடினர்சித்தர்கள்
பறக்குமென்றல்லோபாடினதுண்மைகாண்

பறக்குமேயிதுபகர்ந்ததுபொய்யல்ல
பறக்குமென்றல்லோபாடினர்தேரனே. (எசுய)

தேரன்வாக்குத்திசையெட்டும்பொய்யாது
தேரன்வாக்குத்திரிலோகம்மெய்யாகும்
தேரன்வாக்கிதுதேர்ந்தகுருமொழி
தேரன்வசைமொழிதெளிந்துவரைந்ததே. (எசுக)

காக்கைவலிக்குமெழுகு.

அறையுங்காக்கையலரும்வலிகட்கு
நிறையுமேலம்நெருக்குநேர்வாளமும்
குறையும்லிங்கங்குறிக்குஞ்செவ்வீரமாம்
வறையும்நன்மிளகுசமன்தூக்கிடே. (எசுஉ)

தூக்கியொன்ருய்துவளப்பொடித்துமே
தாக்கிக்கல்வந்தனியக்கலந்துமே
போக்கில்லாமல்புகலுநற்றேனதில்
வாக்குதப்பாமல்வாகாயரைத்திடே. (எசுங)

அரைத்துமெழுகுவறியதோர்குன்றிதான்
நிரைத்துமண்டலநேராயிருவேளை
பரைத்துபத்தியம்பாங்காயருந்திடில்
கரைத்துமேவலிகாக்கைதானேடுமே. (எசுச)

ஒடும்பத்தியமொடுங்கும்பசும்பயற்
தேடும்வவ்வாலுதேர்ந்தமுதலையூண்
கூடுமேபுருகாடைசுருவுமுண்
கோடுமேகருங்கோழியருந்திடே. (எசுரு)

காலில் நீரேற்றந்தீர சூரணம்.

அருந்தும்சோகுமலருமருந்துடன்
திருந்துமுள்ளியுந்தேர்ந்தகத்திரியு
பொருந்துகுறட்டைபோற்றுங்கரத்தையாம்
குருந்துநாணலுங்குறிக்குஞ்சமனெடே. (எசுசு)

எடுத்துஅச்சமுமெழிலானவேலியும்
தொடுத்துநெருஞ்சில்தோன்றுமரசுடன்
கொடுத்துப்பாளைகுறிக்கும்ரோகணியாம்
அடுத்துச்சுண்டியமுக்குறுசேர்த்திடே. (எசுஎ)

சேர்த்துசூரணஞ்சிறக்கவிடித்துமே
பார்த்துச்சீனில்பகருஞ்சரிசெடை
கோர்த்துக்கலந்துகூறுமேராமண்டலம்
தீர்க்கவுண்ணநீர்தீரப்பறக்குமே. (798)

சிரசில் நீரேத்தத்திற்குத் தயிலம்.

பறக்கும்மரைபகரும்முககரா
சிறக்குங்கைச்சோலந்தேர்ந்தகஸ் தூரியாம்
திறக்குபீனசம்நேர்ந்தவாடாதோடை
திறக்குமேருக்குதேர்ந்தமதுரமே. (799)

மதுரஞ்சாதிக்காய்மன்னிலாமுள்ளியும்
சதுரம்பூலாவுந்தாக்குக்குங்கருஞ்சீரம்
விதுரமானவரும்புநாகவல்லி
அதுரமேனியழகியபாலெடே. (800)

எடுத்துபெள்ளெண்ணெயெழிலாக்கலந்துமே
அடுத்துப்பரண்டம்அறையவேகாய்த்திடில்
தொடுத்துமூன்றுநாள்தோன்றவொருமுறை
தடுத்திடாமல்தனிப்பதமுழ்கிடே. (801)

முழ்குல்போதுமுழையுந்தலைவலி
நீழ்கும்பாய்ச்சல்நெருங்குங்கபாலநோய்
வீழ்கும்பீனசம்விடுபட்டுயேகிடும்
ஆழ்கும்ரோகமலறியவேயோடுமே. (802)

இடுப்பு வலிகுடைச்சலுக்குத் தயிலம்.

ஓடுமேவலியோங்குங்குடைச்சலும்
காடுவசம்புகருதும்முக்கரா
தேடுமதுரந்தேர்ந்தரோகணியும்
நீடுமல்லிநெருங்குமனிச்சையே. (803)

ஏகுமெண்ணெயெழிலானவாமணக்
காகுமென்றுய்க்கலந்துமேகாச்சியே
பாகுமேனியில்பகரவேபூசிடியில்
போகுமேல்வலிபொருந்தப்பறக்குமே. (804)

காலையில் வயிறெரிச்சலுக்குக் கியாழம்.

பறக்குங்கியாழம்பகரும்பசும்பயர்
சிறக்குநெற்பொரிதேர்ந்தபேய்ப்புடல்
நிறக்குமதூரநேருநற்சீரகம்
சிறக்குமேலமுஞ்சிராய்ச்சமன் றூக்கே. (805)

தூக்கிச்சீனியில்துய்யவொருபலம்
தாக்கிக்கியாழந்தனிக்காலையுண்டிட
போக்கில்லாமல்பொருந்துமெரிச்சலும்
வாக்குதப்பாமல்வரைந்தோடிப்போகுமே. (806)

போகும்பத்தியம்போற்றுமெலுமிச்சம்
ஆகுமேபுளியாரைமரியனும்
பாகுசீனியும்பகருந்திராட்சமாம்
வாகுமல்விவகுக்குநல்லிஞ்சியே (807)

இஞ்சிமாதுளமியம்பும்புதியனை
கொஞ்சுஞ்சீயக்காய்குறிக்குங்கொழுந்துடன்
வஞ்சிவெள்ளாட்டிறைச்சியுறுப்புகள்
மிஞ்சிடாமல்மிகப்பதமுண்டிடே. (808)

இரத்தபித்தத்திற்கு சூரணம்.

உண்டபோதுமுறயுநற்சீரகம்
அண்டமேலமறையுமதூரமாம்
கண்டுசாதிக்காய்கழறும்லவங்கமாம்
யண்டுபூசினிபகருமிலுப்பையே. (809)

இலுப்பைவேலியியம்புநற்கோஷ்டமாம்
கிலுப்பைவித்துங்கெடியானநெற்பொரி
வலுப்பையானவகுக்குந்திரிகடு
சீலுப்பைதானறியுநேராய்ச்சமனெடே. (810)

எடுத்துவாலுமிளகுபற்பாடகம்
தொடுத்துமேயதிதாரம்நற்கொன்றையாம்
கடுத்துவிடவங்கருதுங்காளமுடன்
தொடுத்திப்பிலிதோன்றச்சமன்கூட்டே. (811)

கூட்டிமுள்ளியுங்குறிக்குமக்கிராகாரம்
நீட்சசந்தனநெருக்குமகிலுடன்
பூட்டித்தேக்குபுகலுநற்சிந்திலும்
ஆட்டிச்சூரணமன்பாய்ச்சமன்சேரே. (812)

சேர்த்துச்சூரணஞ்சிறந்தநற்சீனியாம்
பார்த்துச்சரியெடைபண்பாய்க்கலந்துமே
ஆர்த்துமண்டலமன்பாகக்கொண்டிடில்
காத்துப்பித்தங்கதறியேநீங்குமே (813)

சகலவாயுக்குஞ் சூரணம்

நீங்குதிப்பிலிநேரும்பெருங்காயம்
ஓங்குமரசுவுறையுநிலப்பனை
தீங்கில்லாததோரதேர்ந்தபறங்கியும்
பாங்குசுக்குபகருமிளகெடே (814)

எடுத்துவாமணக்கொட்டைநல்நெல்லியும்
தொடுத்துசிவதைதோன்றுமாடாதோடை
கடுத்தகைச்சோலங்கருதுமமுக்கரு
விடுத்தநொச்சிவிரும்புஞ்சமன்தூக்கே. (815)

தூக்குமத்திதுலங்குநிலப்பனை
வாக்குக்காசுதனிச்சுருள்நன்னரி
போக்கில்லாமல்பொருந்துசமனெடை
வாக்குத்தப்பாமல்வாகாயிடித்திடே. (816)

இடித்துச்சூரணமெழிலாகத்தூற்றியே
வடித்துசர்க்கரைவாகாய்க்கலந்துமே
படித்துமண்டலம்பாங்காயருந்திடில்
நடித்துவாய்வுநடுங்கியேயோடுமே. (817)

வேர்வைக்குத் தயிலம்.

சொல்லுமாந்தர்தொடரும்வேர்வையற
புல்லும்வெட்டிவேர்புகலும்விலாமிச்சு
கொல்லன்கோவைகுறிக்குந்தண்ணீர்மிட்டான்
வில்லைப்பத்திரிவிரும்புஞ்சமஞ்சரிதூக்கே (818)

தூக்கியொன்றாய்துளவவிடித்துமே
தாக்கில்லெண்ணெய்தனிப்பதங்காச்சியே
போக்கில்லாமல்பொருந்துமோர்மண்டலம்
வாக்குதப்பாமல்வாகாகமுழ்கிடே (819)

மூழ்கும்போதுமுறையும்விஷவேர்வை
நீழ்குந்தாகநெருங்கும்வறட்சியும்
ஆழ்கும்பித்தமலறியேநீங்கிடும்
வீழ்குமென்றுவிளம்பினர்தேறனே. (820)

வாயில் நீர்சுரக்க

தேறன்கூர்மொழிதிசைநான்கும்பொய்யாது
கூறமருந்துகுறிக்குமதுரமாம்
தீறமதுரம்தேர்ந்தவக்கிராகாரம்
ஆறநெற்பொரிஅன்பாயெடுத்திடே (821)

எடுத்துச்சுக்குமெழிலானசிரகம்
அடுத்தயேலமறையச்சமனொடு
தொடுத்தமயிலினிறகிற்சமன்சேரு
விடுத்தகஸ்தூரிவிளம்பக்கழஞ்சிடே (822)

கழஞ்சிச்சூரணங்கருதப்பொடித்துமே
வழங்குநற்றேனில்வாகாய்குழைத்திடு
தழங்கும்நாவினிற்றூக்கத்துவளச்செய்
முழங்குமேசலமுதிரச்சுர்க்குமே (823)

. சகலமேகங்களுக்கும் இரசகெந்த ராசாங்கமெழுகு.

சுரக்கமாந்தர்க்குச்சூட்டுமருந்துகேள்
திறக்கமாம்பூரந்தேர்ந்தரசமுடன்
சிறக்கச்சிங்கியுஞ்சேர்ந்தவரிதாரம்
முறக்கமாந்தமனோசிலைகூட்டிடே (824)

கூட்டிலிங்கங்குலாவுபால்துத்தமாம்
நீட்டுந்துருசுநேர்ந்தகாசுக்கட்டி
பூட்டுமசத்துபுகலும்படிகாரம்
ஆட்டுஞ்சரக்குவரியவரான்றூக்கே (825)

தூக்குந்தாளிசந்தோன்றுங்கருஞ்சீரம்
தாக்குஞ்சிவதைதான்றிக்கடுக்காயும்
போக்கில்லாதபொருந்துந்திரிபாடு
வாக்குத்தப்பாவலம்புரிக்காய்ச்சேரே (826)

சேர்த்துமுஷ்டிசிறக்கும்வாலுழுவை
கோர்த்துமல்லிகொடிவேலிமுள்ளியும்
ஆர்த்துமதுரமறையுங்கோஷ்டமுடன்
சேர்த்துவிடையஞ்சிறப்பாகத்தூக்கிடே (827)

தூக்கிச்சந்தனஞ்சிறக்குஞ்செஞ்சாந்தமும்
தாக்கில்வங்கந்திப்பட்டைகசகசா
நோக்கியரத்தைநுவலும்பேராமுட்டி
தேக்குநாவப்பூசிறந்தகொடிவேலி (828)

வேலிநொச்சிவிளங்குங்குப்பைமேனி
மூலியத்திமுழங்கும்பெருமருந்
தாவிரோசனைதாக்குமழிஞ்சிலாம்
கோலியேசமன்கூறச்சமவனடே (829)

எடுத்துமேசரக்கெழிலாயிடித்துமே
தொடுத்தகுரு ணந்தோன்வடிசேய்து
படுத்தபாண்டத்திற்பாலால்புட்டாவிசெய்
சடுத்தமாகவேசாரவுலர்த்திடே (830)

உலர்த்தியானபின்னுரைக்கும்ரசகெந்தம்
அலர்த்தியேமுலைப்பாலால்சுத்திசெய்து
சரத்துமேயுரல்சாற்றவேகொட்டிடு
பலர்த்தபனைவெல்லம்பாங்காய்சரிகூட்டே (831)

கூடடுமேயுரல்குலாவியிருபபிலக்
காட்டிசாமங்கருதும்பனிரண்டு
தீட்டுமேகைவிடாமலிடித்திடு
பூட்டுமண்டம்புகலுமிரண்டிடே (832)

இட்டேசாமமியல்பாயிடித்திடு
திட்டமாய்சுண்டைக்கயளவீதமாம்

கட்டமாககருதவுமண்டலம்
சட்டமாயுண்ணச்சகலநோய்போகுமே (833)

போகுஞ்சூலைபுகலுமறையாப்பு
ஏகும்வெள்ளையியலுங்கொறுக்குடன்
சாகுமாந்தைசலவெடிசூலை
நோகுங்கண்டமாலைபிணிநீங்குமே (834)

நீங்கும்பவுத்திரநெருங்கும்வெடிசூலை
ஓங்குங்குஷ்டமுறையுமதுமேகம்
ஆங்கும்புற்றுஅறையும்பொறைவீச்சு
தீங்குசிலந்திதெறித்தோடிப்போகுமே (835)

போகும்வாளைபொருந்தும்விலாவாளை
ஆகுங்கிரந்தியரியகிரந்தியாம்
பாகும்சிலந்திபகருமிடிப்புண்ணு
ஏகுங்காணகமெழிலாய்ப்பறக்குமே (836)

பறக்குமென்றல்லேபாடினரென்குரு
பறக்குமென்றல்லோபகர்ந்தர்சித்தரும்
பறக்குமென்றல்லோபாலித்தர்முனிவரும்
பறக்குமென்றல்லோபகுர்ந்தனர்தேறனே (837)

திரிதோஷசுரத்திற்கு கியாழம்

தேறன்வாக்குத்திசைநான்கும்பெய்யாது
கூறக்கியாழங்குறிக்குந்திரிதோஷம்
ஆறமருந்துவரையுரேன்மாந்தர்க்கு
தூறபத்படந்தோன்றுஞ்சிறுதேக்கே (838)

தேக்குப்பத்திரிசிறந்தசிந்திலொடு
தாக்குகாஞ்சொரிதக்கதூரமாம்
நோக்கும்கன்னரிறுவலுந்தாளிசமாம்
பாக்குஞ்சரக்குபகருமுத்தக்காசே (839)

பாக்குசுக்குபகர்ந்திடும்பேய்ப்புடல்
தாக்குபத்திரிதணிநாகப்பட்டையாம்
போக்கும்மரத்தைபுகலுந்தேவதாரம்
நோக்குமிளகுறுவலச்சரிகூட்டே (840)

கூட்டியென்றுய்க்குமுறவிடித்துமே
மாட்டியேசலமதிப்பாய்ப்படியிடு
நீட்டியெட்டிலொன்றுகவேகாய்ச்சிடு
பூட்டிமூவாறுவேளைக்கொடுத்திடே (841)
கொடுத்திடச்சுரங்குமுறப்பறந்திடும்
அடுத்துச்சேத்தும்மறையும்வாதசுரம்
தொடுத்தபித்தமுந்தொடர்ந்தசுரமாறும்
விடுத்தபத்தியமேவும்புளிதள்ளே (842)

சிரோஸ்நானதயிலம்.

தள்ளடாதிரிதோஷமுந்தானறும்
விள்ளடாசிரோதயிலமுறைக்கிறேன்
கொள்ளடாமதுரங்கருஞ்சீரகம்
உள்ளடாகஸ்தூரிமஞ்சள்சேர்த்திடே (843)
சேர்த்திடுமிருவேலிதேவதாரம்
ஆர்த்திடும்லவங்கம்லவங்கப்பட்டை
கோர்த்திடுமரக்கும்மகிற்பட்டையாம்
தூர்த்துமறுகன்றேன்றச்சமன்றூக்கே (844)
தூக்கியேபசும்பாலாலரைத்திடு
தாக்குமெள்ளெண்ணெய்தனியவிருநாணி
போக்கில்லாமற்புகழ்பதங்காச்சிடு
வாக்குதப்பாமல்மண்டலமுழுகிடே (845)
மண்டலமுறைமதிப்பாய்முழுகிடில்
கண்டதேசுரங்கதறியலறிடும்
அண்ரநோயுமகலப்பறந்திடும்
விண்டுதேறன்விரும்பியுரைத்ததே (846)
உரைத்தாராயுறுவேதமிதுவாகும்
நிரைத்தபொருள்கள்நெகிழுமிக்காவியம்
திரைத்தமாந்தர்க்குத்தெளிவாயுரைத்தது
வரைத்ததேறையன்வாக்குபொய்யாதிதே (847)

நீர்ப்பாய்ச்சலுக்கு ஆக்கிராண நாசிகாசிட்சை.

பொய்யாதையர்புகலுந்தேறன்மொழி
ஐயாமாந்தர்க்கறைகிறேனுக்கிராணம்

மெய்யாஞ்சாரம்விரும்பும்பவச்சாரம்
செய்யாரேவலின்சின்னியெடுத்திடே (848)

எடுத்துப்பூநீறெழிலானசுன்னமும்
தடுத்திடாமல்தனியப்பொடித்துமே
கொடுத்திடாமல்தனியப்பொடித்துமே
முடித்தநீர்ப்பாச்சல்முனைந்தோடிப்போகுமே (849)

போகுமேசிரநோயின்றலைவலி
ஏகுங்காணகமிடமிட்டொதுங்கிடும்
வாகும்பத்தியம்வறையுஞ்சிதளமாகா
தேகுமாமுனிதெளியவரைந்ததே (850)

குருமுடிக்கவேதை

(வேறு)

அறைந்தசாந்திரமெல்லாமன்பாய்ச்சொன்னேன்
அரியகுப்பிசெந்தூரம்சட்டிவைப்பு
நிறைந்துநின்றநீற்றினமும்புடத்திலேற்றி
நீள்காச்சல்கற்பூரந்தயிலமொடுகுழம்பு
திறைந்துநின்றகுளிகைநெய்யுஞ்சூரணமும்பெடியும்
தெளிவானகுருவழலைகூடுமானால்
பறைந்நின்றமருந்தெல்லாம்பலமாய்ச்சுத்தி
பரிவாகக்குருமுடிக்கப்பதமறியார்தானே (851)

அறியாமற்பாடிவைத்தோநூல்கடோறும்
அங்கங்கேவழலையுப்புவனேகங்கோடி
குறியானவிந்நூலுற் குறிப்பாய்பாரு
குருமுடிக்கஅளவுநிறைபுடமெரிப்புநன்ய்
நெறியானபாடிகநூல் கிட்டச்சென்றால்
நிசமானகுருமுடிப்பான்மருந்துஞ்சித்தி
பிறியாமல்பங்குனிசித்திரையிரண்டில்
பிலத்தவுவர்வினைநிலத்தைப்பார்த்துவாரே (852)

வாரிவந்துநாழிக்கியெண்ணுநீர்தான்
வரிசையாய்ப்பானைதனிலேற்றிக்கொண்டு
சேரிறுத்துமறுபாண்டத் தடுப்பிலேற்றி
சிறப்பாகவெரித்தபின்ரவியிற்காச்சி

பாரமுரியிற்கலக்கியிறுத்துக்காசசி
பரிவானதேசிநீரில்முன்போற்காச்சி
சிரிதுதான் ௨வுக்குமூன்றுசுத்தி
சிதறவிடயெத்தொழிலுஞ்சித்தியாமே (853)

(வேறு.)

சித்தியென்றுமேசெப்புவார்மாமுனி
நித்தியபூசைநிலைத்திடச்செய்வர்காண்
புத்திமேவும்புகலுங்குருமுறை
வெத்திகொள்ளவழலைமுடிப்பதே (854)

முடிப்பார்பங்குனிமுற்றிலுஞ்சித்திரை
நடிப்பார்வளர்தேதிநாட்டில்லறியார்கள்
தடுத்துமவ்விடந்தாண்டிநடந்தாலும்
தொடுத்தபூமியின்றேற்றமறியாரே (855)

அறியார்வழலையறையும்மண்மேலைத்தான்
தெரியாதவண்ணார்தெளிந்திடுங்கற்பாறை
சிறியபூம்பாறையைத்தேறவேகாச்சுவார்
அறியவேமாந்தர்க்கறைந்தார்கள்சித்தரே (856)

வேறு.

சித்திக்குங்கற்கோட்டைக்கல்லைத்தட்டி
சிறுமணியாய்ப்பொருக்கியமுரிவிட்டுக்காச்சி
வற்றினபின்கழுவிப்பணம்பால்விட்டுச்காச்சி
வளமாகரவியுலர்த்திதேசிநீரில்
சுற்றிவற்றியாறினபின்கிரியிலூதச்
சுன்னமுமாமொன்றுக்குநாலமுரிவார்த்து
பற்றுறவாய்க்கலக்கிவைப்பாய்காரோட்டில்தான்
பதனமாயார்க்குமிதைக்காட்டமற்றேனே. (857)

காணுமற்பட்சம்வைத்துக்கலங்காதேதெளிவிறுத்து
காச்சிவைக்கச்சிறுவுப்பாங்காட்டலாகா
ஊணுமற்கிரியுப்புவொன்றுக்குநாலு
உற்றசலம்விட்டிவற்றக்காச்சிப்பின்பு
கோணைமலெட்டுக்குகாலமுரிவிட்டு
குறுக்கியபின்தேதிநீர்படியேகாச்சி

காறுமல்மூன் றுப்புவகைக்கோபலமாய்
கனமாகச்சட்டியினிற்றேசிநீர்விட்டுலர்த்தே. (858)

உலர்த்தியேகல்வத்தில்விட்டரைக்கக்கேளு
உத்தமமாந்தாளிச்சாற்விட்டுஆட்டி
அலர்த்திலேவில்லைபிடித்துலாத்துக்கொண்டு
அதன்மேல்கீழுவர்வைத்துச்சீலைத்தி
மலர்த்தியேமணல்குவித்துமேற்புடத்தைப்போடு
மைந்தனேயாறினபின்னெடுத்துவில்லை
குலர்திடமேகல்வத்திலிட்டரைக்கக்
கூறுகிறேன்முப்பூரம்வீரம்காரஞ்சேரே (859)

செருண்ணமருந்தினிடைகழஞ்சிரண்டாய்
சீரானதுளிவிட்டுத்தூள்போலாட்டி
வாரதில்வெடியுப்புச்செயநீர்விட்டு
வளமாகநாற்சாமம்யனம்போலாட்டி
பாருபதம்வருநேரம்வழித்துவில்லை
பருவமாய்ப்பிடித்துலர்த்திபகரக்கேளு
காருநீகற்சன்னத்தைச்சட்டியரைவாசி
கையாலேசெம்மியுவர்பயுத்துமேலே. (860)

பரத்திவில்லைவைத்ததின்மேலுவர்ப்பூவிட்டு
பார்மகனேசட்டிரெப்பத்தின்னஞ்செமபி
சிரத்தையொடுசட்டிமேல்மூடிச்சதுவாக்கி
சிறப்பாகமண்ணரைதுச்சீலைசெய்து
வரத்தையோடடுப்பேற்றியெரிக்கும்போது
வாலையொடுவயிரவர்க்கும்பூசைவிடுவித்து
துரத்திவோய்மற்றதெல்லாம்பேதனமாய்ச்செய்து
துறமேறிக்கமலம்பின்காடாக்கினியாமே. (861)

ஆமேநாற்சாமந்தானெரித்துமைந்தா
ஆத்தாலைப்பூசித்து அடுப்பைவிட்டிறக்கி
மாமேதான்மேற்சட்டிதிறந்துவில்லைதன்னை
பதனமாயெடுத்தப்பாகண்ணிற்பாரு
வாமேதான்முப்பூவின் குரு வின்மாக்கம்
வையகத்தில்வைப்பறியார்பாரேநீதான்
தாமேதான்பெரிதானசாஸ்திரமுஞ்சொன்னேன்
தவறுது குருவழலைசூட்சமிந்நூலே. (862)

குருவாகவாயிரலைந்தைஞ்ஞூற்றைப்பாடி
குகையில்வைத்தேன்யாவருக்குங்காணமற்றுன்
பெரியோராமகாரிஷிகள்பொதிகையில்வந்து
பேசிநம்மோடிருக்கையிலேநூலைக்கண்டார்
அறிவானசாஸ்திரந்தானெட்டும்நன்றாய்
அன்பாகத்தெரிந்தெடுத்துத்தண்டஞ்செய்தார்
நருவானசாத்திரந்தானுட்டுளோர்க்கு
நலமாகவிந்நூலும்நன்னூலாமே. (863)

(வேறு.)

நன்னூலாகும்நவின்றிடுங்காவியம்
இன்னூல்போலுரையார்க்கன்னூலிலும்
பன்னூல்வயித்தியம்பாடினேனுயிரம்
சின்னூலன்னூறுந்தெளியவறைந்ததே. (864)

அறைந்தமாமுனியாயுறுவேதாம்
சிறந்தவாயிரத்தைஞ்ஞூறுகாவியம்
நிறைந்தமருந்துநெருங்கவவைத்துமே
திறைந்தகுட்சங்கள்தெரியுமருந்திதே. (865)

(வே று.)

மருந்தென்றவகைக்கெல்லாம்குருவில்லாட்டால்
வாதமுதல்வயித்தியமும்பலியாதப்பா
செறிந்தகுருமுன்செய்தோன்சுருக்கோயில்லை
சூட்சந்தானின்னூலில்குருதானப்பா
அறிந்துகுருசெய்யாட்டால்மருந்தோயில்லை
அகடங்கள்செய்துவருஞ்செந்தூரங்கள்
திரிந்துவருமருந்துக்குருகூடிற்றானல்
தீருமேநோய்களெல்லாஞ்சித்தியாமே. (866)

தித்திக்குமிந்தநூல்முனிரிஷிகள்கையில்
தெரிந்தெடுத்தசாஸ்திரந்தானெட்டுமீந்தோம்
வெத்திக்குநூல்களிலுமதிகசூத்திரம்
விதம்பலவாய்ப்பாடிவைத்தேன்கோர்வைமெத்த
முத்திக்குவித்தானமார்க்கமெல்லாம்
முயர்ச்சியாயாவருக்குந்தெரியவைத்தேன்

பத்தியாய்மாந்தாகளுக்கிந்த நூலை
 பகர்ந்திட்டேன்தேறவாக்குண்மைதானே (867)
உண்மையாமிந்நூலில்தழலைமுப்பு
 உலகத்தில்வயித்தியர்தானறியமாட்டார்
பண்மையாய்நோய்களெல்லாமனிதர்க்கப்பா
 பார்க்கறியாக்கன்மர்வக்துமருந்துகொள்ள
சண்மையாநூல்பார்த்துருமுடித்துக்கொள்ள
 சண்டாளநோய்களெல்லாந்தவறிப்போகும்
திண்மையாய்ப்பூமில்நோய்தீர்ப்போமென்று
 தீவினையால்முன்கர்மந்தீர்க்கவறியாமர. (868)
தீருதற்குக்கருக்கடையொன்றுரைத்தேன்
 திறமான மருந்துபற்பசெந்தூரங்கள்
பாருகர்மந்தீர்த்துநிகொண்டாயானால்
 பறந்துபோம்நோய்களென்றுபாடினேமெல்லாம்
சேருசிவபூசையொடுமந்திரசக்கிரம்
 சிதம்பரத்திலட்டகர்மந்திரும்பாரு
ஆருமறியாதகர்மநிவர்த்திவகைசொல்வோம்
 அருமையிந்தநூல்தனையகலவிடலாகாதே (869)

குழந்தைகட்கு சுகபேதிமெழுகு.

க லி வெ ண் பா.

அகலுங்குழந்தைகட்கு அறைவேன்சுகபேதி
நிகலுங்கடுகுரோணிநேர்வாளம் புகலவே
பேர்ற்றுமேயாமணக்குபுகலும்வசம்புடனே
தூற்லுஞ்சிறுதேக்குதுய்யாலும் நேர்த்தியதாம்
பாரில்விளைசிரகமும்பகருநற்சிந்திலுடன்
ஊரில்விளையறுக்குமோமமுடன் நாரியரே
பொங்குபொரிகாரமுடன்புகழுங்கடுக்காயும்
இங்கிதமாமேலசியியம்பிடவே பங்குதனில்
காற்பலமாஞ்சூரத்துக்கருதுநிலவாவாரை
வேற்பலமாங்கொடிவேலிவிளம்பிடவே யுற்பனமாய்
கூறும்பன்னீர்ப்பூவுடனேகிறிக்கும்ரேவல்சின்னியுடன்
தேறுஞ்சாக்குதெளிசமனுப் பாரினிலே

காடிதனிற்சுத்திசெய்துகறும்பசும்பாலில்
தேடிபுட்டாவியுடன்செய்தபின்பு நீடியதால்
சொல்லுபசும்பாலதனில்தோன்றவரைநாற்சாமம்
வெல்லுஞ்சீனிகற்கண்டுவிளம்பிட்டே தொல்லுலகில்
எட்டிலொருத்திப்பாமிசைந்தாஷ்தாளியுளன்
சட்டமுடனற்றேனுஞ்சாற்றிடவே திட்டமதாய்
ஓங்கும்பதமாயரைத்துவிலகிற்சிறுபாலருக்கு
தீங்குசெய்யாதிந்தசுகபேதி பாங்குடனே
காலைச்சிறுசுண்டக்காய்கழறவருந்திடுகில்
மாலைப்பொழுபேதியதுமாசறுக்கும் பாலர்கட்கு
பத்தியமோயிலைபகருமிச்சாபத்தியமாம்
சத்தியமாமெனமுனிவர்சாத்தினர் நித்தியமும்
வாதப்பண்டந்தானகற்றிவறையும்விரோசனபேதி
சீதப்பண்டஞ்சேர்க்காதேதெரிவையரே நீதமுடன்
செப்பமுடன்காந்தருக்குத்தெளிவாயுற்தேமிது
ஒப்பமுடன்கைம்முறையுரைத்தாரே. (870)

ஒருதலைவலிக்கு நசியாக்கிராணம்.

கலிவிருத்தம்.

உரைத்தமாமுனியொருதலைநோய்தீர
திரைத்தலிங்கமுந்தேர்ந்தநவச்சாரம்
கரைத்தபூரமுங்க துமஞ்சிலை
அரைத்துமேயெருக்கன்பாலாலாட்டி (871)
ஆட்டியேசாமமன்பரயரைத்திடு
நீட்டுமேசிலைநெடியவேபூசிடு
கூட்டுமேரவிகுலாவியுலர்ந்தன்பின்
பூட்டுமேதிரிபுகலத்திரிததிலே. (872)
திரிக்குவாக்கிராணஞ்சிறக்கப்பிடித்திடில்
தெறித்ததலைவலிதிறமாகநீங்கிடும்
குறிதப்பாதுகுறிக்குமருந்திது
சரியதாகவேசாற்றினர்தேறனே. (873)

மன்மதபாணபுருஷோத்தம லேகியம்.

கலிவெண்பா.

தொல்லுலகில்மாந்தருக்குந்தோத்தும்புநஷோத்மங்கேள்
அல்லலில்லாவிவ்வைவாநெருங்கிடவே வெல்லும்படி

சூரத்துசிவிதைவேருந்தோற்றுமிருவேலியுடன்
சாரற்றமுட்காவேளைசாற்றிடவே நேரொத்த
நன்னாரிசார்வெருந்நலமானகோரையுடன்
பன்னாரிமுக்கூத்தாரிபகருஞ்சங்கன் சின்னியுடன்
மூலமாங்கற்றாழை பூழங்கும்பிரபின்மூலம்
தாலமாம்நுணாப்பட்டைசாற்றிடவே வேலமாம்
பட்டையரகின்பட்டைபகரும்பூரிப்பட்டை
கட்டையறுநன்கருவாப்பட்டையுடன் திட்டமுடன
பொருமந்து ட்டையுடன்பேசுமுருங்கைப்பட்டை
அருநெல்லிப்பட்டையழிஞ்சிற்பட்டை குருமுறைகேள்
செவ்வியமாங்கொடிவேலிசிறந்தபேராமுட்டியுட்டியுடன்
அவ்வியமாந்துத்தியதிங்மூலம் ஒவ்வியமாம்
வேம்பினிடபட்டைவரும்புஞ்சீந்திற்றண்டு
தீம்புசெயாமுட்டிசித்தாமுட்டி சோம்புடனே
பூனைக்காஞ்சோரிபுகழுந்தழுதாழை
ஆன்பால்விட்டேயவித்தெடுத்து சீனமுடன்
மரமஞசள்பரங்கியுடன்மணக்கும்பஞ்சாங்கமுடன்
திறமானதூதுவளையெனுமிச்சங் காயுடனே
கண்டமாங்கத்திரியுங்கருந்தூதுவளையாம்
அண்டமுடன்ழுதண்டமறைந்திடவே தண்டுசேர்
புகழானஆணிலைபாம்போற்றும்பனைக்கிழங்கு
நிகழுஞ்சாடமாஞ்சில்தாளிசமாம் இகழில்லா
குருவேரா—ாதோடைகுறிக்குமைசாலக்கிடியாம்
கருள்ளிப்பிரமியிலைகருந்துளசி மருவில்லா
கடலாஞ்சிப்பட்டையுடகாட்டுமசுவகெந்தி
திடமானபுள்ளடியுஞ்சிறுமூலம் தடமான
சிவனாரின்வேம்புடனேசிறக்கவொருபலமாய்
தவமானபாண்டத்திற்றூன்பொதிந்து நவமாக
பத்துப்படிசலத்தைபாங்காகக்கொட்டியேதான்
சத்துயிறங்கிடவேதான்காச்சி சத்தியமாய்
கியாழத்தைப்பதனஞ்செய்கேளுஞ்சூரணதினுசு
நியாயமாய்க்கர்க்கவகைநிகழ்த்துகிறேன் உபாயமதாய்
தென்னம்பூபன்னீர்ப்பூதோர்ந்தமாவரம்பூ
கன்னல்நாம்மஸ்வரன்பூகணக்குடனே நன்மையாய்

செப்புந்திரிகடுகுசேர்ந்ததிரிபலாதி
ஒப்புமெனுமிச்சம்வேருடனே மெய்ப்புடனே

நிலத்தின்பனைக்கிழங்குநேரும்சுவகெந்தி
கலப்பைகிழங்குகருஞ்சீரம் புலப்புடனே

சிறுதேக்குசோம்புமல்லிசேர்ந்தகுராசாணியோமம்
மறுவாக்கில்லாதமணப்பூவாம் குருவாக்கு

கானகத்தினற்சிரங்காட்டுவெந்தயமுடனே
போனகத்தினேலம்புகர்முள்ளி மானேகேள்

ஜாதிககாய்ஜாஜீராசாற்றும்லவங்கமுடன்
சோதியாஞ்சாம்பிராணிப்பூவுடனே மேதினியில்

முல்லியாம்லவங்கமுறையும்லவங்கப்பத்திரி
வல்லியாம்பட்டைவால்மிளகு மெல்லியரே

அன்னாசிப்பூவுமறையும்பூனைக்காலிவித்தும்
சன்னாசிப்பூண்டுடனேசண்பகமும் மின்னேகேள்

மேவுஞ்சலாம்பிசுனுமேன்மையுள்ளகேக்குவிரை
தாவும்பேதாணுஇஸ்கோல்விரையாம் பூவுலகில்

பாத்துமேருமஸ்துபகருந்துத்திவிரையாம்
ஆர்த்துமாவாரையருமுருங்கை நேர்த்தியதாய்

காட்டுமுருங்கைவித்துகருதுமரசன்வித்து
நீட்டுமேயத்திவிரைநிலா ரையாம் தாட்டிகமாய்

ஆலந்துளசிவிரையறையுங்கஞ்சாவித்து
சாலம்பிசினுடனேசாற்றுகொத்தான் வேலம்பட்டை

கொத்தான்பத்திராட்சிகூறுஞ்சமுத்திராவும்
பத்தான்சூரிவித்துபருத்திவிரை சுத்தமதாய்

பூவரசின்பட்டைபுகலுஞ்சோசிவித்துடனே
நாவற்பட்டைசெம்பருத்திநெருஞ்சியுடன் பாவையரே

கூறும்விளாம்பிசினுங்குறிக்குமிலவம்பிசின்
வீறுமுறுங்கைப்பிசின்விளம்பிடவே சீருடனே

சிறுநாகப்பூவுடனேசேர்ந்தபீசுபந்து
கருவானதிராட்சிப்பழங்கூட்டி மருவான

பூமிசர்க்கரையுடனேபுகலுங்கருடங்கிழங்கு
தாமிதமாம்பேரீச்சங்காய்கூட்டி நேமமுடன்

ஏலரிசிதாளிசமுமெழலாமதிமதுரம்
கோலமுடனக்ரோட்டியக்காரம் சீலமுடன்

கூகைநீர்சதகுப்பைகுறிக்குலவங்கப்பத்திரி
வாகைபயருவாகைவறையுமதம் தோகையரே
கல்நாருகுங்குவமுங்கர்க்கடகச்சிங்கியுடன்
சொல்லுஞ்சலாசத்துவாயவிளங்கம் மெல்லியே
கார்போகவரிசிகழறும்ரேவல்சின்னியுடன்
ஓரிதழின்தாமரையுமொன்றாக நேரிழையே
சிந்திற்சர்க்கரைவகைக்குச்சிறக்கவொருபலமாய்
போக்குமுடன்சூரணித்துப்புகலக்கேள் ஏந்திழையே
சூரணத்தைப்பாசருக்காய்ப்புதனைஞ்செய்
காரணத்தைசொல்லுகிறேன்காரிழையே பூரணமாய்

இரசவகை.

பாடுகிறேன்முலிராம்பகருமருங்கைப்பூ
தேடுஞ்செவ்விளநீர்நெல்லிக்காய் தோடயமாய்
நீடுந்தேன்சாப்பாலுடனேநெருங்குஞ்செங்கரும்பும்ரசம்
தேடுந்தண்ணீர்விட்டான்பசும்பாலும் கூடியெழு
உத்தமனேகியாழமதையோங்கச்சுண்டச்சியேதான்
பத்தியுடன்ரசவகையைப்பாவிவிடு சத்தியமாய்
சீனிச்சர்க்கரையுடனேசிறந்தசூரணமயாவும்
தேனுநெய்யும்விட்டுக்கிளறிடவே மானேகேள்
பதமாமெழுகுபதம்பாங்காகக்கிண்டிடுகில்
நிதமாம்பச்சைப்பூரங்கஸ்தூரி சதமுடனே
சாம்பிராணிப்பூவுஞ்சாற்றும்பன்னீர்வாசமுடன்
தாம்பணிந்துலேகியத்தைத்தாணிறக்கி பாம்பணியும்
பரமனடிதாள்பணிந்துபகர்ந்திட்டலேகியத்தை
திரமுடனேயந்திசந்திமண்டலந்தான் கிரமமுடன்
தின்றுவரில்மாந்தருக்குத்திறமாமதகரிபோல்
என்றுபலங்குன்றுதியம்புற்றேன் பன்றியுடன்
பத்தியமோகாடைமகருமுடும்பாகும்
நித்தியமிறைஞ்சியுடன்பாலாகுஞ் சத்தியமாய்
கோழியுடன்முட்டைகுறிகருமயிலாகும்
பாழுடலும்பொன்னும்பாவையரே ஆழூயுடன்
விந்தாலுங்கேணியாம்விரும்புநாற்சாதியுடன்
அந்தமுடன்போகிப்பாயனங்கள்போல் சொந்தமதாய்

எந்நாளும்லீலையிலேயெழில்மாதர்சோர்வார்கள்
உன்னாலெல்லாங்கழிப்பாயுத்தமே   நன்னயமாய்
அரனெனக்குயிந்தமுறையாச்சியுமையாள்கொடுத்தாள்
திறமுடனேயந்நாளுந்துதி. (874)

வேறு.

கன்மத்தால்வந்தவினைதீராவிட்டால்
காயமழிந்தேபிறக்குங்கன்மநோய்வருகும்
சென்மத்தில்விந்துவிட்டுச்செனித்தவுடன்வருகும்
சிக்கிரமாய்நிவர்த்திசெய்துதீட்சைசெய்வாய்
மன்பத்திதுன்மார்க்கப்பாவிகள்தானாலே
பாராமற்பொருளறியார்பாழ்வினைக்கீடாவார்
கன்மத்தைநிவர்த்திசெய்யக்கடுகக்கேளு
கனத்ததயாநிதிகிடைத்தால்தருகாதுநோயே (875)

நோய்தீரத்தகதுடுதான்தங்கமோடு
நிலையானகாரீயமூன்றுந்தட்டி
வாய்தீர்த்தசிவசிதம்பரத்தைநன் ய்
வளமாகத்தங்கத்தில்வகையாயெழுதி
போய்தீர்த்தசித்தருபத்துநான்கும்
பூவுலகில்தானுடும்புதுமைமெத்த
நாய்போலேதிரிவார்கள்நாட்டில்மாந்தர்
நலமாகக்குருவறிந்துவடைத்திடாயே (876)

அடைத்தவினங்கணக்கோடியிரணவபீசாட்சரத்தை
அரைதோறும்பஞ்சாட்சரமடைந்துபின்பு
கடைத்தகுலம்சிவசத்திகணபதியும்
கனகபரமானந்திவைரவர்பீசம்
திடத்துடனேஅரிசத்திசூலமிட்டு
திரள்காமதம்பனத்தையுச்சாடணமாய்ச்சேர்த்து
நடத்தடாஐயாயிரயந்திரந்தான்
நலமாகவுருவதனைச்சொன்னோமநாமே (877)

வேறு.

நாமேகலசம்நவிலும்பதினாறு
ஆமேவரர்கமறையுபரவமாம்

காமேபொலியுங்கருதுவெள்ளாடாகும்
தாமேதேரையன்சொன்னமொழிபாரே. (878)

வேறு.

சொன்னமஞ்சள்தெர்ப்பையமல்வடையரிசி
சேர்ந்தபெரியென்னுருண்டைசர்க்கரையும்
வின்னமில்லாத்தேங்காய்ப்பழவர்க்கங்கள்
விருப்பமுள்ளசெய்யுட்பதினுசெல்லாந்தான்
சொன்னமுள்ளசாம்பிராணிகூடன்மாவிலையும்
சொகுசானகுருவேரும்வாடைகெந்தம்
நன்னயமாய்ப்பலகாரந்தயிரும்பாலும்
நலமானசொர்ணபுஷ்பமடைக்காயிலையே. (879)

இலையானமாப்பொடியும்நோக்கிப்பாரு
இதமாகக்கன்மவுச்சாடனத்தைப்பாரு
புலையானபெலியும்வஸ்துவைத்திட்டாக்கால்
பூரணமாய்க்கன்மமதுதீருமப்பா
கலையானவுச்சாடனமூலிகையோடு
கருவாகவிந்நூலிற்பாடிவைத்தேன்
சிலையானயித்தொழில்வித்தையெல்லாஞ்
சிறப்பாகமானிடர்க்குத்திறந்திட்டேனே (880)

வேறு

திறந்தமாந்தர்க்குத்தீரவுரைப்பேனுன்
துறந்தவாதமும்ஞானமும்யோகமும்
சிரந்தரமானநேருமாந்தரீகம்
சிறந்தவதர்வணதேவமுரைத்தோமே (881)

உரைத்தமூலியுபயகருமூலி
திரைததமூலியுஞ்சிறந்தவிஸ்மூலி
வரைத்தவெண்சாரைவகுக்குங்கருஞ்சாரை
குரைத்தமுப்பூவுங்கூதுஞ்சித்தாந்தமே (882)

வேறு.

சித்தாந்தமறிந்தபின்புவேதாந்தம்புகுந்தால்
சிவன்பாதங்கைலாயஞ்சேர்ந்தடைவரெடுக்க
வத்தாதவயித்தியந்தான்மருந்துவைக்குந்தொழில்கள்
வளருமந்த்ரமயேந்திரமும்வறலைகுருமுடிக்க

கொத்தானசாஸ்திரமுஞ்சூஸ்திரமும்பார்த்து
குணமானயினஞ்செயநீர்திராவகமுமிறக்க
அத்தானதொழில்வாய்த்தகுருவைக்காணோம்
அறிந்தவர்களறிவோமென்றுரையார்தாமே (883)

முறையானவயித்தியர்கள்பார்க்கவென்றால்
மீளாதபிணியாளனுடபேர்நாளுங்கேட்டு
பறையாதேயொருவருக்கும்வகைமூலியுண்டு
பகரக்கேள்வாதமுந்திவருமாதவாரம்
சிறைதொட்டாக்கால்வாடிநரிமிரட்டி
சிவரூபநிலித்தபிரான்மந்திரமோதி
குறையாமல்வேர்பிடுங்கிக்கொண்டுநோய்கள்
குறையெழுபத்திராயிரத்துக்கெல்லாம். (884)

வேறு.

எல்லாலோகமெழலாநவலோகம்
புல்லாமணக்குபோற்றும்பஞ்சாட்சரம்
சொல்லாவுருவுதோற்றுமாயிரமாம்
நில்லுங்குளிசம்நேரானநாசியே. (885)

வேறு-துத்தக் குளிகை.

நாசியேமயில்துத்தம்பலந்தானொன்று
காட்டிலுள்ளதாளகமும்பலந்தான்மூன்று
பேசியேகற்சுண்ணம்பலந்தானாறு
பிணங்கவேவாழைமரச்சாற்றாலரைத்து
தேசியாங்கையில்வைத்துச்சிலைசெய்து
சேர்த்துநீகுக்குடத்திலெரித்தெடுத்து
ஆகியேதுளசியிலைச்சாற்றரைத்து
அப்பனேமிளகுபோலானதொக்கும். (886)

ஆனதோருண்டைதனையிஞ்சிச்சாற்று
லருந்தவேசீதசுரமகலுமப்பா
போனதோரெருக்கம்பால்கோதுமைமாவில்
புகட்டிமேபுதைத்துவைத்துப்பின்பெடுத்து
காணகுத்துச்சதுரக்கள்ளிப்பாலிலாட்டி
கையடைபோல்தட்டியேநெய்யிற்பூசி

தானமாமடைசுட்டுவைத்துக்கொண்டு
சாப்பிடுவாய்கழற்பருப்புவெல்லம்நெய்யே (887)

நெய்யாகுஞ்சோறுடனேமோருமுண்ணு
நேர்த்தியாய்ப்பாண்டுகாமாலைபோகும்
நையுமேகெந்தகமும்காட்டுப்பாகல்
நற்கிழங்குகடுக்காயுஞ்சமனாய்க்கூட்டி
கையினாற்செம்பிலைச்சாற்விட்டுஆட்டிக்
கதிக்கவேநீசேர்த்துதன்னிலாட்டி
மெய்யாகவுருந்தளவுவுண்டைசெய்து
வெய்யில்வையாதெடுத்துநீநிழலுலர்த்தே. (888)

உலர்த்தியதோர்குளிகைதனைத்திரிகடுகிலிட்டால்
ஓடும்பதின்மூன்றுசன்னிசுவாசகாசம்
பெலர்த்திட்டபாண்டுவுடன்கிராணிவாய்வு
பேரானபுண்ணுபதினெட்டுகுட்டம்
துளைத்திட்டயெழுவகைசுவாசகாசம்
கருக்கானவற்புதமாம்வாதந்தீரும்
மலர்த்திட்டுப்போகாமலின்னங்கேளு
மகத்தானசுரக்குளிகைவணங்கிச்செய்யே. (889)

வணக்கமுடன்துத்தமைந்துபிரதமொன்று
மயிலாகுந்துருசுவொன்றுநாபிமுக்கால்
இணக்கமுடன்தாரமொன்றுகூடச்சேர்த்து
இயலானபாகலிலைச்சாற்றாலரைத்து
கணக்குடனேபயரளவுவுண்டைசெய்து
கியாழம்விஷ்ணுகாந்தியிலையுரைத்து
பிணக்கொன்றுமில்லையப்பாசுரங்களெல்லாம்
பேசாமலோடிவிடுமபேணிச்செய்யே. (890)

பேணியேயிர்தமுடனப்பிரேகஞ்சேர்த்துப்
பிசகாமற்சமன்கூட்டிமருக்கொழுந்துச்சாறு
ஏணிபாபிருவேலிச்சாறுக்கூட்டி
இதமாகத்தானரைத்துக்கடுகுவுண்டை
திணிவாகவிடாச்சுரமும்போகவேண்டுந்
துடிப்பாகவிருவேலிநீசுத்தண்ணீர்
ஆணியாமுண்டைதனையுரைத்துக்கொள்ளு
அஞ்சிவிடுந்தோஷசுரமானொருக்கஞ்சாரே. (891)

வேறு.

சாறுமிரதங்கெந்தகமுந்தாக்கும்நாபிமனோசிலையும்
வேறேயாகவெண்காரம்விளங்கும்வகைக்குவோர்கழஞ்சு
கூறுவதற்குயெட்டெடையாங்கூட்டுமிளகுபொடிசெய்து
திரவடித்துவடிகொண்டுதின்னப்பண்விடைசூரணமே. (892)

வேறு.

சூரணமாம்வெற்றிலைபில்மடித்துவுண்டு
சுகமாகவென்னீர்தன்குடிக்கத்தீரும்
காரணமாய்ப்பாண்டுவுடன்சோகைதீரும்
காமாலைகுன்மமுடன்வறட்சிதீரும்
வாரணமாம்வலிப்புடனேயிசுப்புதீரு
மகத்தானகுளிர்காச்சல்மாறிப்போகும்
பூரணமாம்பின்னையுமோர்பித்தந்தீரும்
புகழானகுளிகைரதம்புகலக்கேளே. (893)

வேறு.

இரதங்கெந்தகம்வெகாரமேவுந்தாரமனோசிலையும்
மருவுந்தாபரபற்பமுடன்வண்மைநிப்பிலிமிளகுடனே
உரிமைநொச்சிக்கண்டங்காலியோங்குமாடாதோடையிலை
பெருகுசாற்றால்தானரைத்துபேணிப்பயரளவுண்டைசெய்யே. ()

வேறு.

செய்துமாயன்திருவடிபோற்றியே
நைதுமேநிழல்கவிலவுலர்த்திடு
கொய்துமேயிளம்பதமாயிடித்திடு
பெய்துசிசாவிற்பேணிப்பதஞ்செய்யே. (895.)

வேறு.

செய்தவுண்டைக்கனுபானந்தேனேசர்க்கரையிஞ்சியிற்கேள்
ஐயாகுழையாச்சுவாசமற்றுவானவிளையிருமல்சுரம்
வெய்யுக்குன்மம்பிரளியுடன்மிகுந்தசுரவகைதானனைத்தும்
உய்யவிடமுமில்லையென்றுவோடிப்போகுங்கண்டாயே. (896)

கண்டேயிதற்குப்பத்தியந்தான்கருதுந்துவரையரைக்கீரை
அண்டர்புகழுமிஞ்சிசுண்டியாகுமென்றார்தேறையனும்
தொண்டர்புகழும்பராபரனார்சுகிர்தபாதம்போற்றியபின்
மிண்டிவினைபோஞ்சுராங்கிஷத்தான்மிகுத்தவதிசார்ந்தீர்ந்திடுமே. ()

திரும்நெல்லிதிப்பிலியும்திக்கோரொன்றுமுக்கழஞ்சு
பாருகெந்திநாபியுடன்பகறுவோரொன்கழஞ்சாகச்
சேகுமிஞ்சிச்சாரரைத்துத்தெளியுங்குன்றிப்பிரமாணம்
நேராயுலர்த்தியிஞ்சிலுடநிகழும்வியாதியினிகேளே. (898)

கோளீர்சுத்திபபிரமேகங்கிளர்ந்தசன்னிபதிமூன்றும்
நாளுமுடவில்லாதம்பலநன்றாய்த்திருந்தப்பாது
ஆளுமாவின்பாலுடனேயரிசிகூடத்தான்போட்டு
மூளும்பசிக்குத்தான்கஞ்சிமுன்னேயுரைத்தமொழியிதுவே. (899)

வே று.

மொழிந்தவாயுறுதேவமிதுவாகும்
அழியுமேனிக்ககலும்தணியற
வழியுந்துறையும்வகுக்குமிந்நூலிது
மொழயுமாமுனிமுறையாய்வகுத்தே. (900)

(வே று.)

இதுவேகேளுவெண்காரமிரதமனோசிலிமத்தவிரை
பொதுவாம்நாபிவகைகழஞ்சுபோற்றுந்திரிகடுகறுகழஞ்சு
மெதுவாந்தேசிச்சாறரைத்துமீறுங்குன்றிப்பிரமாணம்
அதுவாக்தேசிச்சாறிலிடவானசுரங்களகன்றிடுமே. (901)

அண்டசுரக்குளிகை.

அகன்றரேகணுதிரிகடுவானவிலுப்பைப்பூவுடனே
புகன்றகோழிதன்னதனிற்புகழுமஞ்சட்கருவெடுத்து
அகன்றவிதுவுஞ்சரிசமனுயர்ன்முலைப்பால்விட்டரைத்து
இகன்றசுண்டைக்காயளவுயிஞ்சிமுலைப்பால்குணமாமே (902)

குணம்ாந்திப்பிலிசுக்குடனேகூட்டுமிளகுகடுகுடனே
மணமாங்காயமோமமுடன்மறக்காதிபபிலிக்கட்டையுடன்
தணலாமிஞ்சிக்சாற்விட்டுதாங்காதரைத்துமுழுங்கிடவே
இணமாம்வாய்வுமிருமலரும்எல்லாச்சுரமும்விட்டேகும். (903)

வேறு-இருமலுக்குச்சூரணம்.

ஏனுமேகற்கடகச்சிங்கிதேக்கு
இதமானதிப்பிலியுமமூர்தந்தான்றி
போகுமேசுடாமாஞ்சிசுக்குகோஷ்டம்
பொருந்தியசீதார்வமூதிலையுமிளகுயிந்து

ஆகுமேதூவேளைகண்டங்காலி
யடுத்தநெல்லிப்பருப்புடனேபொரியுங்கூட்டி
வாகுபெறவறுத்துநீபொடியதாக்கி
வளமாகத்தேனிலுண்ணவிருமல்தீரும். (904)

சுரங்களுக்குச் சிந்தாமணிக்கியாழம்

தீருமேசுக்குடனேசிந்திகூட்டி
திறமானயிருவேலிவிலமிச்சோடு
பாருயிருநாழிநீரெட்டொன்றாக்கிப்
பதறாமல்திப்பிலியைவறுத்துக்கொண்டு
சேருநீகியாழத்தின்மேலேதூவி
செலுந்துவாயிருநேறங்கியாழந்தன்னை
மாறுமேசுரங்களெல்லாம்விட்டேபோகும்
மயக்கமுடன்தாகமெல்லாமாறிப்போமே (905)

வேறு.

சுரங்களுக்குப்பூபதிகியாழம்.

போமேதான்றிகடுகுநெல்லிபோற்றுந்தாமரையிலவங்கம்
ஆமேகொன்றைத்தோலுடனேரியகழஞ்சுக்கோரொன்று
நாமேசொன்னோமிருநாழிநல்லநீரில்வெந்திறக்கி
தாமேதிப்பிலிதூவியுண்ணத்தாங்காச்சுரமுந்தாங்காதே. (906)

வேறு.

சண்டமாருதக் கியாழம்.

தாங்காததாமரையின்கிழங்குச்சாறு
சம்மட்டிமதுரமுடனோமங்காயம்
பங்கமில்லாநன்னாருவேருமிந்து
பகரிலுப்பைப்பூவுடனேசமனதாக
சிங்காரமானதொன்றிருகழஞ்சு
சேரவேகாய்ச்சிநீயெட்டொன்றாக்கி
பங்கமில்லாத்திப்பிலிமேற்பொடியைத்தாக்கி
பாலனையாய்க்கொள்ளசுரம்பாழதாமே. (907)

இதுவுமது-வேறு.

பாழாய்ச்சுரமும்பாழிலேபகரும்வெளிவிட்டேகுதற்கு
நீழாய்க்கிராம்புமதுயமுடனேருங்குங்கோஷ்டம்பேயப்புடலே

தாழாய்ச்சுக்குசிற்றரத்தைசாற்றுந்தேவதாரமுடன்
மீழாய்க்கியாழம்விரும்பியிடில்மீளச்சுரமுந்தான்போமே. (908)

போமேசுரமுந்திரிதோஷம்பொல்லாச்சன்னிபதின்மூன்றும்
ஆமேபித்தாற்பதுவுமறையும்வாதமெண்பதுவும்
வாமேசேத்துமந்தொண்ணூறும்வளையும்சாத்தியபிணியாகும்
போமேமுனிவர்சித்தர்களும்புகன்றார்புகன்றார்புகன்றாரே. (909)

வேறு.

புகலுமாயுறுதேமிதுவாகும்
நிகலும்வசித்தியர்க்கெழிலாகுமின்னாலு
பகலுநட்சத்திரம்பானுநித்தல்போல
சகலமார்க்கமுஞ்சாற்றினார்தேரனே. (910)

தேரன்மாமுனிதெளியவுரைத்தநூல்
கூறவாயுறுகுறிக்குமிக்காவியம்
தீரமாந்தரேதியங்கிதிரிளாதிர்
சேரமாமுனிதெளிந்ததிந்நூலாமே. (911)

வேறு சுரக்களுக்கு சௌபாக்கியசுட்சிதக்கியாழம்.

ஆமேநெல்விகடுகுநான்றியாகுமழிஞ்சியிருவேலி
தாமேசொல்லுமிலாச்சிதமர்த்தந்தாமரைக்கிழங்குடனே
ஓமேயோரொன்றிருகழஞ்சுவொளியுநீரிலெட்டொன்றாய்
வேமேவெந்துகுடிப்பீராய்வெதுப்புமில்லைவிதியெனலே. (912)

விதிபேய்யென்னும்வெண்காரம்வேண்டுந்தண்ணீர்பதக்காக
கொதியாய்நீரைவெதுப்புடனேகூட்டிகொள்ளக்கொள்ளுமதிற்
சதிடாதிருந்ததெமக்கென்றுதாமமதியச்சாறுடனே
பதியேயல்லகாணுமிதுபாரீர்சுரமும்பையெனவே. (913)

வேறு.

ஸ்பயசுக்கும்வசம்புடன்
துய்யவறுகுதோற்றுங்கிராம்புடன்
நையரோகணிநவிலும்பீதாம்பரம்
செய்பமீகிபுஞ்சேரவிலுப்பைபே (914)

வேறு-சுரங்களுக்குரத்நசிந்தாமணிக் கியாழம்.

பையேசிறுகாஞ்சொறியுடனேபருத்தசிந்தில்தொடையிலையும்
செய்யசிறியவழுதலையுஞ்சேருஞ்சுக்குவன்னிவேர்
மையவிடிக்கவரைக்கழஞ்சுமருகக்காய்ச்சியெட்டொன்றாய்
கையவெடுத்துக்குடிப்பீராகில்கமனுஞ்சுரமும்நாடாதே. (௯௧௫)

சுரங்களுக்கு சர்வபாணப் பிரயோகக் கியாழம்.

நாடுஞ்சிந்தில்வேப்பீர்க்குநல்லநெல்லிகடுதான்றி
போடாப்புடலும்ரோசினையும்போற்றுஞ்சிறுகாஞ்சொறியுடனே
பாடாப்பகரும்பெருக்குரும்பைபதித்தபட்டைவேருடனே
கோடாதிருந்துயெட்டொன்றாய்க்குடிப்பீர்கழஞ்சிதேனுடனே, (

தேன்சிறுதேக்குநிலவேம்புதிப்பிலிகோஷ்டமுத்தக்காசு
வான்சிறுகாஞ்சிபற்பாடகமதிக்குஞ்சீந்திரத்திரிவேர்
நான்சிறுசுக்குநாழிநீர்நண்பாய்க்காய்ச்சியெட்டொன்றாய்
தானதுமூன்றுநாள்குடிக்கச்சகலசுரமும்வாராதே. (௯௧௭)

வாராய்சுக்குசீந்தியுடன்மருவும்வழுதலைகத்திரிவேர்
நாராங்கோஷ்டமுடன்கழஞ்சாநண்பாய்த்தகர்த்திருநாழிநீர்
பாராய்கியாழமெட்டொன்றாய்ப்பருகக்காய்ச்சிக்குடிப்பீராகில்
சீராய்வந்தசுரங்களெல்லாஞ்சிதறிப்போகுங்கண்டீரே. (௯௧௮)

இதுவுமது-வேறு மேகசுரந்தரக் கியாழம்.

கண்டபோதுகழறுஞ்சுரமற
விண்டுமேகூகைவிரும்புமறுகனும்
தண்டுளவந்தனிமரலைக்கொன்றையாம்
பண்டுமதுரம்பாக்காகக்கூட்டிடே, (௯௧௯)

கூட்டியொன்றாய்க்குலாவியிடித்துமே
நீட்டிப்பாண்டத்தில்நேராய்க்கியாழஞ்செய்
மூட்டிப்பஞ்சகாள்முறையாயருந்திடில்
பூட்டுமேகசுரம்பறந்தோடுமே. (௯௨௰)

ஓடுமேகமுறையுமரையாப்பு
நீடுங்கிரந்திநெருங்கும்பிரமியம்
வாடுஞ்புன்விரைவாதக்குடைச்சலும்
ஓடுமேபுளியப்புநீதள்ளிடே, (௯௨௧)

தள்ளடாபத்தியம்மூன்றுநாள்காரு
விள்ளடாமாணக்கெண்ணெயில்தான்முழு
கொள்ளடாபுளிகாடைகவுதாரி
அள்ளடாமுறையருமுனிகண்டதே. (கூ உ உ)

வேறு.

கண்டதொருசந்தனம்நன்னாரிவேரு
காட்டில்கொட்டக்கிழங்குசெய்கழுநீர்கோஷ்டம்
மிண்டதொருமுந்திரிகையிலுப்பைப்பூவு
மீருமலிருகழஞ்சுகூட்டிக்காய்ச்சி
சுண்டவேயெட்டொன்ருய்க்கியாழங்கொண்டாற்
சுரமனைத்தும்போவதுதான்சுருக்கேகேளு
பண்டுள்ளசுரங்களெல்லாம்பறந்துபோகும்
பாகமாய்க்கியாழமதைப்பகருவீரே. (கூ உ ௩)

வேறு.

பகருங்கியாழம்பிணியறவேபறக்குமாந்தர்க்குப்பாவையரே
நுகருங்கண்டுபறங்கியுடன்நோக்குஞ்சுக்குசதாவேரி
தகரும்வில்வம்நெற்பொரியாஞ்சாற்றும்புடலைபற்பாடம்
மகரப்பூவும்வெண்கடுகுமதிப்பாய்க்கியாழம்பருகியிடே. (கூ உ ச)
பருகிப்பழத்தின்முந்திரியும்பருத்தவிலாமிச்சிருவேலி
வரும்பேநிச்சுசரிசமனுய்மறுகக்காய்ச்சிக்குடிப்பீராய்
குருகிற்சுரமும்பரதாபங்குதித்துவோடிப்போவதற்கு
மருகிக்கியாழந்தான்கொள்ளுமருண்டுபோகுங்கண்டீரே. (கூ உ ரு)

வேறு.

கண்டதொருகியாழமொன்றுசொல்லக்கேளு
கசடானசுரம்விட்டுப்போவதற்கு
மண்டலத்துசீந்திபதினெங்கழஞ்சுகூட்டி
வகையானசுக்குநாற்கழஞ்சுகூடத்
தண்டாமலிடித்திடுவாய்துளதாகத்
தனிநீராயெட்டொன்ருய்க்கியாழங்கொண்டார்
